# உதயன்

Uthayan - A lively National Tamil Daily

வானிலை
மழையுடன் கூடிய வானிலை காணப்படும் இரவு வேளையில் குளிரான கால நிலை காணப்படும்.

சுடர்: 30 கதிர்: 074 வள்ளுவர் ஆண்டு: 2046 தை 25, ஞாயிற்றுக்கிழமை 08.02.2015


## இலங்கைக்கு உதவுவோம்

கூறுகிறது அமெரிக்கா



வொஷிங்ரன், பெப். 8
இலங்கையில் வெளிப்படைத்தன்மை மிக்க ஜனநாயக சமூகத்தை ஏற்படுத்த உதவும் என அமெரிக்கா உறுதியளித்துள்ளது.
அமெரிக்காவின் தேசிய பாதுகாப்புக்கான ஆலோசகர் சூசன்ரைஸ் இதனைத் தெரிவித்துள்ளார்.
அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் தேசிய

பக்.21

## கரைதுறைப்பற்று தேர்தலில் வேட்பாளர்கள் 10 பேர் விலகல்

யாழ்ப்பாணம், பெப். 8
கரைத்துறைப்பற்று பிரதேச சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் போட்டியிடும் 10 வேட்பாளர்கள், தாம் போட்டியிடப் போவதில்லை என்று தெரிவித்து தேர்தல்கள் திணைக்களத்துக்குக் கடிதம் அனுப்பியுள்ளனர்.
அதேபோன்று புதுக்குடியிருப்புப் பிரதேச சபைத் தேர்தலில் போட்டியிடும் பல வேட்பாளர்கள் தற்

பக்.21

## மனித உரிமை ஆணையாளருக்கு அரசு அழைப்பு

கொழும்பு, பெப். 8
அடுத்த மாதம் இடம்பெறவுள்ள ஜெனிவாக் கூட்டத் தொடருக்கு முன்னதாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சயிட் அல்ஹுசைனை இலங்கைக்கு வருமாறு புதிய அரசு அழைத்துள்ளது.
இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றம் தொடர்பான ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் அறிக்கை அடுத்த மாதக் கூட்டத் தொடரில் சமர்ப்பிக்கப்படவுள்ள நிலையிலேயே, இலங்கை அரசு இவ்வாறானதொரு அழைப்பை

பக்.21

## சிற்றுண்டி விலைகள் குறைப்பு

யாழ்ப்பாணம், பெப். 8
அத்தியாவசிய பொருள்களின் விலைகள் குறைக்கப்பட்டதையடுத்து சிற்றுண்டி உணவுகளின் விலைகளைக் குறைத்து விற்பனை செய்ய வியாபாரிகள் முன்வந்துள்ளதாக யாழ்.வணிகர் கழகத் தலைவர் இ.ஜெயசேகரம் தெரிவித்தார்.
அதன்படி யாழ்.நகரில் இயங்கும் ஏ தர உணவு

பக்.21

# ஆளும், எதிர்க்கட்சிகளின் ஆதரவுடன் நேற்று நிறைவேற்றப்பட்டது பட்ஜெட்

கொழும்பு, பெப். 8
இலங்கை நாடாளுமன்ற வரலாற்றில் முதன்முறையாக ஆளும் கட்சியினரும் எதிர்க்கட்சியினரும் இணைந்து அரசின் வரவு–செலவுத் திட்டத்தை அங்கீகரித்துள்ளனர்.
நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவினால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால வரவு– செலவுத் திட்டம் தொடர்பான விவாதம் கடந்த 3 தினங்களாக நாடாளுமன்றத்தில் இடம்பெற்றது.
இறுதி நாளான நேற்று ஜே.வி.பியின் அதிருப்தியாளரான அஜித்குமார விவாதம் மீது வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.
இதற்கமைய வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.
இந்தச் சந்தர்ப்பத்தில் ஐக்கிய தேசியக் கட்சி,சிறிலங்கா சுதந்திரக் கட்சி, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்,சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட ஜனாதிபதிக்கு ஆதரவாகச் செயற்பட்ட அனைத்துக் குழுவினரும் பட்ஜெட்டுக்கு ஆதரவாக வாக்களித்தனர். வாக்கெடுப்பு நடத்தக் கோரிய அஜித்குமார மட்டுமே எதிர்த்து வாக்களித்தார்.
ஆதரவாக 164 வாக்குகளும், எதிராக 1 வாக்கும் செலுத்தப்பட்டு 163 மேலதிக வாக்குகளால் இடைக்கால வரவு– செலவுத் திட்டம்

பக்.21

# கைதாவார் கோத்தபாய

## இராணுவப் புரட்சிக்கு முயன்றமையை அம்பலப்படுத்தினார் அமைச்சர் ராஜித



கொழும்பு, பெப்ரவரி 8
"ஜனாதிபதித் தேர்தலில் ஏற்பட்ட தோல்வியையடுத்து, எதிர்வரும் ஏப்ரல் மாதமளவில் இராணுவப் புரட்சி செய்யத் திட்டமிட்டிருந்த முன்னாள் பாதுகாப்புச் செயலாளர், இராணுவ அதிகாரிகள் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. விசாரணைகளின் பிரகாரம் அவர்களைக் கைது செய்யவுள்ளோம். அது மட்டுமல்லாது, அரசியலில் ஈடுபட்ட அனைத்து இராணுவ அதிகாரிகளையும் ஒட்டு மொத்தமாக இராணுவத்திலிருந்து இடைநிறுத்துவோம்."
இவ்வாறு சுகாதார மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.
அவர் 'உதயனு'க்கு வழங்கிய விசேட செவ்வியின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பக்.21

## விந்தனின் வீட்டின் மீது வெள்ளி இரவு தாக்குதல்

யாழ்ப்பாணம், பெப். 8
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு மாகாணசபை உறுப்பினர் விந்தன் கனகரட்ணத்தின் வீட்டின் மீது இனந்தெரியாதோர் தாக்குதல் நடத்தியுள்ளனர். அரியாலையிலுள்ள அவரது வீட்டின் மீதே இந்தத் தாக்குதல் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு 10 மணிக்கு மேற்கொள்ளப்பட்டுள்ளது.
இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் யாழ்.பொலிஸ் நிலையத்தில் நேற்றுக் காலை முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.
தாக்குதல் தொடர்பில் விந்தன் தெரிவிக்கையில்,
இரவு எனது பெயரைச் சொல்லிச் சிலர் அழைத்தார்கள். அவர்கள் கடுமையான வார்த்தைகளைப் பயன்படுத்தி அழைத்தமையினால் நான் செல்லவில்லை. இதன் பின்னர் வீட்டுக் கேற்றை உதைத்தார்கள். சிறிது நேரத்தில்

பக்.21

## மு.காவின் முடிவு வெட்கக்கேடானது

சாடுகிறார் சம்பந்தன்



கொழும்பு, பெப். 8
தமிழ், முஸ்லிம் மக்களின் உரிமைகளை மதிக்காமல், அவர்களின் ஒற்றுமையைப் பற்றி சிறிதளவும் சிந்திக்காமல், ஜனாதிபதித் தேர்தலில் அவர்கள் வழங்கிய ஆணையைத் தூக்கியெறிந்துவிட்டு பதவிக்காகவும் சுகபோகங்களுக்காகவும் மீண்டும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் இணைந்து கிழக்கு மாகாணத்தில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆட்சியமைத்துள்ளது. இது வெட்கக்கேடான செயலாகும்.
இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை

பக்.21

## காணியைக் கைப்பற்ற கொலை செய்த கோத்தா

கொழும்பு, பெப். 8
கொழும்பு – பௌத்தாலோக மாவத்தையில் அமைந்துள்ள நான்கரை ஏக்கர் காணியைக் கையகப்படுத்துவதற்காகப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருந்த கோத்தபாய ராஜபக்ஷ தனது தந்தையைக் கொலை செய்ததாக பெண் ஒருவர் பரபரப்புக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.
இந்த காணிக்காக தான் 2007 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 9 ஆம் திகதி பொரளைச் சந்தியில் எனது தந்தை கொலை செய்யப்பட்டார். மேர்வின் சில்வா பாதாளக் குழுத் தலைவர் பிரின்ஸ் கோலம் மற்றும் கோத்தபாய ஆகியோர் இதன் பின்னணியில் உள்ளனர் என்று குறிப்பிட்டுள்ளார்.
ஊழலுக்கு எதிரான

பக்.21

**சரியா? தவறா?**

பக்கம் 04

**இலங்கை அகதிகளுக்கும் தமிழகத்தில் தொழில் பயிற்சி**

பக்கம் 04

## பாதுகாப்பு வலயக் குறைப்பு கூட்டமைப்புடன் அரசு பேச்சு

யாழ்ப்பாணம், பெப். 8
வடக்கு மக்களில் 80 சதவீதத்தினர் மைத்திரிக்கே வாக்களித்துள்ளனர். அவர்கள் மாற்றங்களை எதிர்பார்த்து காத்திருக்கின்றனர் என்பது எனக்குத் தெரியும். இதனை ஜனாதிபதியிடமும், பிரதமரிடமும் சுட்டிக்காட்டுவேன் என்று தெரிவித்த பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேயவர்த்தன, வடக்கிலுள்ள உயர் பாதுகாப்பு வலயங்களைக் குறைப்பது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுக்கள் நடத்தப்படும் என்றும் தெரிவித்தார்.
கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியாவிலுள்ள முப்படையினர் மத்தியிலும்

பக்.21

## நெல் கொள்வனவுக்கு நடவடிக்கை இல்லை

அதிகாரிகள் மீது குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், பெப். 8
வடக்கில் நெல் அறுவடை தொடங்கியபோதும் அவற்றைக் கொள்வனவு செய்ய மாவட்ட செயலகங்களின் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை. இதனால் பெரும் நட்டத்துக்கு நெல்லை விற்பனை செய்ய வேண்டிய நிலைக்கு நெல் உற்பத்தியாளர்கள் தள்ளப்பட்டுள்ளனர் என்று யாழ்.வணிகர்

பக்.21

## காணாமற்போனோரைத் தேடி கொழும்பில் ஆர்ப்பாட்டம்

கோட்டை ரயில் நிலையம் முன்னால்

யாழ்ப்பாணம், பெப். 8
காணாமற்போனோரினதும், அரசியல்கைதிகளினதும் நிலைப்பாட்டைத் தெரிவிப்பதற்கான கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று கொழும்பில் இடம்பெறவுள்ளது.
புறக்கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு இந்தப் போராட்டம் இடம்பெறவுள்ளது.
காணாமற்போனோரைத் தேடியறியும் குழு இந்தப் போராட்டத்தை ஏற்பாடு செய்துள்ளது. கடந்த அரசிடம் அரசியல் கைதிகள் தொடர்பாகவும் காணாமல்போனவர்கள் தொடர்பாகவும் அவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும் என்று வலியுத்திப் பல போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. ஆனாலும் அதற்கான சாதகமான பதில் கிடைக்கவில்லை. புதிய அரசுக்கும் புதிய ஜனாதிபதிக்கும் இவர்களது நிலைப்பாட்டைத் தெரிவிக்கும் வகையில் இந்தப் போராட்டம் ஏற்பாடு

பக்.21

# இலங்கை அகதிகளுக்கும் தமிழகத்தில் தொழிற்பயிற்சி

## அ.தி.மு.க அரசு அதிரடி உத்தரவு

சென்னை, பெப். 8

அரச தொழிற்பயிற்சி நிலையங்களில் இலங்கைத் தமிழ் அகதி மாணவ, மாணவியர்கள் அனுமதிக்கு 5 சதவீத இடஒதுக்கீடு செய்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

இது குறித்து தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் என்.சுப்பையன் வெளியிட்ட அறிக்கை வருமாறு:-

தமிழக வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குநர், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் அனுமதிக்கு உள்ள நடைமுறைகளை, அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் இலங்கை தமிழ் அகதி மாணவர்களின் அனுமதியிலும் பின்பற்றலாம் என அரசுக்குப் பரிந்துரைத்துள்ளார்.

தமிழகப் பள்ளிக்கூடங்களில் படித்த இலங்கை அகதிகளுடைய குழந்தைகளை பொதுப் பட்டியலில், தரவரிசையின் அடிப்படையில், அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் சேர்த்துக் கொள்ளலாம் என்றும் பரிந்துரைத்துள்ளார்.

ஈழ அகதிகள் மறுவாழ்வு நிறுவனத்தின் கோரிக்கையையும், வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குநரின் பரிந்துரையையும் அரசு பரிசீலித்து, அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் இனிவரும் கல்வியாண்டுகளில் இலங்கைத் தமிழ் அகதி மாணவர்களை, தமிழகப் பள்ளிக்கூடங்களில் படித்த இலங்கை அகதிகளுடைய குழந்தைகளைப் பொதுப்பட்டியல் தரவரிசையின் அடிப்படையில் அரசுத் தொழிற்பயிற்சி நிலையங்களில் சேர்த்துக் கொள்ளலாம். இதற்காக 5 சதவீத இடஒதுக்கீடு அளிக்கப்படுகிறது என அரசு உத்தரவிட்டுள்ளது.

மேலும் சம்பந்தப்பட்ட தலைமையிடத்து வட்டாட்சியரிடமிருந்து பெறப்பட்ட ஆளறிச் சான்று, அகதிகள் முகாம்களில் பதிவு செய்யப் பெறாதவர்கள் அவர்களுடைய விசா மற்றும் கடவுச்சீட்டுடன் விண்ணப்பிக்கவேண்டும் என்ற நிபந்தனையுடன், இலங்கை அகதி மாணவர்களைப் பொதுப்பட்டியலில் தரவரிசை அடிப்படையில் அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் சேர்த்துக் கொள்ளலாம் என்னும் நடைமுறைகளை பின்பற்றி அனுமதிக்கலாம் என்றும் அரசு உத்தரவிட்டுள்ளது. (த)

## கனடாவிலிருந்து வந்தவருக்கு வாள் வெட்டு

தென்மராட்சி, பெப். 8

கனடாவிலிருந்து வந்த நபரைத் தேடி வந்த கும்பல் திடீரெனக் கூரான ஆயுதங்களால் அவரை வெட்டிச் சாய்த்து விட்டுத் தப்பியோடியுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் சங்கத்தானை சாரதா வீதியில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த செல்வராசா உதயராசா (வயது – 34) என்பவர் தலை, பிடரி, கை ஆகியவற்றில் வெட்டுக் காயங்களுக்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைககாக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இவர் அண்மையில் வெளிநாட்டிலிருந்து வந்ததாகவும், இவரைத் தேடி பலர் வந்து போவதாகவும், நேற்றும் ஆறு பேர் வந்து வெளியே அழைத்துச் சென்று கதைத்துக் கொண்டிருந்ததாகவும், திடீரென ஆயுதங்களால் வெட்டி விட்டுத் தப்பியோடி விட்டதாகவும் உறவினர்கள் தெரிவித்தனர். (த-9)

## அரிசியின் விலை மேலும் குறையாது

அமைச்சர் சொல்கிறார்



கொழும்பு, பெப். 8

ஒரு கிலோ நெல்லுக்கு 50 ரூபா விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதால் அரிசி விலையை மேலும் குறைக்கும் நோக்கம் எதுவும் அரசுக்கு இல்லையென உணவுப் பாது காப்பு அமைச்சர் காமினி ஜயவிக்கிரம பெரேரா தெரிவித்துள்ளார்.

மரக்கறிகளின் விலைகளும் இன்னும் இரு வாரங்களில் கீழிறங்கக் கூடுமெனத் தெரிவித்த அமைச்சர், அரசின் குறிக்கோள் நுகர்வோரைப் போன்றே உள்ளூர் விவசாயிகளையும் பாதுகாக்கவேண்டும் எனவும் கூறியுள்ளார்.

அரிசி வகைகளின் விலைகள் அதிகரித்துக் காணப்படுவதால் அதற்குப் பதிலாக நுகர்வோருக்கு நிவா ரணங்களை வழங்குவதற்கு அரசு செயற்படுமா? என்ற கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

நுகர்வோரைப் போன்றே உள்நாட்டு விவசாயிகளும் எனத் தெரிவித்த அமைச்சர் ஜயவிக்கிரமபெரேரா, அந்தந்தப் போகங்களில் இயற்கை இடர்கள் காரணமாக விளைச்சலில் அழிவு ஏற்படுமிடத்து நிவாரணம் வழங்கப்படும் என்றார். (த)

## ஹக்கீமை சந்தித்தார் ஜப்பானியத் தூதுவர்



இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் நொபுஹிட்டோ ஹொபோ நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீமை நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் சந்தித்து உரையாடினார்.

இந்தச் சந்திப்பில் அமைச்சு முன்னெடுத்து வரும் செயல் திட்டங்களுக்கான ஜப்பானின் ஒத்து ழைப்பு, இரு தரப்பு உறவுகள் போன் றவை குறித்து கலந்துரையாடப் பட்டது.

இதன்போது உள்நாட்டுப் போர் நிலவிய காலப்பகுதியில் இலங்கையில் சமாதான முன்னெடுப்புகளுக்கு ஜப்பான் உதவியதைத் தெரிவித்த அமைச்சர், நாட்டின் அபிவிருத்திக்கும் ஜப்பான் உரிய பங்களிப்பு செய்ததற்காக தூதுவரிடம் நன்றி தெரிவித்தார். (த-10)

## வாகனங்களுக்கு ஒதுக்கிய நிதியில் 40 மில்லியன் 400 குடும்பங்களுக்கு

யாழ்ப்பாணம், பெப். 8

வடக்கு மாகாண சபைக்கு 2015 ஆம் ஆண்டு வாகனக் கொள்வனவுக்கென ஒதுக்கப்பட்ட 51 மில்லியன் ரூபாவில் 40 மில்லியன் ரூபாவை தலா ஒரு லட்சம் ரூபா வீதம் 400 குடும்பங்களுக்கு வாழ்வாதார மூலதன உதவியாக வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

40 மில்லியன் ரூபாவைப் போரால் பாதிக்கப்பட்ட வறுமைப்பட்ட குடும்பங்களின் புனர்வாழ்வுக்கு வழங்கலாம் என்று வட மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் வடமாகாண முதலமைச்சருக்கு கடிதம் மூல மாக அறிவித்துள்ளார். அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஏற்கனவே உள்ள வாகனங்களுக்கு மேலதிகமாக கடந்த வருட இறுதியில் கொள்வனவு செய்யப்பட்ட 13 வாகனங்களும் மாகாண சபைக்கு வந்தடையவுள்ளன. வாகனங்களைக் கரிசனையுடனும் பொறுப்புடனும் பாவித்தால் தற்போதுள்ள வாகனங்கள் தேவைக்குப் போதுமானதாகவே உள்ளன. தற்போதைய மத்திய அரசின் கொள்கையும் வாகனக் கொள்வனவுத் தவிர்ப்பாகும்.

எதிர்காலத்தில் வாகனக் கொள்வனவு முன்வைக்கப்படின் அது பற்றிய முழுமையான தேவை மதிப்பீடு செய்யப்பட்ட பின்னரே மேல் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். வேண்டிய அமைச்சர் வாரியப் பத்திரத்தின் மூலமாக இதனை முன்னெடுக்கலாம்.

பிறப்பினாலும் போரினாலும் அங்கவீனமுற்றோரின் புனர்வாழ்வு தொடர்பாக நாம் சமர்ப்பித்த கடந்த ஒக்ரோபர் 21 ஆம் திகதியக் குறிப்பில் கணக்கியல் சிக்கல் காரணமாக நடவடிக்கை எடுக்க முடியாது போய்விட்டது.அது கவலைக்குரியது. எனினும் போரினால் பாதிக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கான விதவைகள் மற்றும் அங்கவீனர்களுக்கு புனர்வாழ்வு சம்பந்தமான காத்திரமான நடவடிக்கை எடுக்கப்படுவது மாகாண சபையின் கடமையும் பொறுப்புமாகும் என்று அவைத்தலைவர் அதில் மேலும் குறிப்பிட்டுள்ளார். (த-4)

## பீடாதிபதிகளின் கடிதத்தால் விரிவுரையாளர்கள் விசனம்

யாழ்.பல்கலைக்கழக பீடாதிபதிகள் கல்வி அமைச்சுக்கு அனுப்பியதாகக்கூறப்படும் கடிதம் தொடர்பில் பல்கலைக்கழக ஆசிரியர்கள் மத்தியில் விசனம் தெரிவிக்கப்படுகிறது. அது தொடர்பில் குழப்பமான கருத்துக்கள் நிலவுகின்றன.

இது தொடர்பில் பல்கலை விரிவுரை யாளர்கள் தெரிவிக்கையில், யாழ்.பல்கலைக்கழகத்தில் முறைகேடாக எதுவும் இடம்பெறவில்லை என்றசாரப்பட ஒருபீடாதிபதிதவிர்ந்த எட்டுப் பீடாதிபதிகள் ஒப்பமிட்டு உயர் கல்வி அமைச்சுக்கு ஒரு கடிதம் அனுப்பியுள்ளனர். அது தொடர்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற விசேட பொதுக் கூட்டத்தில் யாழ். பல்கலைக்கழக ஆசிரியர்களால் கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடிதத்தின் பிரதி ஒன்றை மேலதிக நடவடிக்கைகளுக்காக உடனடியாக யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்துக்கு வழங்குமாறு பீடாதிபதிகளைக் கேட்டுக்கொள்வதோடு அவ்வாறு வழங்க மறுக்கும் பட்சத்தில் இவர்களது கடிதத்தில் தவறான கருத்துக்களே இருப்பதாகக் கருத்தில் எடுக்கப்படுகிறது என்றும், இதனால் இதுவரை காலமும் ஆசிரியர் சங்கம் யாழ். பல்கலைக் கழகத்தில் பல முறைகேடுகள் இடம்பெறுவதை எடுத்துக் கூறி வந்தமை பொய்யானதொன்றாகக் கருதப்படக்கூடிய வாய்ப்புகள் இருப்பதால் இவர்களை யாழ். பல்கலைக்கழக ஆசிரியர்களே பீடாதிபதிகளாக்கினோம் என்பதாலும், இவர்கள் சில அரசியல்வாதிகள் போன்று ஏறி வந்த ஏணியையே மிதிப்பதாக பல்கலைக் கழக ஆசிரியர் சங்கம் கருதுவதாலும், இந்தப் பீடாதிபதிகள் அனைவரும் உடனடியாகத் தமது பதவிகளில் இருந்து விலகவேண்டுமென ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப் பட்டுள்ளதாக தெரிவித்தனர்.

ஆனால் இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த இரண்டு பீடாதிபதிகள், தாம் உயர் கல்வி அமைச்சர் ரஜீவ விஜேசிங்கவுடன் அண்மையில் சந்திப்பு ஒன்றை மேற்கொண்டிருந்தோம். அதில் அவர் சில விடயங்களைக் கூறியிருந்தார். பல்கலைக்கழகத்தில் மாற்றம் செய்வது உட்பட பல விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டது. அது தொடர்பில் அவர் கூறிய சில விடயங்கள் எம்மால் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இருக்கவில்லை. ஆதனால் அது தொடர்பிலேயே கடிதம் அனுப்பப்பட்டது. யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்துக்கு எதிராகதாம் ஒருபோதும் செயற்படப் போவதில்லை –என்றனர். (த-4)

## குளத்து நீரில் மூழ்கி மீன் வியாபாரி சாவு

### கிளிநொச்சியில் சம்பவம்

கிளிநொச்சி, பெப். 8

குளத்தில் குளித்துக்கொண்டிருந்த வேளை நீரில் மூழ்கி மீன் வியாபாரி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சிப் பொதுச் சந்தையில் மீன்வியாபாரம் மேற்கொண்டு வரும் மாசிலாமணி சிறிகுமார் (சீமான்) (வயது – 55) என்ற வியாபாரியே உயிரிழந்தவராவார்.

குறித்த வியாபாரி நேற்றுமுன்தினம் மாலை 6 மணிக்குத் தனது வியாபாரத்தை முடித்துக்கொண்டு கோணாவில் பகுதியில் அமைந்துள்ள தனது வீட்டுக்குச் செல்லும் போது முறிப்புக்குளத்தில் குளிப்பதற்காக நீரில் இறங்கியுள்ளார். இதன் போது அவர் நீரில் மூழ்கி உயிரிழந்திருக்கலாம் என்று கூறப்பட்டது.

இரவு 10 மணியாகியும் வீடுதிரும்பாததால் குடும்பத்தினரும் அயலவர்களும் சேர்ந்து தேடியபோதும் அவர் தொடர்பான தகவல் கிடைக்கவில்லை.

இந்த நிலையில் நேற்றுக் காலை 7 மணியளவில் முறிப்புக்குளத்தில் அவர் அணிந்திருந்த சாரம் நீரில் மிதப்பதைக் கண்டு குறித்த இடத்துக்குச் சென்று பார்த்தபோது வியாபாரியின் கையடக்கத் தொலைபேசி, பை, சைக்கிள் போன்ற பொருள்கள் கரையில் காணப்பட்டன. இதனைத்தொடர்ந்துநீரில் தேடும்பணி ஆரம்பிக்கப்பட்டுச் சுமார் 4 மணித் தியாலத் தேடுதலின் பின்னர் நேற்று முற்பகல் 11 மணியளவில் அவரின் சடலம் மீட்கப்பட்டு பிரேத பரிசோதனைக்காக கிளிநொச்சி பொதுமருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இந்த வியாபாரியின் சகோதரனும் சில ஆண்டுகளுக்கு முன்பு இதே குளத்தில் நீரில் மூழ்கி உயிரிழந்த தாகக் கூறப்பட்டது.

இவரின் மனைவி ஏற்கனவே இறந்த நிலையில் பிள்ளைகளை அவரே பராமரித்து வருவதாகவும் கூறப்பட்டது. (த)

# வடக்குக் கூட்டுறவில் பெரும் ஊழல் மோசடி

## இதனால் சாதாரண பணியாளர்களுக்கே அதிகம் பாதிப்பு
## பழைய நிர்வாகங்கள் கலைக்கப்பட்டு புதியவை வேண்டும்
## பட்ஜெட் விவாதத்தில் சரவணபவன் எம்.பி கோரிக்கை

கொழும்பு, பெப். 8

வடக்கில் கூட்டுறவுத்துறை சீர்குலைந்து போயுள்ளது. ஊழல் மோசடி நிர்வாகங்களால் ஏற்பட்ட சீரழிவுகளினால் சாதாரண பணியாளர்களே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே அந்த நிர்வாகங்களை உடன் கலைத்து புதிய நிர்வாகங்களை உடன் தெரிவு செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும் என நேற்று நாடாளுமன்றத்தில் கோரிக்கை விடுத்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன்.

சபையில் நேற்று நடைபெற்ற பட்ஜெட் வாக்கெடுப்பு விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

கூட்டுறவுத் துறையைச் சேர்ந்த பணியாளர்களின் சம்பள அதிகரிப்புப் பற்றி இந்த வரவு–செலவுத் திட்டத்தில் எதுவும் குறிப்பிடப்படாமை வருத்தமளிக்கும் ஒரு விடயமாகும். கடந்த காலத்தில் இடம்பெற்ற சிறு சிறு சம்பள உயர்வுகளும் அவர்களுக்கு வழங்கப்படவில்லை என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். இப்படியாக அந்தப் பணியாளர்கள் குறைந்த ஊதியத்தில் வேலை வாங்கப்படுவதற்கு அந்தந்தக் கூட்டுறவுச்சங்கங்கள்நட்டத்தில்இயங்குவதாகக் காரணம் காட்டப்படுகிறது.

### அரசியல் தலையீடு

ஒரு காலத்தில் வடபகுதியில் கூட்டுறவுச் சங்கங்கள் மிகவும் சிறப்பாக இயங்குவதில் பல அரிய உதாரணங்களை வெளிப்படுத்தின. ஆனால் கடந்த அரசின் ஆட்சிக் காலத்தில் சங்கங்களின் நிர்வாகத்தில் அதீதமான அரசியல் தலையீடு மேற்கொள்ளப்பட்டது. அரசியல்வாதிகளின் எடுபிடிகள் நிர்வாக பீடங்களில் நியமிக்கப்பட்டனர். ஊழல்கள், மோசடிகளில் ஈடுபட்டு விட்டு அரசியல் செல்வாக்கினால் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பிக் கொண்டனர். அதன் காரணமாகவே சங்கங்கள் நட்டத்தில் இயங்கும் நிலை ஏற்பட்டது.

சர்வாதிகாரத்தின் சீரழிவுகளால் ஏற்பட்ட நட்டத்தின் சுமை சாதாரண பணியாளர்களின் தலையிலேயே சுமத்தப்பட்டது.

எனவே ஏற்கனவே ஆதிக்கம் வகிக்கும் ஊழல், மோசடி நிர்வாகங்கள் கலைக்கப்பட்டு கூட்டுறவுத் துறையில் அறிவும், அனுபவமும் வாய்ந்த நேர்மையான மனிதர்கள் நியமிக்கப்படவேண்டும். அதற்கான நடவடிக்கைகளைக் கூட்டுறவுத்துறை அமைச்சரும், அவர்களின் ஊதியத்தை உயர்த்த நிதியமைச்சரும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என நான் இந்தச் சபையில் எனது வேண்டுகோளை முன்வைக்கிறேன்.

### தனித்துவ பட்ஜெட்

இந்த நாடாளுமன்றம் பல வரவு–செலவுத் திட்டங்களைச் சந்தித்துள்ளது. ஆனால் தற்சமயம் சமர்ப்பிக்கப்பட்ட வரவு–செலவுத்திட்டம் மக்களுக்கு மிக அதிகமான அனுகூலங்களை வழங்கியதன் மூலம் ஒரு தனித்துவமான சாதனையை வெளிப்படுத்தியுள்ளது.

அத்தியாவசியப் பொருள்களின்



விலை குறைப்பு, அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு போன்ற எதிர்பாராத வகையிலான வரப்பிரசாதங்களை இந்த வரவு – செலவுத் திட்டம் வழங்கியதன் மூலம் இந் நாட்டு மக்களின் மனதைக் குளிர வைத்துள்ளது.

கடந்த அரசில் இடம்பெற்ற வீண் விரயங்கள், ஆடம்பரச் செலவீனங்கள், லஞ்ச ஊழல் மோசடி நடவடிக்கைகளின் தாக்கங்களைக் குறைத்து மக்களுக்கு நன்மைகளை வழங்கும்வகையிலான இந்த அரசின் நன் முயற்சியின் ஒரு பகுதியாகவே இதை நான் பார்க்கிறேன்.

மக்களுடன் நெருக்கமாக உறவாடி, அவர்களின் குறைநிறைகளையும் உணர்வுகளையும் புரிந்துகொள்ளக் கூடிய பெருமைமிகு ஊடகத் துறையுடன் தொடர்புடையவன் என்றவகையிலும்,மக்களின்தேவைகளை இச்சபையில் சமர்ப்பித்து நிவாரணங்களைக் கோரும் கடப்பாடு உடைய ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையிலும் இங்கு நான் சில விடயங்களைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

பெரும்பான்மையான மக்கள் மகிழ்ச்சி கொள்ளத்தக்க வகையில் இந்த வரவு – செலவுத் திட்டம் அமைந்துள்ளபோதிலும் கூட ஒரு சில தரப்பினர் எதிர்பார்த்த அளவுக்கு நிறைவேற்றப்படவில்லை எனக் குறைபாடுவதை என்னால் அறிய முடிந்துள்ளது.

### தனியார்துறை பங்களிப்பு

இன்றைய பெருளாதாரக் கட்டமைப்பில் நாட்டின் ஒட்டுமொத்த அபிவிருத்தியிலும், பொருளாதார முன்னேற்றத்திலும் தனியார் துறை ஒரு மிக முக்கியமான பங்களிப்பை வழங்கி வருகிறது என்பதை மறந்து விடமுடியாது. இந்தத் துறையின் மேம்பாட்டில் இத்துறை சார்ந்த ஊழியர்களின் உழைப்பே மூலாதாரமாக விளங்கி வருகிறது. எனினும் இங்கு சமர்ப்பிக்கப்பட்ட வரவு–செலவுத் திட்டத்தில் அரச பணியாளர்களுக்கு 10 ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பு வழங்கப்படும்.

கடந்த காலங்களில் பல பெருந் தோட்டங்களில் முறையற்ற நிர்வாகம் காரணமாகவும், பராமரிப்பு, மீள் நடுகை என்பவற்றில் போதியளவு கவனம் செலுத்தப்படாமையினாலும் தேயிலைஉற்பத்தியில்பாரிய பின்னடைவை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. இலங்கை தேயிலையின் உலகத் தரப் பங்கு இருந்த மதிப்பிலும் சரிவு ஏற்படும் நிலைதோன்றியது. ஆனால் தோட்டத் தொழிலாளர்கள் சம்பள உயர்வு கோரும் போதெல்லாம் இலாபமின்மை ஒரு காரணமாகக் காட்டப்பட்டது. எனவே இத்தகைய குறைபாடுகள் களையப்படும் போது தொழிலாளர்கள் சம்பளம் உயர்த்தப்படுவதில் சிக்கல் இருக்கமுடியாது. எனவே பெருந்தோட்டத்துறை அமைச்சர் இந்த விடயங்களில் கூடுதல் கவனம் செலுத்தும் அதேவேளையில் தோட்டத்தொழிலாளர்களின் சம்பளத்தை மாதம் 5ஆயிரம் ரூபாவால் அதிகரிக்க உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும்.

### ஓய்வூதியம் அதிகரிக்க வேண்டும்

எந்த அரசு ஆட்சியிலிருந்தாலும் கூட அரச நிர்வாகத்தைக் கொண்டு நடத்துவதில் அர்ப்பணிப்புடன் பணியாற்றுபவர்கள் அரச சேவைப் பணியாளர்களே. அவர்கள் தமது சேவைக்காலம் நிறைவடையும் போது அவர்களுக்கு அரசால் ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. தமது வாழ்நாளில் முக்கிய பகுதிகளை நாட்டுக்காகச் சேவை செய்து வழங்கியஅவர்களைக் கௌரவிப்பதும், அவர்கள் கடைசிக் காலத்தில் நிம்மதியாக வாழ வழி செய்வதும் அரசின் கடமையாகும். அவ்வகையிலேயே சிரேஷ்ட பிரஜைகளான அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

எனினும் இங்கு சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால வரவு–செலவுத் திட்டத்தில் ஓய்வூதியர்களுக்கு ஆயிரம் ரூபா மட்டுமே அதிகரிக்கப்பட்டுள்ளது. அரச ஊழியர்களுக்கு பத்தாயிரம் ரூபா ஊதிய உயர்வு வழங்கப்படும்போது ஓய்வூதியர்களுக்கு ஆயிரம் ரூபா மட்டுமே வழங்கப்படுவது கவலையளிக்கும் ஒருவிடயமாகும். இன்றும் சில ஓய்வூதியர்கள் ஓய்வூதியம் மூலமே தமது குடும்பத்தைப் பராமரிக்க வேண்டிய நிலையில் உள்ளனர் என்பதையும் நாம் இங்கு கவனத்தில் எடுக்கவேண்டும்.

குறிப்பாக வடபகுதியில் பல ஓய்வூதியர்கள் போர் காரணமாக உழைக்கும் தகைமையுள்ள தங்கள் பிள்ளைகளை இழந்துள்ளனர். பலர் ஊனமுற்ற பிள்ளைகளைப் பராமரிக்க வேண்டிய நிலையில் உள்ளனர். கணவன்மாரை இழந்து தங்கள் பெண் பிள்ளைகளையும், தகப்பன் தாயை இழந்த பேரப் பிள்ளைகளையும் கவனிக்க வேண்டிய நிலையில் உள்ளனர். இப்படியாகச் சில பிரத்தியேகப் பிரச்சினைகளையும் சந்திக்கும் ஓய்வூதியர்களுக்கு இந்த ஆயிரம் ரூபா உயர்வு ஏமாற்றமளிப்பதாகவே உள்ளது. எனவே ஆரம்பத்தில் கூறப்பட்டதைப் போன்று குறைந்த பட்சம் அவர்களுக்கு 3ஆயிரம் ரூபாவாக ஓய்வூதிய உயர்வு வழங்கப்பட வேண்டும்.

2004ஆம் ஆண்டுக்கு முன்பு ஓய்வூதியம் பெற்றவர்களுக்கும், பின்பு ஓய்வு பெற்றவர்களுக்குமிடையே கொடுப்பனவில் வேறுபாடு உள்ளது. இந்த வேறுபாடு விரைவில் சரி செய்யப்படும் எனப் பலமுறை வாக்களிக்கப்பட்டும் இன்றுவரை அது தொடர்பாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாகத் தெரியவில்லை. அது தொடர்பாகவும் நிதியமைச்சரும், ஓய்வூதியத் திணைக்களமும் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்–என்றார். (த)

# அரசின் முயற்சிகளை வரவேற்கின்றது அமெ.

கொழும்பு, பெப். 8

மைத்திரி அரசு, நல்லிணக்கம் – பொறுப்புக் கூறல் விடயங்களுக்காக எடுத்துவரும் நடவடிக்கைகளை வரவேற்பதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

'இலங்கை விவகாரத்தில் அமெரிக்கா சில சாதகமான நகர்வுகளை மேற்கொள்ளக் கூடும்' என்று அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பேச்சாளர் மேரி ஹாப் தெரிவித்தார்.

வொஷிங்டனில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடந்த செய்தியாளர் சந்திப்பில், வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர அடுத்த வாரம் அமெரிக்கா வரவுள்ளது குறித்து கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்குப் பதிலளித்த இராஜாங்கத் திணைக்களப் பேச்சாளர், அடுத்த வாரம் நடக்கவுள்ள இந்தச் சந்திப்புத் தொடர்பான அட்டவணைப் படுத்தப்பட்ட அறிவிப்புகள் எதுவும் கைவசம் இல்லை. எனினும், நீண்ட காலப் பிரச்சினையாக உள்ள நல்லிணக்கம்–ஜனநாயக ஆட்சி – பொறுப்புக்கூறல் உள்ளிட்ட விவகாரங்களுக்குத் தீர்வு காணப் புதிய அரசு, எடுத்துள்ள நடவடிக்கைகளை நாம் வரவேற்றுள்ளோம். நிச்சயமாக, இங்கு சில சாதகமான நகர்வுகளை காணமுடிகிறது. அடுத்த வாரம் மேலதிகமான விபரங்களை எதிர்பார்க்க முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(த–5)

# தேவையேற்படும்போது ஓமந்தையில் சோதனை

## பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 08

வடக்கு – தெற்கு சமூக இணைப்புக்காகவே ஓமந்தைச் சோதனைச் சாவடி திறந்து விடப்பட்டது. ஆனால் தேவையேற்படும் போது சோதனை நடவடிக்கைகளை மேற்கொள்வோம்.

இவ்வாறு பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேயவர்த்தன வவுனியாவில் வைத்துத் தெரிவித்துள்ளார்.

வடக்கு – கிழக்குக்கான மூன்று நாள் பயணத்தில், நேற்றைய தினம் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களுக்குச் சென்ற அமைச்சர், அங்கு படையினர் மத்தியில் உரையாற்றினார். இதன் பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கடந்த திங்கள் கிழமை ஓமந்தை சோதனைச் சாவடியில் சோதனைகள் நிறுத்தப்பட்டிருந்தன. இரு தினங்களின் பின்னர்– அதாவது கடந்த வியாழக்கிழமை சோதனை நடவடிக்கை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. ஓமந்தை சோதனைச் சாவடி மூடப்பட்டதாக – சோதனை நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டதாக வெளியான செய்திகள் தவறானது என்று இராணுவப் பேச்சாளர் தெரிவித்திருந்த நிலையில், பாதுகாப்பு அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

'ஓமந்தைச் சோதனைச் சாவடியின் சோதனை நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டு திறந்து விடப்பட்டுள்ளது. வடக்குக்கும் – தெற்குக்குமான சமூக இணைப்பாகவே இதனை நாம் கருதுகின்றோம். அதற்காகவே அதனை திறந்து விட்டுள்ளோம். ஆனால் சோதனைச் சாவடி அப்படியே இருக்கும். அது அகற்றப்படமாட்டாது. தேவை ஏற்படும் போது சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்' என்று பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் குறிப்பிட்டார்.

(த–5)

SINGER FINANCE இடமிருந்து மட்டுமே
பதிவு செய்யப்பட்ட முச்சக்கரவண்டிக்காக
அதிககடன் தொகை குறைந்த வட்டி வீதத்தில்




தொடர்புகளுக்கு
தனு 077 9 357 124
சுஜந்தன் 077 7 391 449
தர்ஷன் 077 7 009 666
இல.86, கே.கே.எஸ், வீதி, யாழ்ப்பாணம்

உதயன்
-மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## இயற்கை வளங்களின் அழிப்பு நம்மை நாமே நலிவுறச் செய்வதே

மன்னார் அச்சங்குளத்தில் சட்டவிரோத மண் அகழ்வு - -

வவுனியா விளாத்திக் குளத்தில் மரக்கடத்தலில் ஈடுபட்டவர்கள், அதிரடிப்படையினரால் கைது --

கல் அகழ்வால் வடக்கில் சுற்றுச் சூழலுக்குப் பெரும் பாதிப்பு --

எமது பிரதேசங்களின் வளங்கள் எவ்வாறு பாழாக்கப்படுகின்றன. இயற்கை எமக்குத் தந்த சொத்துக்கள் எவ்வாறு துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றன, எமது மக்களிடம் இருந்து சூறையாடப்படுகின்றன என்பதற்கான சின்னஞ்சிறு மாதிரிகள் - - உதாரணங்களே - மேற்கண்டவை.

வனவளத் திணைக்களத்துக்குச் சொந்தமான காணியிலேயே மண் அகழ்வு நடைபெறுவதாகத் தகவல்கள் வெளிவந்துள்ளன.

நானாட்டான் பிரதேச செயலர் பிரிவில் உள்ள அச்சங்குளம் பகுதியில் பெரிய அளவில் மண் அகழ்வு நடைபெறுவதால், இயற்கை வளத்துக்குப் பெரும் கேடு விளைவிக்கப்படுவதோடு, அப்பிரதேசத்தில் வாழும் மக்கள் பல வகைசார்ந்த பாதிப்புக் களுக்கு முகம் கொடுக்க வேண்டிய அவலம் அதிகரித்துள்ளது- -

அந்தப் பகுதியில் ஆற்று வாய்ப்பகுதி சேதமுறுகிறது. அதனோடு சேர்ந்து குளம் வெள்ளத்தில் மூழ்கும் அபாயமும் உண்டு - -

மல்வத்து ஓயா பெருக்கெடுத்து, அச்சங்குளத்தை வெள்ளத்தில் மூழ்கடிக்கும் பேரபாயமும் உண்டு.

மற்றொரு வகையில், மண் அகழ்வும் எமது பிரதேசங்களின் அரிய வளத்தை நீர்த்துப் போகச் செய்கிறது.

யாழ்ப்பாண மாவட்டத்திலும் கடற்கரையை அண்டிய பல பகுதிகளிலும் சட்டவிரோத மண் அகழ்வு, "மனித அனர்த்தம்" பெரிய அளவில் தொடர்கிறது. வடமராட்சி கிழக்கு நாகர்கோயில் அகன்ற பிரதேசத்தில் சட்டவிரோத மண் அகழ்வு நடைபெறுகிறது.

அதனைக் கண்டித்தும் எதிர்த்தும் அப்பகுதி மக்கள் பெரும் போராட்டம் நடத்தி வெற்றி கண்டிருக்கிறார்கள்.

மொத்தத்தில் எமது மக்களுக்கு இயற்கை தந்த பெறுமதி மிக்க வளங்களை, அர்க்கெடுத்துவதற்கும் அழித்து நாசமாக்குவதற்கும், ஆங்காங்கே எம் மத்தியிலேயே புல்லுருவிகள், பிரதேசத்துக்குப் பிரதேசம் மேலோங்கித் தனம் புரிகிறார்கள்.

யாழ்ப்பாணப் பிரதேசத்தில் அரியாலையிலும் சட்ட விரோத மண் அகழ்வு கோர வடிவம் எடுத்து வருவதாகத் தகவல்கள் நாளாந்தம் பல்கிப் பெருகுகின்றன.

அரியாலையில் தரவைக் காணிகளில் மட்டுமன்றி தனியார் காணிகளிலும் தடுப்பார் எவருமின்றி, இரவு வேளைகளில் மண் அகழ்வு "அறம் புறமாக" நடைபெற்று வருகிறது. குறிப்பிட்ட இடங்களில் களஞ்சியப்படுத்தப்பட்டு, விற்பனை செய்யப்படுகிறது.

மண் அகழ்வினால், நிலத்தடி நீர் உவராகும்; குடியிருப்புப் பகுதிகளில் கடல் நீர் உட்புகும்; இயற்கைச் சூழல் மாற்றமுறும்; சுற்றுப்புறச் சூழலின் தன்மையும் தலைகீழாக மாற்றமுறும்.

அதே பாணியில், பூநகரிப் பிரதேசத்திலும் மண் அகழ்வு "கண்மண்" தெரியாமல் நடத்தப்படுகிறது என்று தகவல்கள் வெளிவந்துள்ளன.

எங்கள் பிரதேசங்களின் இயற்கை வளங்களைச் சீண்டும் தரப்புக்களைத் தக்கவாறு இனங்கண்டு, அவற்றைச் சட்டத்தின் முன்னிறுத்தித் தண்டிக்க வேண்டும். அந்தப் பொறுப்பில் பெரும் பகுதியும், பங்கும் வடமாகாண சபைக்கும் அதன் ஆட்சியாளருக்கும் அதிகாரிகளுக்குமே அதிகம் உண்டு.

எமது தேவைகளையும் நலன்களையும் முறையே நாமே தேடி, எதிர்காலத்தைப் பிரதேச, பிராந்திய மட்டத்தில் சீராக்குவதற்கு, ஒருங்கிணைந்த செயல்திட் டங்களை முன்னெடுக்கும் பொறுப்புணர்வு, சம்பந்தப்பட்ட நிர்வாக, ஆட்சியியல் தரப்புக்களுக்கு மட்டுமன்றி, மக்களுக்கும் அறுபது வீத பங்கு உண்டு. அதற்கான உணர்வும் உத்வேகமும் இன்றைய தவிர்க்க முடியாத தேவைகள்.

# சரியா? தவறா?

கந்தவனம் கோணேஸ்வரன்

இலங்கை தனது அறுபத்தேழாவது சுதந்திரதினத்தை அமைதி யான முறையில் கொண்டாடி இருக்கி றது. தமிழர்களின் நம்பிக்கையையும் பெற்றுள்ள அரசு கொண்டாடிய சுதந்திர தினம் என்பதால் இந்தச் சுதந்திர தினம் இதற்குமுன்னரான காலங்களில் இடம் பெற்ற கொண்டாட்டங்களைவிடச் சிறப்பு வாய்ந்ததாக அமைகிறது.

இந்நிகழ்வில் தமிழர்தலைவரான இரா. சம்பந்தனும் பார்வையாளராகக் கலந்து கொண்டிருக்கிறார். மேலோட்டமாகப் பார்க்கும் போது இது ஏற்றுக்கொள்ளத் தக்கதல்ல என்பதுபோல் தோன்றினா லும்; சம்பந்தனது செய்கை இலட்சிய முரண்பாடு கொண்டதல்ல என்பது நிதானமாகச் சிந்தித்தால் புரியும்.

இந்தஅரசால் தமிழர்களின் அபிலாஷைகள் ஏதாவது நிறைவேற்றப்பட்டுள்ளனவா என்றொருவர் கேட்பாரானால் அதற்கு இல்லை என்பதுதான் பதிலாகக் கிடைக்கும். எனவே தமிழர்களின் அபிலாஷைகள் நிறைவேறும் முன்னர் சுதந்திரதின நிகழ்வில் தமிழர்தலைவர் சம்பந்தன் கலந்துகொள்வது சரியானதாகுமா எனக்கேட்டால் நிச்சயம் அது சரியான நடவடிக்கை என்பதுவே பதிலாகும்.

இந்தஅரசு தமிழர்களின் நம்பிக்கையைப் பெற்றிருக்கிறது. தமிழர்களுடைய வாக்குப் பலத்தினால் தனது ஆட்சியை நிறுவியிருக்கிறது. தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கான கடப்பாட்டையும் கொண்டிருக்கிறது. அதற்கான ஒப்புதலையும் அளித்திருக்கிறது.

இந்த நிலையில்தான் சம்பந்தன் சுதந்திரதின நிகழ்வில் பார்வையாளராகக் கலந்துகொண்டிருக்கிறார். சுதந்திரதின நிகழ்வுகளில் கலந்து கொள்ளுமாறு அழைப்புகள் அனுப்பப்பட்டிருந்த போதிலும் ஜனநாயக முன்னணித் தலைவர் மனோகணேசனும் வடக்கின் முதல்வர் விக்கினேஸ்வரனும் நிகழ்வில் கலந்துகொள்ள மறுத்ததோடு தமிழ்மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படாத நிலையில் சுதந்திரதின நிகழ்வுகளில் கலந்துகொள்வது நியாயமாகாது எனப் பட்டவர்த்தனமாகத் தெரிவித்திருக்கிறார்கள்.

இவர்கள் இருவரின் கூற்றுகளும்தான் இன்றைய தமிழ்மக்களின் உள்ளக்கிடக்கை. இதில் தவறேதும் கிடையாது. வெற்று வாக்குறுதிகளை நம்பித் தமிழர்கள் பலதடவைகள் ஏமாந்திருக்கிறார்கள். அந்த அனுபவங்கள் புறந்தள்ளக்கூடியவையல்ல. ஆனால்தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் ஓடோடிச்சென்று அந்நிகழ்வில் கலந்து கொண்டமைசற்று நெருடலான விஷயம்தான். ஆயினும் மனோகணேசன், விக்கினேஸ்வரன் போன்று சம்பந்தன் நடந்துகொள்ள முடியாது : எடுத்தெறிந்து பேசிவிடவும் முடியாது. தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் தலைவர் என்ற வகையில் அவரின் பொறுப்புகள் அதிகமானவை. அவருடைய நகர்வுகள் இலங்கையின் உள்ளக அபிப்பிராயங்களிலும் சர்வதேசக் கருத்துகளிலும் தாக்கம் செலுத்தக்கூடியவை. எனவே அவர் எடுத்தேன் கவிழ்த்தேன் என்று பேசிவிடவோ செயல்படவோ முடியாது.

மனோகணேசனும் விக்னேஸ்வரனும் சுதந்திரத்தின நிகழ்வில் கலந்துகொள்ளாமல் விட்டதன்மூலம் தமிழ்மக்களின் உள்ளத்து உணர்வுகளின் சாட்சியாக நின்றிருக்கிறார்கள். சம்பந்தன் கலந்துகொண்டதன்மூலம் தமிழ் மக்களின் நல்லெண்ணத்தினதும் ராஜதந்திரத்தினதும் சாட்சியாக நின்றிருக்கிறார். தமிழர்களை ஒதுக்கிவைத்து நகர்வுகளை மேற்கொள்ள முடியாதபடி அரசுக்கு ராஜதந்திர அழுத்தம் கொடுத்திருக்கிறார்.

இன்றைய அரசியல் நிலையில் தமிழ்மக்களுக்கு இவை இரண்டுமே தேவையானவைதாம். இவற்றை பிழையென்று யாராவது நிறுவ முயன்றால் அது அவர்களின் அரசியல் தெளிவின்மையைத்தான் காட்டும்.

இலங்கை அரசியல் வரலாற்றைப் பொறுத்தவரையில் தமிழ்மக்கள் இன்றுவரை சுதந்திரத்தின் நன்மைகளை அனுபவிக்கவில்லை. சுதந்திர இலங்கையின் 67வருடக் காலத்தின்போது 1966 ஜனவரியில் டட்லி சேனநாயக்கா அரசில் தமிழ்மொழி விசேட மசோதா நிறைவேற்றப்பட்ட போது தமிழர்களும் சுதந்திரக்காற்றை சுவாசிக்கலாம் என்ற நம்பிக்கை ஏற்பட்டது. ஆனால் அதுவும் பின்னாளில் பொய்த்துப்போனது.

1972 மே 22ல் ஸ்ரீமாவோ ஆட்சிக்காலத்தில் இலங்கை குடியரசாகப் பிரகடனப்படுத்தப்பட்ட போது தமிழர்கள் மொழியால், மதத்தால், இனத்தால் இரண்டாம்தர நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். இந்த நாடு தங்களை ஒதுக்கிவைத்துக்கொண்டு அரசியல் நகர்வுகளை மேற்கொள்வதாகத் தமிழர்கள் கவலையடைந்தார்கள்.

1978ல் ஜே.ஆர் அரசால் வரையப்பட்டு அறிமுகப்படுத்தப்பட்ட தற்போதைய அரசியல் யாப்பிலும் தமிழர்கள் புறக்கணிக்கப்பட்டார்கள். அவர்களது எண்ணங்களும் புறந்தள்ளப்பட்டன. பௌத்த சிங்கள மக்கள் மட்டுமே இந்நாட்டின் பிரஜைகள் : ஏனையோர் அண்டிப் பிழைப்பவர்கள் என்ற தொனியிலேயே அரசியல்அமைப்பு வரையப்பட்டு செயல்படுத்தப்பட்டது. இவ்விரு யாப்புகளும் தமிழர்களை ஜனநாயகத்தின் நம்பிக்கை கொள்ளவேண்டாம் என்று எச்சரிக்கை செய்பவைகளாக அமைந்திருந்தன.

தமிழர்களைப் பொறுத்தமட்டில் தாங்கள் இலங்கையின் சுதந்திரப்பிரஜைக்குரிய நிலையை அடையவில்லை என்றே நம்புகிறார்கள். அந்த நிலையை எய்துவதற்காகப் போராடியும் வருகிறார்கள். சுதந்திர இலங்கையின் ஒவ்வொரு குடிமகனும் சமசுதந்திரத்தை அனுபவிக்க வேண்டுமென தமிழர்கள் விரும்புகிறார்கள். அதுதான் நிறைவான சுதந்திரம் என்றும் கருதுகிறார்கள்.

இலங்கைத்தீவு தனது சுதந்திரத்தை ஐரோப்பியரிடம் மூன்று கட்டங்களாக இழந்திருக்கிறது. 1505ல் இலங்கையில் கால் வைத்த போத்துக்கீசர் மதத்தின் பேரால் கோட்டை ராஜ்ஜியத்தின் சிங்கள அரசனை மயக்கி நாட்டை எழுதி வாங்கிக்கொண்டார்கள். 1518இல் கொழும்பில் கோட்டையை நிறுவி அங்கிருந்து தமிழ் மன்னனின் யாழ்ப்பாண ராசதானியைக் கைப்பற்ற முயன்றார்கள்.

பல போராட்டங்களுக்கு மத்தியில் 1619ல் இரண்டாம் சங்கிலியன் காலத்தில் யாழ்ப்பாண அரசு வீழ்ச்சியடைந்தது. எனினும் வன்னியின் குறுநில மன்னனான பண்டார வன்னியன் 1811ல் உடையாவ10ரில் ஆங்கிலப் படைகளால் தோற்கடிக்கப்படும்வரை தமிழர்களின் அரசு நிலைத்திருந்தது. யாழ்ப்பாண அரசின் வீழ்ச்சியைத் தொடர்ந்து திருகோணமலை மட்டக்களப்பு வன்னிமை கள் தமது பாதுகாப்புக்காக கண்டி மன்னன் இராஜசிங்கனின் ஆட்சிக்குட்பட்டிருந்தன வெனினும் 1815ல் கண்டித் தமிழ்மன்ன னும் எகெலப்பொலபோன்றோரினால்காட்டிக்கொடுக்கப்பட்டு கைதுசெய்யப்பட்டதன் பேரில் முழு இலங்கையும் அந்நியராட்சிக்குட்பட்டது.

இவ்வாறு இழக்கப்பட்ட இராச்சியங்கள் இலங்கை சுதந்திரமடைந்தபோது ஒரே நாடாக திருப்பி ஒப்படைக்கப்பட்டது. தீவில் சிங்களமக்களே பெரும்பான்மை என்பதால் சிங்களத் தலைவர்களே நாட்டைப் பொறுப்பேற்றுக்கொண்டனர். அன்றிலிருந்து இன்றுவரை இலங்கை சிங்களவர்களுக்கு மட்டுமே சொந்தமானது என்ற சிந்தனை சிங்கள அரசியல்வாதிகளால் விதைக்கப்பட்டு வந்திருக்கிறது.

கிடைத்த சுதந்திரம் கிறிஸ்தவர்களுக்கோ இஸ்லாமியர்களுக்கோ இந்துக்களுக்கோ கிடைக்காத வகையில் பௌத்தர்களிடம் சிக்கிக்கொண்டது. பௌத்த சிங்களவர்கள். மட்டுமே இலங்கையின் குடிமக்கள் என்ற கோட்பாடு தொடர்ந்து பேணப்பட்டது. இதனால் ஏனைய சமூகத்தினர் ஆட்சி முறையில் வெறுப்படைந்தனர். அன்றைய சிங்களத் தலைவர்கள் ஒரு நல்லாட்சி முறைமையை கைக்கொண்டிருந்தால் இன்று உலகஅளவில் முன்னேறிய நாடுகளில் ஒன்றாக இலங்கை திகழ்ந்திருக்கும்.

ஆனால் முதலாவது ஆட்சித்தலைவர் டி.எஸ். சேனநாயக்கா தொடக்கம் இறுதியாக அரசகட்டிலிலிருந்து அகற்றப்பட்ட மகிந்த ராஜபக்ஷ வரை அனைவரும் தங்கள் எதிர்கால நன்மை கருதித்தான் ஆட்சி நடத்தினரே யொழிய நாட்டினதோ நாட்டு மக்களினதோ நன்மை கருதி ஆட்சி நடத்தவில்லை. இதனால் தான் நாடுமிகமோசமானநிலைக்குத்தள்ளப்பட்டது. தமிழர்களின் பலத்தைக் குறைப்பது முஸ்லிம்களையும் தமிழர்களையும் ஒன்றுசேரவிடாமல் தடுப்பது போன்ற உத்திகள் அரச தலைவர்களால் மேற்கொள்ளப்பட்டன. சாதாரண சிங்கள, தமிழ், முஸ்லிம் பொது மக்களின் ஒற்றுமைக்கு அரச தலைவர்களே வேட்டு வைத்தனர். இவற்றின்மூலம் சிங்கள வாக்குகளைக் கவர்வது அவர்களின் நோக்கமாக இருந்தது.

அண்டை நாடான இந்தியா இலங்கை சுதந்திரமடைவதற்குச் சில மாதங்களின் முன்புதான் தனது சுதந்திரத்தை மீட்டெடுத்தது. அங்கே குஜாரத்தியரான காந்தியால் தேசபிதாவாக வர முடிந்தது. வங்காள மொழியால் ஒரு தேசியகீதத்தைத் தர முடிந்தது. சீக்கியரான மன்மோகன்சிங்கினால் நாட்டின் தலைமையை ஏற்க முடிந்தது. தமிழரான அப்துல் கலாமினால் மக்கள் மனங்கவர்ந்த ஜனாதிபதியாக வரமுடிந்தது.

இவற்றுக்கெல்லாம் காரணம் அங்கே ஆட்சி முறை சீராக இருப்பதுதான். பெரும்பான்மை சிறுபான்மை என்ற பேதங்களோ மொழி மத கலாசாரங்களோ ஒரு மனிதனின் சுதந்திர வேட்கைக்குத் தடையாக இருக்கவில்லை. இந்தியாவிலி பிறந்த அனைத்து குடிமகனும் இந்தியத்தாயின் பெறுமதிமிக்க புத்திரர்களாகவே அங்கே நோக்கப்படுகிறார்கள்.

இந்தியாவில் தோன்றிய மதத்தைப் பின்பற்றமுடிந்த எங்கள்நாட்டு ஆட்சியாளர்களால் இந்தியர்களின் பரந்த இதயங்களைப் பின்பற்றமுடியாமல் போய்விட்டது. ஆட்சி முறையின் சிறப்பைக் கைக்கொள்ள இயலாமற் போய்விட்டது; நெஞ்சில் உரமும் நேர்மைத் திறமும் கொண்ட ஒரு சிங்களத்தலைவரேனும் இலங்கையில் தோன்றமுடியாது போய்விட்டது.

இலங்கையை இதுவரை காலமும் ஆட்சி புரிந்த அரச தலைவர்கள் அத்தனைபேரும் அரசியற்கோழைகளாகவே இருந்திருக்கிறார்கள். தன்னம்பிக்கையுடனும் துணிச்சலுடனும் இலங்கையைச் சரியான பாதைக்கு இட்டுச்செல்லத்தக்க தலைவர் எவரும் தோன்றாமல் போனதுதான் இலங்கையின் இன்றைய இழிநிலைக்குக்காரணமாகியுள்ளது. எண்ணிக்கையில் அதிகமாக இருக்கும் இனத்தில் பிறந்த காரணத்தினால் எண்ணிக்கையில் குறைந்த இனத்தவரை அடக்கி ஆளலாம் என்ற எண்ணமே இலங்கையில் தொடர்ச்சியாக நிலவி வருகிறது. இத்தகைய நீதிகெட்ட அரசியல் நடவடிக்கைகளால்தான் தமிழ்மக்கள் அரசின் அடக்குமுறை நியாயங்களுக்கு அடங்கமறுத்து போராடினார்கள். அடக்குமுறைந்தவன் நீதிமானாகவும் அடங்கமறுத்துத் தன்னைக் காத்துக்கொள்ளப் போராடியவன் பயங்கரவாதியாகவும் சித்திரிக்கப்படும் நிலையே இலங்கையில் காணப்படுகிறது. இந்த எண்ணம் இருக்கும்வரை எத்தனை ஆட்சியாளர்கள் வந்தாலும் சமாதானம் என்பது வெற்று வார்த்தையாகவே போய்விடும்.

தற்போது மைத்திரி அரசு பொறுப்பேற்றதன் பின் இந்நிலை அகன்றுவருவதாகத் தமிழ் மக்கள் நம்பத் தொடங்கியுள்ளார்கள். அந்த நம்பிக்கையை மைத்திரி அரசு பொறுப்புடன் பாதுகாக்கும் என்றும் நம்புகிறார்கள். அந்த நம்பிக்கை மனதுடனேயே இம்முறை இடம்பெற்ற சுதந்திரதின விழாவையும் நோக்குகிறார்கள்.

இத்தகைய எளிமைசால் ஜனாதிபதி தமிழர் விடயத்திலும் நியாயமாக நடந்துகொள்வார் என்றே தமிழ்மக்கள் நம்புகிறார்கள். அந்த நம்பிக்கையின் அடையாளமாகத்தான் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தமிழ்மக்கள் சார்பாக சுதந்திரதின விழாவில் கலந்துகொண்டிருக்கிறார்.

இந்த நல்லெண்ணத்தைப் பற்றிப்பிடிக்க வேண்டிய தார்மிகக் கடைப்பாடு மைத்திரி அரசுக்கு இருக்கிறது. தமிழர்களை மீண்டும் போராட்டதிசைக்கு இழுத்துச்செல்லும் காரணிகளைக் களையவேண்டிய பொறுப்பும் மைத்திரி அரசுக்கு இருக்கிறது.

தமிழர்கள் அமைச்சுப் பதவிகளுக்காக மைத்திரி அரசை ஆதரிக்கவில்லை. மஹிந்தவுடன் இறுதிநேரம்வரை தொங்கிக் கொண்டிருந்து விட்டு வேறுவழியில்லாமல் வெல்கிறவரின் பக்கத்துக்கு ஓடிவந்து ஆதரவு தரவுமில்லை. தமிழர்களும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தெளிவான அரசியல் அறிவுடனும் தீர்க்கமான கொள்கையுடனும் தான் மைத்திரி அரசுக்கு ஆதரவு வழங்கிக் கொண்டிருக்கிறார்கள்.


இந்த ஆதரவு பலவீனத்தின் விளைவு அல்ல. தமிழ் அரசியல்வாதிகளின் இருப்புக்கான பாதுகாப்புக் கவசமுமல்ல. தமிழ்மக்களின் அமைதியானதும் கௌரவமானதுமான வாழ்வை மட்டுமே அடிப்படையாகக் கொண்டது. அரசு தமிழர்களை ஏமாற்றிவிடலாம் என்றோ பிரச்சினைகளைக் காலம்கடத்திச் சோரவிட்டு அந்த இடைக்காலத்தில் சர்வதேச அரங்கில் தன்னை நியாயப்படுத்திக்கொள்ளலாம் என்றோ நினைக்கக்கூடாது. அவ்வாறு முயன்றால் அது மீண்டும் ஒரு விபரீத நிலைக்கே நாட்டை இட்டுச்செல்லும். தமிழ் மக்கள் எவ்வாறு அரசுடன் விசுவாசமாக நடந்து கொள்கிறார்களோ அதே விசுவா சத்தை அரசிடமிருந்தும் அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். இதில் நியாயமுண்டு. இதுதான் இன்றைய யதார்த்தம்.

08 FEB 2015

நித்திய சுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 205

# பிறவிக் குறைபாட்டு நோய்கள்

(Birth defects)





பிறக்கும்போதே குழந்தைகளில் காணப்படும் உடல் கட்டமைப்பு அல்லது தொழிற்பாட்டுக் குறைபாடுகளை பிறவிக் குறைபாடுகள் என்பர். பிறக்கும் குழந்தைகளில் 33 குழந்தைகளில் ஒரு குழந்தை பிறவிக் குறைபாடு உடையதாகப் பிறக்கின்றது. இதன் விளைவாக, ஒவ்வொரு வருடமும் 3.2 மில்லியன் குழந்தைகள் ஏதோவொரு அங்கவீனக் குறைபாடு உடையவர்களாக இவ்வுலகில் பிறக்கின்றனர். அதே போல் ஒவ்வொரு வருடமும் பிறவிக் குறைபாட்டு நோய்களால், பிறந்து முதல் 28 நாள்களுக்குள் ஏறத்தாழ 270,000 பச்சிளங்குழந்தைகள் இறக்கின்றனர்.

யாழ். போதனா வைத்தியசாலையில் கடந்த வருடத்தின் இறுதி 5 மாதங்களில் பிறந்த 2700 குழந்தைகளில் 35 பேருக்கு ஏதோவொரு குறிப்பிடத்தக்க பிறவிக் குறைபாடு காணப்பட்டது. அவர்களில் 6 குழந்தைகள் இறந்துள்ளன.

**பிறவிக் குறைபாட்டு நோய்கள் ஏன் ஏற்படுகின்றன?**

ஏறத்தாழ அரைவாசிக்கு மேற்பட்ட பிறவிக் குறைபாடுகளுக்கு நிச்சயமான ஒரு காரணத்தைக் கூறமுடியாதுள்ளது. எனினும் கீழ்வரும் காரணங்கள் பிறவிக் குறைபாடுகளுக்கு ஏதுவாக அமைகின்றன.

1. சமூக பொருளாதார காரணிகள் பிறவிக் குறைபாடுகளுக்கு மறைமுகமான காரணமாக அமைகின்றன. ஏறத்தாழ 94 சதவீதமானகடும் பிறவிக் குறைபாட்டு நோய்கள், பொருளாதார வளங்குன்றிய அல்லது இடைத்தர வளமுள்ள நாடுகளிலேயே பிறக்கின்றன. இந்த நாடுகளில் பெரும்பாலான தாய்மாரில் காணப்படும் ஊட்டச்சத்துக் குறைபாடுகள், பிறவி குறைபாட்டை உண்டு பண்ணும் இரசாயனங்களின் தாக்கம் அதிகமாக இருத்தல் மற்றும் கர்ப்பிணிப் பெண்களுக்கு நோய்க் கிருமிகள் தொற்ற வாய்ப்பு அதிகம் காணப்படல் என்பன இதற்கான காரணங்களாகும்.
2. வயது கூடிய பெண்கள் குழந்தைகளைப் பெறும்போது, மொங்கோலியன் (Down syndrome) போன்ற பிறவிக் குறைபாடுகள் அதிகமாக ஏற்படலாம்.
3. இரத்த உறவு முறைக்குள் திருமணஞ் செய்தல், எமது சமூகத்தில் இன்னமும் காணப்படும் மச்சான், மச்சாள் உறவுமுறை திருமணங்களால், பிறக்கும் குழந்தைகளுக்குச் சில வகையான பரம்பரைக் குறைபாட்டு நோய்கள் அதிகமாக ஏற்படலாம்.
4. குழந்தை வயிற்றுள் உள்ள போது, தாய்க்கு ஏற்படும் சிபிலிசு (syphillis) றுபெல்லா (Rubella) போன்ற கிருமித் தொற்று நோய்களால் பிறக்கும் குழந்தைகளுக்கு பிறவிக் குறைபாடுகள் உண்டாகலாம்.
5. கர்ப்ப காலத்தில், தாய்க்கு ஏற்படும் இரும்பு, அயடீன், போலிக் கமிலம் போன்ற சத்துக்களது குறை பாடுகளாலும், சலரோகம், அதிக எடை அல்லது மிகக் குறைந்த நிறை போன்றவற்றாலும் பிறவிக் குறைபாடுள்ள குழந்தைகள் பிறக்கலாம்.
6. சூழல் மாசடைதல், சூழலில் காணப்படும் பூச்சி நாசினிகள், இரசாயனப் பொருள்களால் நீர் மாசடைதல், கர்ப்ப காலத்தில் மது அருந்துதல், புகைபிடித்தல், சிலவகையான மருந்துப்பொருள்களையும், அதிகவிற்றமின் ஏ மாத்திரைகளையும் உட்கொள்ளுதல் மற்றும் கர்ப்பவேளையில் கதிரியக்கத் தாக்கத்துக்கு உள்ளாகுதல் என்பன குழந்தையில் பிறவிக் குறைபாட்டை உண்டாக்கலாம்.




**பிறவிக் குறைபாடுகளை எவ்வாறுதவிர்க்கலாம்?**

தகுந்த பொதுச் சுகாதார தடுப்பு முறைகளைப் பெண்ணொருவர் கர்ப்பமாக முன்னரும், கர்ப்ப காலத்திலும் பின்பற்றுவதன் மூலம் சில பிறவிக் குறைபாடுகளைத் தவிர்க்கலாம். மேலே கூறப்பட்ட பிறவிக் குறைபாடுகளுக்கான காரணிகள் ஒரு பெண்ணுக்கு ஏற்படாமல் தவிர்த்தால், அனேக பிறவிக் குறைபாடுகள் குழந்தைக்கு ஏற்படாமல் தவிர்க்க முடியும். குறிப்பாக பெண்களின் போசாக்கை மேம்படுத்துதலும், இரசாயனங்கள், மருந்துப் பொருள்கள், கதிர் வீச்சுத் தாக்கம், கிருமித் தொற்றுக்கள் என்பன கர்ப்பிணிப் பெண்களைப் பாதிக்காது பாதுகாத்தலும் முக்கியமானவையாகும். அவ்வாறே இரத்த உறவுமுறைத் திருமணங்களைத் தவிர்த்தலும், வயது கூடிய பெண்கள் கர்ப்பமாதலைத் தவிர்த்தலும் நல்லது. பெண்கள் கர்ப்பமாவதற்கு முன்னரே தகுந்த தடுப்பூசிகளை (உ+ம் றுபெல்லா) பெற்றுக் கொள்ளலும், போலிக் அமில (folic acid) மாத்திரைகளை உட்கொள்ளலும் வேண்டும்.

> பெண்களின் போசாக்கை மேம்படுத்துதலும், இரசாயனங்கள், மருந்துப் பொருள்கள், கதிர் வீச்சுத் தாக்கம், கிருமித் தொற்றுக்கள் என்பன கர்ப்பிணிப் பெண்க்ளைப் பாதிக்காது பாதுகாத்தலும் முக்கியமானவையாகும்.

**பிறவிக் குறைபாடுகளை எவ்வாறு கண்டறியலாம்?**

கீழ்வரும் மூன்று காலப் பகுதிகளிலும், தகுந்த சோதனைகள் மூலம், குழந்தைகளுக்கு ஏற்படக் கூடிய பிறவிக் குறைபாடுகளைக் கண்டறியலாம்.

1. கர்ப்பமாவதற்கு முன்னர்: ஒரு குடும்பத்தில் வேறு யாரும் பாதிக்கப்பட்டிருப்பின், பெற்றோருடைய இரத்தத்தைச் சோதிப்பதன்மூலம் அவர்களுக்குப் பிறக்கப் போகும் குழந்தைக்கு அவ்வாறான குறைபாடுகள் ஏற்படலாமா எனக் கண்டறியலாம். உதாரணமாக தலசீமியா என்ற குருதிச் சோகை நோய்க்கான காவிகளாக பெற்றோர் இருப்பின், அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைக்கு அந்த நோய் இருப்பதற்கான நான்கில் ஒருபங்கு வாய்ப்புண்டு:
2. கர்ப்ப காலத்தில்: பிறவிக் குறைபாடுகள் ஏற்படக் கூடிய காரணிகள் காணப்பட்டால், கர்ப்ப காலத்தில் தாயின் இரத்தத்தையோ, நச்சுக் கொடியின் துண்டையோ கர்ப்பப் பையிலுள்ள அம்மினியோடிக்திரவத்தையோ, சோதிப்பதன் மூலமும், கர்ப்பத்தை ஸ்கான் பண்ணுவதன் மூலமும் பல பிறவிக் குறைபாடுகளை முன்கூட்டியே கண்டறியலாம்.
3. குழந்தை பிறந்த பின்: குழந்தையைச் சோதிப்பதன் மூலமும் குழந்தையின் இரத்தத்தினதும் இழையங்களினதும் மாதிரிகளைச் சோதிப்பதன் மூலமும், குழந்தையை ஸ்கான் பண்ணுவதன் மூலமும், பல குறைபாடுகளைக் கண்டறியலாம்.

**பிறவிக் குறைபாட்டு நோய்களுக்கு எவ்வாறான சிகிச்சைகளைப் பெறமுடியும்?**

இன்றைய நவீன மருத்துவ வசதிகளின் மூலம் பல வகையான பிறவிக் குறைபாட்டு நோய்களுக்குரிய சிகிச்சைகளைப் பெறக்கூடியதாகவுள்ளது.

உதாரணமாக இருதய சத்திர சிகிச்சைகள், அங்க சீரமைப்பு சிகிச்சைகள், என்புமச்சை மாற்றுச் சிகிச்சை, ஓமோன்கள் மற்றும் நொதியப் பொருள்களைச் செயற்கையாக வழங்குதல், பரம்பரையலகுக்குச் சிகிச்சை வழங்குதல் போன்றனவற்றைக் குறிப்பிடலாம். எனவே பிறவிக் குறைபாட்டு நோய்களை முன்கூட்டியே கண்டறிவதன் மூலம், குழந்தைக்கு அதிக பாதிப்புக்கள் வர முன்னரே உரிய சிகிச்சைகளை வழங்கலாம். உதாரணமாக பிறப்பின் போதே காணப்படும் தைரொக்சின் குறைபாட்டைக் கண்டறிய இன்று உலகின் பல நாடுகளிலும் பிறக்கும் எல்லாக் குழந்தைகளுக்கும் இரத்த மாதிரிச் சோதனை செய்யப்படுகிறது. அதன் மூலம் குறைபாடு இருப்பின் ஆரம்பத்திலேயே சிகிச்சை வழங்க முடியும்.

இலங்கையில் குடும்பச் சுகாதாரப் பணியகம், பிறவிக் குறைபாட்டு நோய்கள் பற்றிய பதிவுகளை மேற்கொண்டு, எதிர்காலத்தில் தகுந்த தடுப்பு முறைகளையும், சோதனைகளையும், சிகிச்சை முறைகளையும் சுகாதார அமைச்சின் ஊடாக நடைமுறைப்படுத்த முயற்சிக்கின்றது. எனினும் பிறவிக் குறைபாடுகள் சம்பந்தமான பல சோதனைகளை இன்னமும் தனியார் ஆய்வுகூடங்களிலேயே மேற்கொள்ளக் கூடியதாகவுள்ளது. அதேபோல் நவீன சிகிச்சை முறைகளை சில பிறவிக் குறைபாட்டு நோய்களுக்கு இலங்கையில் வழங்க முடியாதுள்ளதால் பல இறப்புகள் ஏற்படுகின்றன. எனினும் வளர்ந்து வரும் மருத்துவ வசதிகள் மூலமாக எதிர்காலத்தில் இவை நிவர்த்தி செய்யப்படும் என நம்பலாம்.

மருத்துவர்
*ந.ஸ்ரீசரவணபவானந்தன்,*
குழந்தை மருத்துவ நிபுணர்,
யாழ். போதனா
வைத்தியசாலை.

# சிறுவிளம்பரங்கள்

## விற்பனைக்கு




### வீடு விற்பனைக்கு
யாழ்.கச்சேரிக்கு அருகில் புதிதாக கட்டப்பட்ட மேல்மாடி வீடு 1½ பரப்புக் காணியுடன் விற்பனைக்குண்டு. உரிமையாளருடன் நேரில் விலை பேசித்தீர்மானிக்கலாம்.
(56585) (4.3.7) தொடர்பு: 077 819 8223

### வீடு, காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் Old Pack Road சுண்டுக்குளியில் 20 பேர்ச் காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு. (Close to beach Road)
(வி19610)(12.3.7) தொடர்பு: 077 642 8502

### விற்பனைக்கு
அல்சேசன் நாய்க்குட்டி, TV, மேசை, கதிரை, சீலிங் பான், டீசல் எஞ்சின், கொம்பியூட்டர், அயன்சேவ் விற்பனைக்குண்டு.
(56591) (12.3.7) தொடர்பு: 075 529 5746

### தேர் வடம் விற்பனைக்கு
65M நீளம் கொண்ட இரண்டு புதிய தேர் வடங்கள் விற்பனைக்குள்ளன.
தொடர்பு: 077 050 2070,
077 676 3020 (56449)(4.3.7)

### பொருள் விற்பனை
மீளப் பாவிக்கக்கூடிய பழைய ஓடுகள், பனைமரம், ஜன்னல்கள் என்பன மலிவான விலையில் விற்பனைக்குள்ளன.
தொடர்பு: மல்ரி பாம் சென்ரர்
61, இராமநாதன் வீதி, கலட்டி. (56586)
075 670 0680, 077 300 1763 (4.3.7)

### காணி விற்பனைக்கு
உரும்பிராயில் கோப்பாய் வீதிக்கு தென்புறமாகவும், சேமப்புல ஒழுங்கையிலிருந்து இரண்டாவதாகவும் உள்ள 8¾ பரப்புத் தோட்டக்காணி உடன் விற்பனைக்குண்டு. தென்னை, மா, பலா, வேம்பு போன்ற சகல பிரயோசனங்களும் உள்ளன.
விலை பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்புகளுக்கு:
(உரும்பிராய் ஞானவைரவர் கோவிலுக்கு அருகில்)
021 223 0465 (56522)(4.3.7)

### வாகன உதிரிப்பாகங்கள் விற்பனைக்கு
Bmc, Leyland,Morris,Austin 1100, Peuget 104,204,304,203,403,404, 504,305, And 505
இல, 15 தர்மாராம றோட்,
வெள்ளவத்தை, கொழும்பு-6.
கிழமை நாள்களில் பார்வையிடலாம்.
தொடர்பு-
072 773 9705, 072 2102032,
(C 19619) (5.3.7) 430 2622, 430 2623

### விற்பனைக்கு
PE-xxxx இலக்கமுடைய Double cap மற்றும் Honda, Activa I மோட்டார் சைக்கிள், 2 வயது நிரம்பிய கிறேட்டென் நாய்க்குட்டி விற்பனைக்குண்டு
(56594)(4.3.7) தொடர்பு: 077 410 9151

### வீடு, காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம், சுண்டுக்குளி, கச்சேரி அருகில்ல் 1¾ ,பரப்பு 3 அறைகள், 2 குளியலறைகள் கொண்ட வீடு உடன் விற்பனைக்குண்டு.
(வி19610) (12.3.7) தொடர்பு:077 038 5881/077 036 2220

### வீடு வளவு விற்பனைக்கு
நீதிமன்ற வீதி, மல்லாகத்தில் வீட்டுடன் 10 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு:
(56584) (12.3.7) 077 056 6172/021 224 1604

### வீடு விற்பனைக்கு
நல்லூர் கோயில் சுற்றுச்சூழலில் 'நல்லூர் பிரதேச சபை' காரியாலயத்துக்கு முன் பாக 555/19, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணத்தில் அமைந்த வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 793 3929, 077 775 3854 (56553)(4.3.7)

### வீடு விற்பனைக்கு
சாவகச்சேரி கற்குளி வீதி, பாலா தியேட்டர் அருகில் சகலவசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: 076 706 5299 (56517)(5.3.7)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு—
advt@uthayan.com
0215671111

## வைத்தியம்

### வைத்தியம்
தலைமுடி உதிர்தல், இளநரை, பொடுகு, உடல் பருமன் கூட்டுதல்/குறைத்தல், ஆண்மைக் குறைவு, ஆண்/பெண் பாலுறுப்புக்கள் சம்பந்தப் பட்ட பிரச்சினைகள், மலட்டுத்தன்மை, நீரிழிவு, ஆஸ்துமா மற்றும் எல்லாவிதமான நோய்களுக்கும் தீர்வு உண்டு. முற்கூட்டி பதிவை மேற்கொள்ள வேண்டும்.
Dr.Raj. Shanker
Shan'S Helth Care, K.K.S Rd, Kokuvil.
(56443)(3,7,8) தொடர்பு: 077 035 7307

### விசேட பல் வைத்திய நிபுணர்கள் வருகை



★ பல் முக சீராக்கல் (Consultant orthodontist)
★ முக சத்திர சிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்
- மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
- ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
- நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges,Implants)
- வேர்முறை சிகிச்சை(Root canal Filling)
- நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
- பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

சன்றைஸ் மெடி கிளினிக்
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 559 8006 (லதா)

றோயல் மெடிக்கல் சென்ரர்
454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்ஷினி)

## கல்வி

### 19.5 L Coral Water
19.5 L போத்தலில் அடைக்கப்பட்ட சுத்தமான குடி தண்ணீர் உங்கள் வீடு களுக்கு கொண்டு வந்து தரப்படும்.
விலை ரூபா 220/=
நிபந்தனைகளுக்குஉட்பட்டது.
(56036)(5.3.7) தொடர்பு: 077 254 3253

### BIOLOGY
புதன்கிழமை தோறும் காலை 6.15 - 8.15 வரை
2015 Fresh/Revision மாணவர்கள் வரலாம்.
English / Tamil Medium அச்சடித்த தாள் Ik its & Bitz 1972-2014 MCQ Collection
நரேந்திரசிங்கம் மாஸ்டர் - 077 773 0840

### CHEMISTRY
புதன்கிழமை தோறும் மாலை 5.00 - 7.00 வரை
11/02/2015 ஆரம்பம்
Science Corner , யாழ்ப்பாணம்

## ஏனையவை

### எண்ணெய் ஊற்றித்தரப்படும்
தேங்காய் எண்ணெய், நல்லெண்ணெய் ஆலை, கொப்பறா, எள், இலுப்பைப் பருப்பு (விதை கோது உடைத்து) சூரியகாந்தி விதை போன்றவற்றை 3 கிலோ முதல் 3000 கிலோ வரை தனித்தனி இயந்திரத்தில் அரைத்து எண்ணெய்யாக உடன் ஊற்றித்தரப்படும்.
பாலன் மில்லினால் தயாரிக்கப்பட்ட பைகளில் அடைக்கப்பட்ட தரமான அரிசி வகைகளை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றிட நாடவேண்டிய ஒரே இடம். (56552)(3.3.7)
பாலன் மில் மாவடிச் சந்தி, வட்டுக் கோட்டை. Tp:- 021 321 2624

## தேவை




### காணி தேவை
வடக்கு மாகாணத்தின் எந்தப் பகுதியிலும் எந்த அளவுகளிலும் உள்ள காணிகள் தேவை.
(56566)(5.3.7) Tp:- 077 613 5739, 078 913 4927

### பணிப்பெண் தேவை
வீட்டில் தங்கிநின்று பணி புரியக்கூடிய பணிப்பெண் தேவை.
தொடர்பு:
(56570)(12.3.7) 077 936 9505

### வேலையாள்கள் தேவை
மாவடிச்சந்தி, வட்டுக்கோட்டையில் அமைந்துள்ள பாலன்மில்லுக்கு வேலையாள்கள் தேவை.
(56551)(4.3.7) தொடர்பு: 021 321 2624

### வேலையாள்கள் தேவை
கால்நடை தீவன கடை ஒன்றுக்கு பில்போடுபவர் (O/L படித்தவர்) ஒருவரும் உதவியாளர் ஒருவரும் உடன் தேவை.
தொடர்பு:S.K.ஏஜென்சி
இல.128/D, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 6884, 075 047 0828
(56544)(4.3.7)

### முதலீட்டாளர்கள்/பங்குதாரர்கள் தேவை
யாழ்.மண்ணில் நிர்மாணத்துறையில் நீண்டகாலமாக இயங்கிவரும் நிறுவனத்துக்கு முதலீட்டாளர்கள்/பங்குதாரர்கள் தேவை.
தொடர்பு கொள்ள: saryjan2015@gmaill.com
(56559)(12.3.7) 077 586 3298

### வேலைக்கு ஆள்கள் தேவை
ரயர் கடைக்கு ரயர் வேலை தெரிந்தவர்களும் பழக விரும்புவர்களும் தேவை
தொடர்பு: (56582)(5.3.7)
021 222 4523/077 714 8884/077 651 1693

### வாகன சாரதி தேவை
கனரக வாகன சாரதி உடன் தேவை.
(56599)(12.3.7) தொடர்பு: 077 895 4882

### பணிப்பெண் தேவை
யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட வயதான தாயொருவர் கொழும்பில் வசித்து வருகின்றார். அவரைப் பராமரிப்பதற்கு பெண் ஒருவர் தேவை.
சம்பளம்:15000/=
உணவு, தங்குமிடம் இலவசம்
தொடர்பு: 076 606 9775, 077 771 1076 (56524)(4.3.7)

### வேலையாள்கள் தேவை
மேசன், தச்சன், கம்பி வேலையாளர், கூலியாள், சமையற்காரர்கள் கிளிநொச்சியில் வேலைக்கு உடனடியாகத் தேவை.
(56543)(4.3.7) தொடர்பு: 071 145 8583

### சலூன் வேலைவாய்ப்புக்கள்
யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள சொகுசுவசதிகள் கொண்ட எமது சலூனுக்கு திறமையும் அனுபவமும் உள்ள ஆண் /பெண் முடிதிருத்துவோர் தேவை.
தங்குமிடவசதிகள் உண்டு
சம்பளங்கள் கமிசன்கள் (தரகுப்பணம்)
தொடர்பு: 076 759 3357

### வேலையாள்கள் தேவை
அரிசி ஆலையில் வேலை செய்வதற்கு ஆண், பெண் தேவை.
நேரில் வரவும்.
தொடர்பு: இராசம் அரிசி ஆலை,
மின்சார நிலைய வீதி,
கல்வயல். (56587)(4.3.7)

## வாடகைக்கு

### வீடு வாடகைக்குண்டு
"தங்கவாசம்" இல்லம், ஆலங்குழாய், கல்வளை வீதி, சண்டிலிப்பாயில் நல்ல வீடு வாடகைக்குண்டு.
(56406)(12.3.7) தொடர்பு: 077 604 0523

### வீடு வாடகைக்கு
மானிப்பாயில் பிரபல மூன்று பாட சாலைகளுக்கு அண்மித்ததாக சகலவசதிகளுடனும் வீடு வாடகைக்கு உண்டு.
(56570)(5.3.7) தொடர்பு: 071 838 1119

### வீடு வாடகைக்கு
யாழ்ப்பாணம், சுண்டுக்குளி பகுதி அச்சகவீதியில் அமைந்துள்ள சகல வசதிகளுடனான வீடு வாடகைக்கு உள்ளது. இவ்வீடு சென்ஜோன்ஸ் கல்லூரி விடுதித் தொகுதிகள், பஸ்தரிப்பு நிலையம், பெரிய கோயில் என்பவற்றுக்கு சமீபமாக அமைந்துள்ளது. சிறிய குடும்பம் விரும்பத்தக்கது.
(56638)(4.3.7) தொடர்பு: 077 774 1750, 077 949 8889

### நாவற்குழி வீடு வாடகைக்கு
A9வீதி முகவரியில் வடமாகாண சபைக் கும் லங்காஅசோக் லேலண்ட் கம்ப னிக்கும் இடையில் மாடி வீடு ஒன்றின் கீழ்த்தளம் வாடகைக்கு உண்டு .
(56533)(3.3.7) தொடர்பு: 077 331 7356

### வாடகைக்குண்டு
தாவடிச் சந்தியில் இயங்கக் கூடிய நிலையிலுள்ள Net Cafe வாடகைக்கு உண்டு. மேலதிக விவரங்களுக்கு
(56539)(3.5.7)
Tp:- 077 015 8124, 076 791 5296

### கடை வாடகைக்கு
அரியாலை சனசமூக நிலைய கட்டடத் தொகுதியில் அமைந்துள்ள கடைகளில் ஒன்று வாடகைக்கு வழங்கப்படவுள்ளது. எனவே வாடகைக்குப் பெற்றுக் கொள்ள விரும்புவோர் கடையை நேரில் பார்வையிட்டு, நிலையத்துக்கு வழங்கக்கூடிய வாடகைப் பணத்தை எழுத்து மூலம் கையளிக்கவும். முடிவுத் திகதி - 22.02.2015
தொடர்புகளுக்கு: 0777 513 099/0776 453 862
(56568)(12.3.7) 134, புங்கன்குளம் வீதி, அரியாலை.

உதயன் விளம்பரத் தொடர்புக்கு—
advt@uthayan.com
0215671111

### அறைகள் நாள் வாடகைக்கு
ஒருவருக்கு 600/=, இருவருக்கு 1500/=, நால்வருக்கு 2500/=,
Hotel Villa City 422, Galle Road.
(C19607)(12.3.7) வெள்ளவத்தை. 072 255 2222

### வாடகைக்கு
பல்கலைக்கழக மாணவிகளுக்கு, சிறிய குடும்பத்துக்கு கொக்குவில் ஆடியபாதம் வீதிக்கருகில் அறைகள் உண்டு.
(56374)(12.3.7) தொடர்பு: 077 403 0493

### குத்தகைக்கு
யாழ்.நகரின் மத்தியில் இல.187/4, ஆஸ்பத்திரி வீதியில் உள்ள 1¼ பரப்புக் காணி குத்தகைக்குண்டு.
(56378)(12.3.7) தொடர்பு: 077 224 7865

### வீடு வாடகைக்கு உண்டு
கே. கே. எஸ் வீதி, சுன்னாகத்தில் கொமர்ஷல் வங்கிக்கு அருகில் சகல வசதிகளுடன் கூடிய வீடு, வாகன தரிப்பிட வசதி உட்பட வாடகைக்கு உண்டு.
TP:-
(56504)(5.3.7) 077 298 9043/021 2240 796

### வீடு வாடகைக்குத் தேவை
கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த, கொழும்பில் இருந்து வந்துள்ள ஓய்வுபெற்ற இரு அரச பெண் ஊழியர்களுக்கு நல்லூர் முருகன் கோயிலை அண்மித்து அதன் சுற்றாடலில்ஒரு வீடு அல்லது பிரத்தியேகமான அனக்ஸ் தேவை
(56526)(3.7.5) தொடர்பு: 077 100 0680

## மணமகள் தேவை

### மணமகள் தேவை
யாழ் இந்து கௌரவ குடும்பம், 1982 இல் பிறந்த, மூல நட்சத்திரம் பாவம் 58 கொண்ட கொழும்பில் விரிவுரையாளராகப் பணிபுரியும் மணமகனுக்கு தகுந்த மணமகளைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.
(56460)(3.7.5) தொடர்பு: 077 923 7707

# Settle Down in CANADA



**Qualifications**
If you,
- Are above 18 years
- Have English knowledge
- Have worked in a private or government institute for 3 years

*It's more than enough!*

STONE GROUP CORPORATION

IELTS courses have been organized

**Part Time Jobs**

Professionals in Construction field have a large number of Part Time Jobs

**Register today...**

Priority for Doctors, Nurses, Engineers and Professionals in Construction field

**The Miracle**
(Near *Maha Vidyalaya*) Kandy Rd,
Kalagedihena, Nittambuwa.
0334950047 / 0727866066



சர்வதேச அங்கீகாரம் பெற்ற விமானப் பயணச்சீட்டு முகவர் நிறுவனமான IATA

**METRO**
Travles & Tours (Pvt) Ltd.

எமது சேவைகள்.....
- மிகக் குறைந்த விலையில் சகல நாடுகளுக்குமான விமான பயணச்சீட்டுக்கள்.
- இந்தியா, மலேசியா, தாய்லாந்து, சீனா ஆகிய நாடுகளுக்கான விசா சேவைகள்.
- சகல நாடுகளுக்குமான பயணக் காப்புறுதிகள்
- உள்ளூர், வெளியூர் பிரயாணிகளுக்கான சுற்றுலா வசதிகள்
- குழு பிரயாண வசதிகள்
- வெளியூர் பிரயாணிகளுக்கு விசா புதுப்பித்தல்
- சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்பப்படிவம் பூரணப்படுத்தி ஒழுங்கமைத்தல்.
- விமானச் சீட்டுக்களுக்கான விசேட சலுகைகள் இருவழிப் பயணத்துக்கானது.

| | | | |
|---|---|---|---|
| சென்னை | - 23,800/= | திருச்சி | - 22,000/= |
| மதுரை | - 17,500/= | லண்டன் | - 85,500/= |
| சுவிஸ் | - 73,300/= | | |

இவை அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள இன்றே நாடுங்கள்.

**METRO TRAVELS & TOURS (Pvt) Ltd,**
#272/1, Stanley Road, Jaffna, Sri lanka.
Tel: +940212224647, +94 212217199, +94 777881115
Email: Jesurah@metrotravels.lk (18.3.7)



**எதிர்காலத்தில் பசுமை உலகம் (வரைவுள்ளது)**
**சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் நடவடிக்கைகள்**

இலங்கையில் புதுமைகளைப் புகுத்தி வரும் முன்னணி நிறுவனமான எதிர்காலத்தில் பசுமை உலகம் எனும் நிறுவனம் தனது செயற்றிட்டங்களாக மரவளர்ப்பு, விவசாயம், விலங்கு வேளாண்மை, கைத்தொழில் ஆகிய துறைகளை முன்னெடுத்து வருகின்றது. அந்த வகையில் கைத்தொழில் துறையை ஊக்குவிக்கும் முகமாகவும், உள்ளூர் உற்பத்திகளை வெளியிடங்களுக்கு சந்தைப் படுத்தும் நோக்குடனும் சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் நடவடிக்கைகளை வடக்கு கிழக்கு மாகாணங்களில் அறிமுகப்படுத்தியுள்ளது. இத்துறையினை விரிவாக்கும் பொருட்டு அனுபவம் வாய்ந்த ஊழியர்கள் தேவைப்படுவதனால் ஆர்வமுள்ளவர்கள் 076 531 0421 என்னும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளும்படி வேண்டப்படுகின்றீர்கள்.

**திட்ட அமுலாக்கல் பிரிவு**
**எதிர்காலத்தில் பசுமை உலகம் வரைவுள்ளது.**
(56569)(4.3.7)


## மகளிர் தினத்தில் விளையாட்டுப் போட்டி

தென்மராட்சி,பெப்.8
சாவகச்சேரி நகர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் எதிர்வரும் மார்ச் 8ஆம் திகதி நடைபெறவுள்ள சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு மகளிர்களுக்கிடையிலான பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகளை நடத்தவுள்ளனர்.

இதற்கான விண்ணப்பங்கள் சங்க அங்கத்தவர்கள் அவர்களின் பெண் பிள்ளைகள் ஆகியோரிடம் இருந்து கோரியுள்ளனர்.

பாரம்பரிய விளையாட்டுக்களான கிடுகு பின்னுதல், தேங்காய் துருவுதல், முட்டி உடைத்தல், ஓட்டப் போட்டிகள் மற்றும் பல்வேறு போட்டிகளை நடத்த ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

வயது அடிப்படையில் இரு பிரிவுகளாகப் போட்டிகள் நடத்தப்படவுள்ளதாகச் சங்கத் தலைவி திருமதி ம.கீர்த்திநாதன் தெரிவித்தார். (ஒ-9)

## ஆலயக் கோபுரப் பணி தொடர்கிறது

சாவகச்சேரி,பெப்.8
சாவகச்சேரி வடக்கு அருள்மிகு பன்றிக்கேணி கந்தசுவாமி தேவஸ்தானத்தில் கோபுரம் அமைக்கும் பணி நடைபெற்று வருகின்றது. மூன்று தளங்களைக் கொண்டதாக இந்தக் கோபுரம் அமைக்கப்பட்டு வருவதாக ஆலய அறங்காவலர் தெரிவித்தார்.

சுமார் ஒரு கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்படும் இந்தக் கோபுரம் பாவைகள் வைக்கப்பட்டுப் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

நிறம் தீட்டும் பணி மட்டும் இருப்பதாகவும் இப்பணிகள் நிறைவடைந்ததும் பங்குனி மாதம் கோபுரத்திற்கான கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்திய சிற்பக் கலைஞர்கள் கோபுரப் பணிகளில் ஈடுபட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (ஒ-131)

## மாதர் கழகப் பொதுக் கூட்டம்

கைதடி,பெப்.8
கைதடி வளர்மதி மாதர் கழகத்தின் விசேட பொதுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு கைதடி வளர்மதி கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் முக்கிய விடயங்கள் பல கலந்துரையாடப்பட இருப்பதனால் மாதர் கழக அங்கத்தவர்களைக் கலந்து கொள்ளுமாறு அதன் [illegible] கேட்டுள்ளனர். (ஒ-288)


# மங்கலகரமான திறப்பு விழா

நாராயணா கட்டடப் பொருள்கள் வர்த்தக நிறுவனத்தின் இன்னுமோர் பிரத்தியேக காட்சியறை

**இல 581, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில்**

# HOUSE OF CERAMIC

**வர்த்தக நிறுவனம் ஆரம்பிக்கப்படவுள்ளதால்**
**நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

காலம்: 09.02.2015 (திங்கட்கிழமை)
நேரம்: காலை 10.00 மணி







(சி19554) (45.3.7)

இறக்குமதி செய்யப்பட்ட மாபிள்கள், குளியலறை சாதனங்களுக்கான பிரத்தியேக காட்சியறை

இறக்குமதி செய்யப்பட்ட 2 x 2 Single Layer, Double Layer

முற்றிலும் வர்ணமயமான டிஜிற்றல் சுவர் மாபிள்கள், நில மாபிள்கள், நவீன குளியலறை சாதனங்கள்

JAT ஸ்தாபனத்தினரின் உலகத்தரம் வாய்ந்த வர்ணப் பூச்சுக்கள், Permoglaze Paint

தரத்தில் சிறந்த தூரிகைகள் (Brush Master), வாணிசுகள் போன்றவற்றிற்கு நாடவேண்டிய ஒரே இடம்

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்**: மற்றவர்களை நம்பி எந்த வேலையையும் ஒப்படைக்கக் கூடாது என்று முடிவெடுப்பீர்கள். உறவினர்களில் உண்மையானவர்களைக் கண்டறிவீர்கள். நட்பால் ஆதாயம் உண்டு. உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள்.

**இடபம்**: முக்கிய பிரமுகர்களைச் சந்திப்பீர்கள். பயணங்களால் புத்துணர்ச்சி பெறுவீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களை கவர சலுகைகளை அறிவிப்பீர்கள். உத்தியோகத்தில் மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும்.

**மிதுனம்**: குடும்பத்தினரின் எண்ணங்களைக் கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். சொத்துப் பிரச்சினைக்குச் சுமுக தீர்வு காண் பீர்கள். வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும். உத்தியோகத்தில் உங்கள் கருத் திற்கு ஆதரவு பெருகும்.

**கடகம்**: சோர்வு நீங்கி உற்சாகமடைவீர்கள். எதிர்பார்த்திருந்த தொகை கைக்கு வரும். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**சிங்கம்**: உதவி கேட்டு உறவினர்களும் தர்மசங்கடத்திற்கு ஆளாக்குவார்கள். நீங்கள் ஒன்று பேசப் போய் மற்றவர்கள் அதை வேறுவிதமாகப் புரிந்து கொள்வார்கள். யாரையும் முழுமையாக நம்ப வேண்டாம்.

**கன்னி**: மறதியால் விலை உயர்ந்த பொருள்களை இழக்க நேரிடும். திடீர் பயணங்கள், செலவுகள் தினறுவீர்கள். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் வந்து நீங்கும்.

**துலாம்**: உங்களைத் தவறாக நினைத்துக் கொண்டிருந்தவர் களின் மனம் மாறும். உத்தியோகத்தில் உங்களு டைய கோரிக்கையை உயரதிகாரிகள் ஏற்றுக் கொள்வார்கள்.

**விருச்சிகம்**: உணர்ச்சி பூர்வமாகப் பேசுவதை விட்டு அறிவு பூர்வமாகப் பேசுவீர்கள், செயற்படுவீர்கள். திடீர் முடிவுகள் எடுப்பீர்கள். உத்தி யோகத்தில் சக ஊழியர்கள் பாராட்டும்படி நடந்து கொள்வீர்கள்.

**தனுசு**: இழுபறியாக இருந்த வேலைகள் முடியும். புதியவரின் நட்பால் உற்சாகமடைவீர்கள். சிலர் உங்களை நம்பி பெரிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள்.

**மகரம்**: யாரை நம்புவது என்கிற மனக்குழப்பத்திற்கு ஆளாவீர்கள். உங்களைப் பற்றி தவறாக சிலர் பேசினாலும் அதற்காக வருத்தப் படாதீர்கள். உத்தியோகத்தில் பணிகளை முடிப்பதில் இழுபறி நிலை ஏற்படும்.

**கும்பம்**: தன்னம்பிக்கையுடன் எதையும் செய்யத் தொடங்குவீர்கள். பயணங்களால் மகிழ்ச்சி தங்கும். உத்தியோகத்தில் உங்களின் திறமைகள் வெளிப்படும்.

**மீனம்**: எதிர்பாராத பணவரவு உண்டு. உங்களுடைய ஆலோசனைகளை எல்லோரும் ஏற்றுக் கொள்வார்கள். சில விஷயங்களில் பெருந்தன்மையான முடிவுகள் எடுப்பீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள்.

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 4 | | | 9 | | 3 | | 8 |
| | | | | | 5 | | | 1 |
| 8 | 9 | | 3 | | | 6 | | |
| | | 8 | | | 9 | 4 | | |
| 3 | 1 | 6 | | | | 9 | 5 | 7 |
| | | 9 | 5 | | | 8 | | |
| | | 2 | | | 3 | | 6 | 4 |
| 6 | | | 4 | | | | | |
| 1 | | 4 | | 6 | | | 8 | 3 |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 5 | 2 | 6 | 8 | 4 | 9 | 7 | 3 |
| 3 | 7 | 9 | 1 | 5 | 2 | 4 | 6 | 8 |
| 8 | 4 | 6 | 3 | 9 | 7 | 1 | 2 | 5 |
| 2 | 6 | 8 | 4 | 1 | 5 | 3 | 9 | 7 |
| 4 | 1 | 7 | 8 | 3 | 9 | 2 | 5 | 6 |
| 9 | 3 | 5 | 7 | 2 | 6 | 8 | 1 | 4 |
| 7 | 9 | 4 | 2 | 6 | 3 | 5 | 8 | 1 |
| 5 | 8 | 3 | 9 | 7 | 1 | 6 | 4 | 2 |
| 6 | 2 | 1 | 5 | 4 | 8 | 7 | 3 | 9 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங் கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள்; இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## நாளை

தை-26
திங்கட்கிழமை
09.02.2015

திதி: பஞ்சமி: பி.ப.02.58 வரை
நட்சத்திரம்: அத்தம் மு.ப.09.23
சுபநேரம்: 12.35-02.05 வரை
இராகுகாலம்: 08.05-09.35 வரை

உ
சிவமயம்



# புதுமனைப் புகுவிழா அழைப்பு

நிகழும் சுபமங்களகரமான ஜய வருடம் தைத்திங்கள் 26ஆம் நாள் நாளை (09.02.2015)
திங்கட்கிழமை காலை 9.44 மணிமுதல் 10.07 மணிவரையுள்ள
அத்த நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய சுபமுகூர்த்த சுபவேளையில்
எம்மால் புதிதாக அமைக்கப்பெற்ற

# கஜிபன் இல்லம்

இறைவன் திருவருளுடனும் பெரியோர்கள் ஆசியுடனும் கிருஹப் பிரவேசம் செய்ய இருப்பதால்
அவ்வேளை தாங்கள் தங்கள் குடும்பசமேதரராய் வருகைதந்து இல்லத்தை வாழ்த்தி
தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து நிகழ்வைச் சிறப்பிக்குமாறு
அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட
அழைப்பாக
ஏற்றுக்கொள்ளவும்

தங்கள் நல்வரவை இனிதே விரும்பும்

த.குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்
த. குமாரசாமி அன் சன்ஸ்
திரு. திருமதி விமலக்குமார்
குடும்பத்தினர்.

இல. 321, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

# கரவைச் சுடர் விளையாட்டுக் கழக மைதானத்தைப் புனரமைத்துத் தருக

### கழக வீரர்கள் வேண்டுகோள்

கரவெட்டியிலுள்ள கரவைச் சுடர் விளையாட்டுக்கழக மைதானத்தைப் புனரமைத்துத் தருமாறு அவ் விளையாட்டுக் கழக வீரர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

1985 ஆம் ஆண்டு பிரேமதாஸ குடியேற்றத்தில் அந்தப் பகுதியில் மக்களுக்கு வீடுகளும் மைதானமும் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. ஆனால் இற்றைக்கு 30 வருடங்களைக் கடந்துள்ள போதும் குறித்த மைதானத்துக்கு எதுவித உபகரணங்களும் வழங்கவில்லை என்று விளையாட்டுக் கழகத் தலைவர் கூறியுள்ளார்.

அந்த மைதானம் வீடுகளுக்கு மத்தியில் அமைந்துள்ளதால் விளையாட்டில் ஈடுபடும்போது பந்து அயல் வீடுகளுக்குச் செல்வதால் வீட்டின் உரிமையாளர்களுடன் பிரச்சினைகளில் ஈடுபடவேண்டிய நிலையும் உருவாகிறது. இதனைத் தடுப்பதற்கு சுற்று மதில் மற்றும் வலைகள் இடப்படுவதால் பந்து வெளியில் செல்வது தடைப் படும். இதற்கு ஏழரை லட்சம் ரூபா தேவைப்படுகிறது என்பதனைக் குறிப்பிட்டு வட மாகாண அமைச்சர்களுக்கும் கடிதங்கள் அனுப்பப் பட்டுள்ளன.

தற்போது ஜனாதிபதி விளையாட்டுக்கழகத்தால் நடத்தப் பட்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் 37 கழகங்கள் பங்குபற்றி 7 ஆவது இடத்தை எமது கழகம் பெற்றுள்ளது. எனவே எமக்கு சுற்றுமதில் அமைப்பதற்கு உரியவர்கள் கவனம் செலுத்தி எமது வீரர்களின் விளையாட்டை மேம் படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (வ-422)

# தொலைத்தொடர்பு தூணால் பயணிப்போர் சிரமம்



மன்னார், பெப்.8

வீதிக்கு அருகில் தொலைத் தொடர்புக்கான தூண் அமைக்கப்பட்டுள்ளதால் பயணிகள் அசௌகரியங்களுக்கு உள்ளாகி வருவதாக மன்னார், சாவற்கட்டு சிறிய குருமட வீதிக்கு அருகாமையில் வசிக்கும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

மன்னார் சிறிய குருமட வீதியின் ஊடாக பெரிய கமம் பகுதிக்குச் செல்லும் வளைவில் வீதிக்கு அருகாமையில் டெலிக்கொம் நிறுவனத்துக்குச் சொந்தமான தூண் அமைக்கப்பட்டுள்ளது. இந்தத் தூண் வீதிக்கு மிக அருகாமையில் உள்ளதால் வீதியின் வளைவில் திரும்பும் பயணிகள் பல அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். வாகனங்களைக் குறித்த வளைவில் செலுத்தும்போது இட பற்றாக் குறை காரணமாக விபத்துக்கள் ஏற்பட வாய்ப்புக்கள் உள்ளன. ஏற்கனவே அந்தப் பகுதியில் விபத்துக்கள் பல இடம் பெற்றுள்ளன. குறிப்பாக பாடசாலை மாணவர்கள் தாம் இவ் வீதியூடாகச் சென்று வரும் நிலையில் குறித்த தூண் அமைக்கப்பட்டுள்ள இடத்தில் விபத்துக்கள் ஏற்படுவதற்கு ஏதுவாக உள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

எனவே குறித்த தூணுக்குப் பொறுப்பான அதிகாரிகள் அந்தத்தூணை அவ்விடத்திலிருந்து சற்று அகற்றி மக்கள் அசௌகரியம் இன்றி பயணிக்க ஏற்பாடுசெய்துதருமாறு அந்தப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (வ)




CIMA
Chartered Institute of Management Accountants
வகுப்பறையில் இருந்து
பணிப்பாளர் சந்திப்பறை வரை
துரிதமாக.
சத்துரிக்கா குணரட்ன, 20 வயது
நிதியியல் பயிற்சி பெறுபவர்
CIMA தேர்ச்சி பெற்றவர்
அனுஜ பீரிஸ், 19 வயது
சிரேஷ்ட கணக்குப் பரிசோதகர்
CIMA தேர்ச்சி பெற்றவர்
அவிஷ்கா பீரிஸ், 20 வயது
நிதி ஆய்வாளர்
CIMA தேர்ச்சி பெற்றவர்
எமக்கு இரட்டிப்பு உயர்வு கிடைத்தது!
"க.பொ.த. சா/த முடிந்ததும் நாம் தொழில் சார் கல்வி ஒன்றினை கற்றிட எண்ணினோம்.
உலகெங்கும் பிரபலமான CIMA வில் இணைந்து கொண்டோம்.
இன்று எமது நண்பர்கள் இன்னும் கல்வி கற்கிறார்கள், ஆனால் நாம் சன்மானம் பெறக்கூடிய தொழில் வாய்ப்புகளை நோக்கி மெதுவாக அடி வைத்து நகர்கிறோம்.
க.பொ.த. சா/த முடிந்ததும் CIMA கற்பது இரட்டிப்பு உயர்வு கிடைத்தது போல.
நீங்கள் நேரத்தையும் மீதப்படுத்திக்கொண்டு துரிதமாக முன்னேறிச் செல்வீர்கள்."
எனது ஆசை ▶ CIMA ▶ எனது தொழில்
CIMA - புதிய தலைமுறை தொழில்சார் வியாபார கல்வித் தகைமை.
CIMA கொழும்பு T 2503880 E colombo@cimaglobal.com
CIMA கண்டி T 081 7393910/2227883 E kandy@cimaglobal.com
www.facebook.com/CIMASriLanka
Follow@CIMASriLanka
CGMA


Panasonic
உங்கள் இரவுகள்
ஒளிமயமாக
பெனசொனிக் CFL
மின்குமிழ்கள்
Panasonic
Panasonic
ஒரே
CFL
மின்குமிழ்
3
வருட
உத்தரவாதத்துடன்
பெனசொனிக் CFL மின்குமிழ்கள்
சொப்ட்லொஜிக் காட்சியறைகள் மற்றும் நாடு பூராகவும் உள்ள
சில்லறை வியாபாரிகளிடமும் பெற்றுக்கொள்ளலாம்.
மேலதி விபரங்களுக்கு அழையுங்கள் 0777 345 760 | 0773 850 481 | 0777 328 565
Hotline
011 5 705 705
softlogic

# விளையாட்டுக் கழகங்கள் 12 இற்கு உபகரணங்கள்

வவுனியா பிரதேசத்தில்



வவுனியா, பெப்.8

வவுனியாவில்விளையாட்டுத்திறனை ஊக்குவிப்பதற்காக வட மாகாண சபை உறுப்பினர் மயில்வாகனம் தியாகராசாவால் நிதி உதவி வழங்கப்பட்டது.

வட மாகாணசபை உறுப்பினர் மயில்வாகனம் தியாகராசாவுக்கு ஒதுக்கப்பட்ட பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதியிலிருந்து வவுனியா பிரதே சத்தில் உள்ள 12 விளையாட்டுக் கழகங்களுக்கு நிதி உதவிகள் வழங்கப்பட்டன.

புதுக்குளம் சித்திவிநாயகர் விளையாட்டுக்கழகமைதானத்தைத்திருத்தம் செய்ய 50 ஆயிரம் ரூபாவும் தோணிக்கல் விளையாட்டு மைதானத்திருத்தம் செய்ய 50 ஆயிரம் ரூபாவும் கூமாங்குளம் சுப்பஸ்ரார் விளையாட்டுக்கழகம், ஆச்சிபுரம் பீலீஸ் விளையாட்டுக்கழகம், சிதம்பரபுரம் சக்தி விளையாட்டுக்கழகம், வைரவ புளியங்குளம் ஜங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம், சிதம்பரபுரம், ஆசிகுளம் சந்தி ரோதயா விளையாட்டுக் கழகம், மூன்று முறிப்பு கோட் டஸ் விளையாட்டுக் கழகம், ஆசிகுளம் உதய சூரியன் விளையாட்டுக் கழகம், பாலா மைக்கல் ஜங்பைற் விளை யாட்டுக் கழகம், கள்ளிக்குளம் விளையாட்டுக்கழகம், கருப் பணிச்சாங்குளம் விளையாட்டுக் கழகம், காத்தார் சின்னக்குளம் ஆகிய கழகங் களுக்கு வவுனியா பிரதேச செயலாளர் மு.உதயராசா முன்னிலையில் விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டன. (வ-402)

# பாக்கு நீரிணையை நீந்திக் கடந்த நவரத்தினசாமிக்கு நினைவுச்சிலை

தென்மராட்சி, பெப்.8

பாக்கு நீரிணையை முதல் முதலாக நீந்திக் கடந்த மு.நவரத்தினசாமிக்கு நினைவுச் சிலை நிறுவப்படவுள்ளது. கடந்த 1954 மார்ச் 25 ஆம் திகதி நீச்சலை ஆரம்பித்த தொண்டமானாறு பாலத்துக்கு அருகில் இதற்கான அடிக்கல் கடந்த 3 ஆம் திகதி நடப்பட்டது.

இந்தச் சிலை, பாக்கு நீரிணையை நீந்திக் கடந்து சாதனை படைத்த நாளின் அறுபதாவது வருட பூர்த்தி தினமான எதிர் வரும் மார்ச் 25 ஆம் திகதி திறந்து வைக்கப்படவுள்ளதாக ஏற் பாட்டாளர்கள் தெரிவித் தனர்.

அடிக்கல் நடும் நிகழ்வு மருத்துவர் மயிலேறும் பெருமாள் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் சாதனையாளர் நவரத்தினசாமியின் மகன் இராமச்சந்திரன், இலங்கை வங்கியின் ஓய்வு நிலை பிராந்திய முகாமை யாளர் சீவரத்தினம், கச்சாய் வினோபா சனசமூக நிலைய நிறுவுநரும் சாதனையாளரின் நண்ப ருமாகிய சோதிநாதன், சாவக்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத் தலைவர் வ.ஶ்ரீ.பிரகாஸ் உட்பட வடம ராட்சி தென்மராட்சி பிரதேச மக்கள் கலந்து கொண்டனர். (வ-9)






# கூ.சங்க புதிய செயற்பாடுகள் அங்கத்தவர்கள் தகவலுக்கு

வரணி, பெப்.8

தென்மராட்சி கிழக்கு பல் நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 2015 ஆம் ஆண்டுக்கான புதிய செயற்பாடுகள் பொது அங்கத்தவர்களின் தகவலுக்கு அறிவிக் கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை வீதிக்கு அருகாமையில் மில் காணியில் புதிய கட்டடத் தொகுதி அமைத்தல், புதிய லொறி மற்றும் புதிய ஹன்ரர் வாகனங்கள் கொள் வனவு, தேங்காய் எண்ணெய் ஆலை அமைத்தல், விவசாய உள்ளீடுகள் விற்பனை நிலையம் அமைத்தல், கிளைக் கட்டடங்கள் புனரமைத்தல், மொத்த நிலைய கட்டடம் அமைத்தல், கிளை நிலையங்களுக்கான கட்டடங்கள் அமைத்தல், கட்டடப் பொருள் விற்பனை நிலையம் அமைத்தல், எழுதுமட்டுவாழ் கிழக்கு கிளை இல 14 க்கு நிரந்தரக் கட்டடம் அமைத்தல், முகவர் அந்தஸ்தைப் பெற்று சங்க செயற்பாட்டை விரிவுபடுத்தல், தற்போது இயங்கி வரும் கிளைகளை சிறப்பு விற்பனை நிலையங்களாக அமைத்தல், கெற்பேலி தவசிகுளம் கிளை நிலையம் அமைத்தல், சங்க எல்லைப் பரப்பினுள் வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட ஜி.சீ.ஈ.(சா/த) பரீட்சையில் திறமைச்சித்தி பெற்ற ஐந்து மாணவர்களுக்கும் சங்கப் பணியாளர்களின் பிள்ளைகளில் ஒருவருக்கும் ரூபா 2000 வீதம் அன்பளிப்பு வழங்கல் என்பனவே குறித்த திட்டங்களாகும். (வ-122)

# கூட்டமைப்பின் உறுப்பினர்களுக்கு மோ.சைக்கிள் இதுவரை இல்லை

**வடமாகாண உள்ளூராட்சி சபைகளில் கடமையாற்றும்**

வடமாகாணத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளின் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உறுப் பினர்களுக்கு மோட்டார் சைக் கிள்கள் இதுவரை வழங்கப்படவில்லை என்று உறுப்பினர்களால் ஆதங்கம் தெரிவிக்கப்பட்டது.

யாழ். மாவட்ட அரச திணைக்கள வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு மோட்டார் சைக் கிள்கள் வழங்கப்பட்ட காலகட்டத்தில் யாழ். மாவட்ட உள்ளூ ராட்சி சபைகளின் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் உறுப்பினர்களுக்கும் மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

தமக்கும் மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட் டமைப்பின் உறுப்பினர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டபோது விரைவில் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. ஆனால் இதுவரை மோட்டார் சைக்கிள்கள் வழங்கவில்லை என்று உறுப்பினர்கள் கவலை தெரிவித்தனர். (வ-9)

# பாரம்பரிய வைத்தியர்களின் விசேட கண்டுபிடிப்புக்கு உரிமைப்பத்திரம்

கொழும்பு, பெப்.8

பாரம்பரிய வைத்தியர்களின் விசேட கண்டுபிடிப்புகளுக்கு உரிமைப் பத்திரம் வழங்கப் படும் என்று அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்திருக்கிறார். பாரம்பரிய வைத்தியர்களின் விசேட கண்டுபிடிப்புக்கள் தொடர்பாகத் தேவைப்படும் சந்தர்ப்பங்களில் உரிமைக்கான அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக் கொடுக்க வேண்டியுள்ளதாக சுகாதார மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர் சுதேச வைத்திய அமைச்சின் அதிகாரிகளுக்குத் தெளிவு படுத்தியுள்ளார். (வி)

241வது மைல்கல்



# சங்கானை

பல வருடங்களுக்கு முன்பு யாழ்ப்பாணத்தில் இருந்த ஒரு சிறிய கிராமம் எப்போதும் பரபரப்பாக இயங்கும் சந்தை அமைப்பினைக் கொண்டிருந்தது எனவும், அங்கு வந்த இந்திய வியாபாரிகள் பாரிய அளவிலான சங்குகளையும் யானைகளையும் பரிமாறியதாகவும், இதன் காரணமாகவே பிற்காலத்தில் சங்கு, யானை ஆகிய இரண்டு சொற்களின் இணைவாக "சங்கானை" என இவ்விடம் பெயர் பெற்றதாகவும் கூறப்படுகின்றது. இங்குள்ள பாரம்பரிய சந்தைத் தொகுதியானது சங்கு மற்றும் யானைப் பரிமாற்றத்திற்கு மிகவும் பிரசித்தி பெற்ற இடமாக முன்னைய காலத்தில் திகழ்ந்துள்ளது.

தற்போது சங்கானை துரிதமாக அபிவிருத்தி அடைந்து வரும் நகரமாகும். இங்கு வாழும் மக்களுக்கு நிதி ஸ்திரத்தன்மையுடைய மிகச்சிறந்த வங்கிச் சேவையினை வழங்கும் நோக்குடன், உலகின் சிறந்த 1000 வங்கிகளின் வரிசையில் தொடந்து நான்கு வருடங்களாக இடம் பிடித்த இலங்கையின் ஒரே வங்கியான கொமர்ஷல் வங்கி, இன்று காலை 9.45 மணியளவில் கூடும் சுபவேளையில் இல.146A, பொன்னாலை வீதி, சங்கானையில் புதிய வங்கிக் கிளை திறந்து வைக்கப்படுகிறது.

தொலைபேசி : 021 2251202-3

COMMERCIAL BANK







சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் நிறுவுநர் அமரர் வி.தாமோதரம்பிள்ளை நினைவுதினமும் தாமோதரன் மலர் வெளியீடும் கடந்த வியாழக்கிழமை கல்லூரி அருணாசலம் மண்டபத்தில் நடைபெற்றன.

கல்லூரி பிரதி அதிபர் ந.பாலச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சின் உதவிச் செயலாளர் க.தெய்வேந்திர ராஜாவும் சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமாரும் கலந்து கொண்டனர்.

நிறுவுநர் நினைவுச் சிலைக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டது. கல்லூரியின் வருடாந்த வெளியீடான தாமோதரன் மலரை முதன்மை விருந்தினர் வெளியிட யாழ்ப்பாணம் விவசாயத் திணைக்கள விதைகள் அத்தாட்சிப்படுத்தும் சேவை நிலைய பொறுப்பதிகாரி அ.பரணிதரன் பெற்றுக் கொண்டார் நிகழ்வில் கலந்து கொண்டோரையும் இங்கு காணலாம். (வ-9)









சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியின் ஆரம்பப் பிரிவு மாணவர்களின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் நடைபெற்றது. நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக ஐக்கிய ராஜ்ஜியத்தில் பொறியியலாளராகப் பணியாற்றும் கல்லூரி பழைய மாணவர் பேரம்பலம் சிவராஜா கலந்து கொண்டார். (வ-9)



கைதடி மேற்கு சனசமூக நிலையத்தின் சுவிஸ் கிளையினர் கைதடியைச் சேர்ந்த இருதய நோயாளியான குழந்தையின் மருத்துவச் செலவுக்கென அனுப்பிய ஒரு லட்சத்து 63 ஆயிரம் ரூபா அண்மையில் சனசமூக நிலையத் தலைவரிடம் கையளிக்கப் பட்டது. (வ-9)





கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டிகளின் மரதன் ஓட்டப் போட்டிகள் அண்மையில் இடம்பெற்றன.
இதன்போது ஆண்கள் 8 கிலோ மீற்றர் தூரத்தையும் பெண்கள் 4.5 கிலோ மீற்றர் தூரத்தையும் ஓடி முடித்தனர். (வ-9)





உடுவில் கற்பக விநாயகர் சனசமூக நிலைய இளைஞர் அணியின் அனுசரணையுடன் குறித்த பகுதிக்கு உட்பட்ட 85 சிறார்களுக்குப் பாடசாலை உபகரணங்கள் அண்மையில் வழங்கப்பட்டன. அத்துடன் குருதிக்கொடையாளிகளுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. இலங்கை மனித உரிமை இயக்கத்தின் சமூக ஆர்வலர்கள் ரி.ஸ்ரீதரன், எஸ்.அருளானந்தம் ஆகியோர் இதனை ஏற்பாடு செய்திருந்தனர். (வ-4)



கரவை இளைஞர்களால் கடந்த மார்கழிமாதம் கரோலின் மூலம் சேகரிக்கப்பட்ட நிதி மூலம் திருஇருதயக் கல்லூரியிலுள்ள வறுமைக் கோட்டுக்கு உட்பட்டமாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வு கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது. இதில் கரவை கன்னியர் மடத் தலைவி, பாடசாலை அதிபர் ஆகியோர் விருந்தினர்களாகக் ககலந்து கொண்டனர். (வ-422)








அருட்கலாநிதி வின்சன் பற்றிக் அடிகளார் எழுதிய 'மன ஊர்வலம்' உளவியல் நூல் வெளியீட்டு விழா அண்மையில் நடைபெற்றது. இதன்போது வடமாகாண சபை கல்வி கலை கலாசார அமைச்சர் ரி.குருகுலராஜா முதற் பிரதியை வெளியிட்டுவைத்தார். (வ-135)



புதுக்குளம் மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி பாடசாலை அதிபர் எஸ்.அமிர்தலிங்கம் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் கலந்துகொண்டோரையும் போட்டிகளில் வெற்றியீட்டியோருக்கு பரிசில்கள் வழங்கப்படுவதையும் காணலாம். (வ- 402)







நெடுங்கேணி சின்னடம்பன் பாரதி வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி பாடசாலையின் அதிபர் எஸ். கெங்கநாதன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் கலந்து கொண்டார். நிகழ்வில் இடம்பெற்ற மாணவர் அணி நடை, மாணவிகளின் நிகழ்வு வெற்றிபெற்றோருக்கு பரிசில் வழங்கல் என்பவற்றைக் காணலாம். (வ- 402)



தரம் ஒன்று மாணவர்களை பாடசாலைகளில் வரவேற்கும் காலகோள் விழாவின் இவ்வாண்டுக்கான வலய மட்ட நிகழ்வு கைதடி முத்துக்குமார சுவாமி மகா வித்தியாலயத்தில் அண்மையில் இடம்பெற்றது. இதன்போது முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமாரும், சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட வித்தியாலய ஓய்வுநிலை அதிபர் திருமதி ப.ஆறுமுகஜோதியும் மற்றும் விருந்தினர்களும் ஊர்வலமாக அழைத்துவரப்படுவதைக் காணலாம். (வ- 9)



சாவகச்சேரி கோயிற்குடியிருப்பைச் சேர்ந்த கந்தையா கனகரத்தினம் என்பவருக்கு கொழும்பில் அண்மையில் நடைபெற்ற கலாசார விழாவில் ஓவியத்துக்கான 'கலாபூஷணம்' விருது வழங்கப்பட்டுள்ளது. (வ-9)





காரைநகர் பயிரிக்கூடல் சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயத்தின் வருடாந்த தேர்த் திருவிழா அண்மையில் இடம் பெற்றபோது அடியார்கள் புடைசூழ சுவாமி தேரில் ஆரோகணித்து வீதியுலா வந்தபோது.. (வ-14)





மூத்த பிரஜைகள் கௌரவிப்பு விழா கூமாங்குளம் சித்தி விநாயகர் வித்தியா[illegible]த்தில் அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக [illegible]ன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வவுனியா [illegible]தேச செயலாளர் ப.உதயராசா மற்றும் பலர் கலந்து கொண்டனர். இதன்போது [illegible]ந்தினர்கள் பாண்ட் வாத்திய சகிதம் அழைத்து வரப்படுவதையும் மூத்த பிர[illegible] கௌரவிக்கப்படுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டோரையும் காணலாம். ([illegible])



# தனது சொந்தக் கட்டடத்தில் மட்டக்களப்பு செலிங்கோ லைப்

ஆயுள் காப்புறுதித்துறை தலைவர்களான செலிங்கோ லைப் நிறுவனம் தனது மட்டக்களப்பு கிளைக் கட்டடத்தை அதன் சொந்தக் காணியில் நிர்மாணித்து அதனைத் திறந்து வைத்துள்ளது. இது கிழக்கிலங்கையில் தனது நிலையை மேலும் ஸ்திரப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது.

இலக்கம் 32 லோயிட்ஸ் அவன்யு மட்டக்களப்பு என்ற முகவரியில் நான்கு மாடி கட்டடத்தில் இந்தக் கிளை அமைந்துள்ளது. கம்பனியின் நான்கு முக்கிய கிளைகளை உள்ளடக்கி மொத்தம் 12320 சதுர அடி பரப்பளவில் இந்தக் கிளை அமைந்துள்ளது.

முதலாவது மாடி அலுவலக இடமாகப் பயன்படுத்தப்படும். இதன் மேல் மாடி கம்பனியின் கிளை ஊழியர்களுக்கும், அண்மையில் உள்ள செலிங்கோ லைப் ஏனைய கிளை ஊழியர்களுக்கும் நன்மை அளிக்கும் விதத்தில் பயிற்சிப் பிரிவாகப் பயன்படுத்தப்படும் என்று கம்பனி அறிவித்துள்ளது. 80 பேர்கள் பங்கெடுக்கக் கூடிய பல்செயற்பாட்டு அறை மற்றும் மொட்டை மாடி திறந்த வெளி பொழுதுபோக்கு பகுதி, மிக வசதியான வாகனத் தரிப்பிடம், மின்தூக்கி சேவைகள் என்பனவற்றையும் இந்தக் கட்டடம் உள்ளடக்கியுள்ளது.

இங்கு சூரிய சக்தி மின்சார வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. முழு அளவிலான குளிரூட்டல், முன்னேற்பாட்டு ஜெனரேட்டர், விரிவான தீ அணைப்பு வசதி, மழை நீர் சேமிப்பு திட்டம், பகல் வேளைகளில் இயற்கை ஒளியையும் சேர்த்து பாவிக்கக் கூடிய மின் திட்டம், சக்தி சேமிப்புக்குரிய எல்.ஈ.டி மற்றும் ரி 5 ஒளியமைப்பு முறைகள் என பல நவீன வசதிகளையும் இந்தக் கட்டடம் கொண்டுள்ளது.

இந்தப் புதிய கிளை மூலம் வழங்கப்படும் சேவைகள், மட்டக்களப்பு பிராந்திய மக்கள் மீது நாம் கொண்டுள்ள அக்கறையை மிக உறுதியாகக் கோடிட்டுக் காட்டுகின்றது. அத்தோடு இயற்கைக்கு மிகவும் சாதகமான ஒரு சூழலில் மிகச் சிறந்த சேவையை வழங்குவதில் நாம் கொண்டுள்ள ஆர்வத்தையும் இது புலப்படுத்துகின்றது என்று கூறினார் செலிங்கோ லைப்பின் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான ஆர்.ரெங்கநாதன்.

2002 முதல் செலிங்கோ லைப் மட்டக்களப்பில் சேவையாற்றி வருகின்றது. மட்டக்களப்பு நகரிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் தற்போது ஐந்து கிளைகள் உள்ளன. இலங்கையில் காப்புறுதித்துறையில் ஆகக் கூடிய கிளைகளுடன் செயற்படும் நிறுவனம் செலிங்கோ லைப் நிறுவனமேயாகும். 125 நகரங்களிலும் நாட்டின் 25 மாவட்டங்களில் உள்ள எல்லா கிராமங்களிலும் அது தற்போது நிலை கொண்டுள்ளது.

செலிங்கோ லைப் அநுராதபுரம், யாழ்ப்பாணம், களுத்துறை, குருணாகல், கம்பஹா மாத்தறை, காலி, திஸ்ஸமஹாராம, நீர்கொழும்பு இரத்தினபுரி, கொட்டாஞ்சேனை மற்றும் கல்கிஸ்ஸ ஆகிய இடங்களில் தனது சொந்தக் கட்டடங்களில் கிளைகளைக் கொண்டுள்ளது. பண்டாரவளை மற்றும் திருகோணமலை ஆகிய இடங்களில் சொந்தக் காணிகளில் கட்டடங்கள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. (த)

# உலகக் கிண்ணச் சின்னத்துடன் உலகைச் சுற்றும் விமானங்கள்



2015 உலகக் கிரிக்கெட் கிண்ண போட்டிகள் ஆரம்பமாக இன்னும் ஓரிரு தினங்களே எஞ்சியுள்ள நிலையில், உலகம் முழுவதும் உணர்வுகளுடன் மக்களை தொடர்புபடுத்தும் எமிரேட்ஸ் விமான சேவை, 2015 ஐசிசி உலகக் கிண்ண சின்னத்துடன் கூடிய விஷேடமாக அலங்கரிக்கப்பட்ட தனது முதலாவது விமானத்தின் சேவையை தொடக்கி வைத்துள்ளது.

இந்த ஏ 380 ஏர்பஸ் ரக எமி ரேட்ஸ் விமானம் ஆஸ்திரேலியாவுக்கும் நியுஸிலாந்துக்கும் இடையிலான சேவையை தொடங்கியுள்ளது. உலகம் முழுவதும் வலம் வரவுள்ள விஷேடமாக அலங்கரிக்கப்பட்ட எமிரேட்ஸ் ஏ 380 ரக விமானங்களில் ஒன்றே தனது சேவையை தொடங்கியுள்ளது.

உலகம் முழுவதும் உள்ள கிரிக்கெட் அன்பர்களோடு இந்தக் கொண்டாட்டத்தைப் பகிர்ந்து கொள்வதோடு உலகம் முழுவதும் உள்ள கிரிக்கெட் ரசிகர்களை ஒன்றிணைப்பதும் இதன் நோக்கமாகும். ஐசிசி எனப்படும் சர்வதேச கிரிக்கெட் சபையின் 2015 உலககக் கிண்ணம் உட்பட சகல சர்வதேச ரீதியான சுற்றுப் போட்டிகளிலும் உத்தியோகபூர்வ பங்காளியாக எமி ரேட்ஸ் விமான சேவை 2007ம் ஆண்டு முதல் செயற்பட்டு வருகின்றது.

ஐசிசி பங்குடைமையோடு இணைந்ததாக எமிரேட்ஸ் ஐசிசி நடுவர்கள் மற்றும் போட்டி மத்தியஸ்தர்களுக்கான அனுசரணை என்பனவற்றையும் வழங்கிவருகின்றது.

ஆசியா, அஸ்ட்ரலேசியா, தென் ஆபிரிக்கா மற்றும் ஐக்கிய இராச்சியம் ஆகிய பிராந்தியங்களுடன் இரசிகர்களையும் மற்றும் சமூகங்களையும் இணைத்து வைக்கும் அற்புதமானதோர் வாய்ப்பை கிரிக்கெட் எமிரேட்ஸுக்கு வழங்கியுள்ளது.

தற்போது உலகில் ஏ 380 ரக விமானங்களை அதிகமாகக் கொண்டுள்ள விமான சேவை எமிரேட்ஸாகும். இத்தகைய 57 விமானங்கள் எமிரேட்ஸ் சேவையில் உள்ளன. இவ்வாண்டு இன்னும் 15 ஏ 380 விமானங்கள் சேவையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளன. மேலும் 80 ஏ 380 விமானங்களுக்கான கொள்வனவு கட்டளைகள் வழங்கப்பட்டுள்ளன. எமிரேட்ஸின் ஏ 380 விமானங்கள் தற்போது உலகம் முழுவதும் 34 இடங்களுக்கான சேவையில் ஈடுபட்டுள்ளன.

இந்த வலையமைப்பில் மே மாதத்தில் பேர்த் நகரமும், ஜுலை யில் டஸல்டோர்ப்பும், ஓகஸ்ட்டில் மெட்ரிட் நகரமும் இணைத்துக் கொள்ளப்படவுள்ளன. (த)

# இலங்கை முதலீட்டுச் சபைத் தலைவராக சட்டத்தரணி உபுல் ஜயசூரிய நியமனம்

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இலங்கை முதலீட்டுச் சபையின் தலைவராகச் சட்டத்தரணி உபுல் ஜயசூரியவை நியமித்துள்ளார்.

கொழும்பு றோயல் கல்லூரியின் பழைய மாணவரான உபுல் ஜயசூரிய, 1978ஆம் ஆண்டு சட்டமா அதிபர் திணைக்களத்தில் அரச சட்டத்தரணியாகச் சேவையில் இணைந்து கொண்டிருந்தார்.

அதே வருடத்தில் கொழும்பு பொருளாதார ஆணைக் குழுவின் முதலாவது சட்ட ஆலோசகராக நியமிக்கப்பட்டிருந்தார். அது தற்போது முதலீட்டுச் சபை என பெயர் மாற்றப்பட்டுள்ளது.

1983 ஆம் ஆண்டு சிறந்த இளைய தொழிலாளர் என்ற நிலையைப் பெற்ற உபுல் ஜயசூரிய, இலங்கை அரச வணிகக் கூட்டுத்தாபனத்தின் தலைவராகவும் பதவி வகித்தார்.

இவர் இலங்கையின் முன்னணி நிறுவனங்கள் பலவற்றில் உயர் பதவிகளை வகித்ததுடன், ஆசிய நிதி நிறுவனத்தின் ஸ்தாபகராவார். (த)

# சிறிய ரக இந்திய கார்கள் விலையில் பெரும் வீழ்ச்சி



புதிய வரி திருத்தத்திற்கு அமைய சிறிய ரக இந்திய மோட்டார் கார்களின் விலை 75 ஆயிரம் ரூபா முதல் ஒரு இலட்சம் ரூபா வரை வீழ்ச்சியடைந்துள்ளதாக வாகன இறக்குமதியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, வரி வீதம் உயர்வடைந்துள்ளதை அடுத்து, ஹைபிரிட் வாகனங்களின் விலை 7 முதல் 12 இலட்சம் வரையில் உயர்வடைந்துள்ளதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

குறைந்த வருமானத்தைப் பெறும் குடும்பங்களுக்கு மோட்டார் வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொடுக்கும் வகையில், ஆயிரம் வலுவைக் கொண்ட வாகன உற்பத்திக்கான வரி 15 வீதத்தால் குறைக்கப்பட்டுள்ளதாக அரசு அறிவித்துள்ளது.

இதன்படி, குறித்த வாகனங்களுக்காக அறவிடப்பட்ட 150 வீத இறக்குமதி வரி, 135 வீதம் வரை குறைக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், ஹைபிரிட் அல்லாத 1000 வலு இயந்திரத்தைக் கொண்ட ஏனைய வாகனங்களுக்கான வரியில் மாற்றம் ஏற்படுத்தப்படவில்லை என வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் சுட்டிக்காட்டியது.

இதேவேளை, வாகன இறக்குமதியின்போது, அதன் பெறுமதி குறைந்தளவில் கணிப்பீடு செய்யப்படுவதைத் தவிர்க்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (த)

# அடிடாஸ் அறிமுகம் செய்துள்ள எனர்ஜி பூஸ்ட் சப்பாத்து

உலகப் புகழ்பெற்ற விளையாட்டு வர்த்தக நாமமான அடிடாஸ் இலங்கையிலுள்ள உடற்பயிற்சி ஆர்வலர்களுக்காக அண்மையில் அதன் அதிநவீன எனர்ஜி பூஸ்ட் ஓட்டத்துக்கான சப்பாத்துகளை அறிமுகம் செய்துள்ளது.

இந்த புதிய சப்பாத்து ஆனது, உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் ட ›த்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியது என்பதுடன், உயர் செயற்திறன் மற்றும் நீண்ட கால பாவனை ஆகியவற்றுக்காக அறியப்படும் இந்த புத்தமைவு சப்பாத்தானது தனக்கென ஒரு நற்பெயரையும் பெற்றுள்ளது.

தனித்துவமிக்க இந்த ஓட்டத்திற்கான சப்பாத்துக்களை தயாரிப்பதற்கு அடிடாஸ், உலகின் முன்னணி இரசாயன கம்பனிகளில் ஒன்றான பி.ஏ.எஸ்.எவ் உடன் இணைந்தது.

இவ்விரு நிறுவனங்களின் பங்குடமையில் சொலிட் க்ரானுலர் பதார்த்தம் ஒன்று வெடிக்க வைக்கப்பட்டு அது ஆயிரக்கணக்கான சிறு சக்தி கேப்ஸ்யூல்ஸாக உடைக்கப்படும் செயற்பாடு கண்டுபிடிக்கப்பட்டது.

இவ்விரு நிறுவனங்களின் இணைவின் ஊடாக பி.ஏ.எஸ்.எவ் ஆனது சப்பாத்து ஒன்றில் முன்னெப்போதுமில்லாத அதியுயர் சக்தித் திரும்பலை அளிக்கும். அடிடாஸ் எனர்ஜி பூஸ்ட் ரன்னிங் சப்பாத்து ஆனது வழமையான ஈவா போமிற்கு இற்கு மாற்றாக பூஸ்ட் எனப்படும் பதார்த்தம் கொண்டு தயாரிக்கப்படுவதால், இது உங்கள் கால்களுக்கு அதிக ஓட்டவேகத்தை அளிக்கும்.

விருதுகள் வென்ற இந்த ரன்னிங் ஷுக்கள் ரன்னர்ஸ் வேர்ள்ட் 2013 இல் எடிட்டர்ஸ் சொய்ஸ் விருதினைப் பெற்றதுடன், நிலையான அதன் செயற்திறனுக்காக உலகப் புகழ் பெற்றுள்ளது.



இந்த எனர்ஜி பூஸ்ட் சப்பாத்து ஆனது எல்லாக் காலநிலைகளுக்கும் பொருத்தமானது என்பதால், கோடை, குளிர், பனிக்காலம் என எந்நேரத்திலும் உபயோகிப்பதற்கு ஏற்றது.

அடிப்பாகமானது அழுக்கை விரைந்து எடுப்பதுடன், அடிப்புறத்தின் நடுப்பகுதியானது உங்கள் பாதங்களைக் கௌவிப்பிடித்து, அதிசிறந்த சௌகரியத்தை தருகின்றது. உங்கள் பாதங்களை கௌவி அரவணைத்துக்கொள்ளும் இந்தச் சப்பாத்தானது, அடிடாஸ் தெரிவிப்பதைப்போன்று உங்கள் ஒவ்வொரு அடிகளுக்கும் ஸ்ப்ரிங் போன்ற அசைவை தருவதையொத்த வசதியை அளிக்கின்றது.

ஏனைய ஓட்டத்திற்கான சப்பாத்துகளைப் போலல்லாது அடிடாஸ் எனர்ஜி பூஸ்ட் சப்பாத்து ஆனது பளிச்சிடுபவையல்ல, குறைந்த எடை கொண்ட இந்த சப்பாத்துகள் மென்மையான அதேநேரத்தில் மிகுந்த உறுதியுடையன. இந்த எனர்ஜி பூஸ்ட் சப்பாத்து தொகுப்பானது சௌகரியமானது, சிறப்பான செயற்திறனை வெளிப்படுத்துகின்றது என்பதுடன், சிறிய காயங்களிலிருந்து உங்களைப் பாதுகாக்கும். இப்போது நீங்கள் அடிடாஸ் எனர்ஜி பூஸ்ட் சப்பாத்துடன் தடையின்றி உங்கள் ஓட்டத்தைத் தொடரலாம்.

இலங்கையில் அடிடாஸுக்கான ஏக முகவர்களாக எச்.எஸ்.குளோத் திங் விளங்குகின்றது. எனர்ஜி பூஸ்ட் சப்பாத்து தொகுப்பினை நாடளாவிய ரீதியில் முக்கிய இடங்களில் அமையப்பெற்றுள்ள பிரத்தியேக அடிடாஸ் காட்சியறைகளில் பெற்றுக்கொள்ளலாம். (த)

# நியாயமற்ற கொடுப்பனவை இடைநிறுத்தத் தீர்மானம்

## ஜனாதிபதி தேர்தல் காலத்தின்

கொழும்பு, பெப்.8

ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப் பட்ட தினத்தில் இருந்து ஜனாதிபதித் தேர்தல் முடிவுக்கு வந்த திகதி வரை மேற்கொள்ளப்பட்ட நியாயமற்ற விதத்திலான அனைத்துப்பணக் கொடுப்பனவுகளையும் இடை நிறுத்தி வைக்குமாறு அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு உத்தரவுகளைப் பிறப்பிக்க அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் காலத்துள் பல்வேறு அமைச்சுக்களால் மேற்கொள்ளப்பட்டுள்ள பொதுவான செலவினங்கள் தவிர்ந்த ஏனைய அனைத்துச் செலவினங்கள் தொடர்பாக ஒவ்வொரு அமைச்சர்களாலும் கண்டறியப்பட்டு அடுத்துவரும் அமைச்சரவைக் கூட்டத்தின் போது அறிக்கை ஒன்று முன் வைக்கப்பட வேண்டும் என்றும் அமைச்சரவை யால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பொதுசன ஊடக நிறுவனங்களுக்கு பெரும் தொகைகளில் வழங்கப்பட் டுள்ள பணச் செலுத்தல்கள் மற்றும் வாடகை அடிப்படையில்வாகனங்களைப் பெற்றுக் கொள்வது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள் தொடர்பாகவும் தேடிக்கண்டறிவதற்கும் அமைச்சரவை தீர்மானித்திருப்பதாக அமைச்ச ரவை பேச்சாளரான அமைச்சர் ராஜித சேனாரத்ன கடந்த 29 ஆம் திகதி தெரிவித்துள்ளார்.

இவற்றை விட ஜனாதிபதித் தேர்தல் காலத்துள் அரச வங்கிகளால் பல்வேறு பொது சன ஊடக நிறுவனங்களுக்கு செலுத்தப்பட்டுள்ள கொடுப்பனவு கள் தொடர்பாகவும் தேடிக் கண்டறிவதற்கு அமைச்சரவை தீர்மானித்திருப்பதாகவும், அந்த ஊடக சந்திப்பில் அமைச்சர் ராஜித சேனா ரத்ன தெரிவித்துள்ளார். இதன்போது அவர் மேலும் தெரி வித்த தா வது:

ஜனாதிபதித் தேர்தலுக்காக தேசிய லொத்தர் சபை, அரச வங்கிகள் போன் றவை பெருமளவு நிதியைச் செலவு செய்துள்ளமை பாரதூர மான பிரச்சினை என்பதால் தேர்தல் செயற்பாட்டுக்காக செலவு செய்யப்பட்ட பணத் தொகை அந்த நிறு வனங்களின் முன்னாள் தலை வர்களிட மிருந்து மற்றும் விளம்பர நிறுவனங்களிடமிருந்து அறவிடப்படும்.

மேலும் பொறியியல் கூட்டுத்தாபனம் 33 வாகனங்களை வாடகைக்குப் பெற்று அவற்றை அரசியல் வாதிகளும் அவர்களது ஆதரவாளர்களும் பயன்படுத்த வழங்கியமை, தேசிய லொத்தர் சபைக்குரிய நிதி, கால்ட்ரன் நிறுவனத்தின் ரகர் போட்டிகளுக்கும், கார்ப் பந்தயங்களுக்கும், முன்னாள் தலைவர்களின் குடும்பத்தேவைகளுக்கும் செலவ ழிக்கப்பட்டுள்ளது.

தேசிய லொத்தர் சபையின் நிதி ஜனாதிபதி நிதியத்துக்கே செலுத்தப்படுவது வழமை. எனினும் கடந்த காலத்தில் அந்த நிதி ஜனாதிபதி நிதியத்துக்குச் செலுத்தப்படாது கார் பந்தயங்களுக்குச் செலவு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் ஜனாதிபதி செயலகத்துக்குரிய நூற்றுக்கணக்கான வாகனங்கள் எங்கே என்பது குறித்து இன்னமும் தேடிக் கண்ட றியப்படவில்லை என்றும் முந்நூறுக்கு மேற்பட்ட வாகனங்கள் ஜனாதிபதித் தேர்தல் செயற்பாடுகளுக்குப் பயன்படுத்தப்பட்டு பழுதடைந்து வாகனத் திருத்த கங்களில் விடப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது. முன்னாள் ஜனாதிபதியின் சாரதி ஒருவரே ஜனாதிபதித் செயலகத்தின் வாகனங்களுக்குப் பொறுப்பாக இருந்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதிக்கு மற்றும் அவரது குடும்பத்தவர்களின் பயணங்களுக்காக எயார் பஸ் நிறுவனம் வீ.வீ.ஐ.பி. விமானம் ஒன்றை ஶ்ரீலங்கன் விமான நிறுவனத்துக்கு வழங்கியிருந்ததாகவும் அந்த விமானத்தில் உள்ள கழற்றி எடுக்கத்தக்க 168 ஆசனங்களும் அகற்றப்பட்டு 12பேர் மாத்திரம் பய ணிக்கத்தக்கதாக 12 ஆசனங்கள் மாத்திரம் பொருத்தப்பட்டுள்ளன.

இதனிடையே இரு இலங்கையர் களுக்கு மாத்திரமே வெளிநாட்டுக் குடியுரிமை வழங்கப்பட்டமை மற்றும் நூற்றுக்கணக்கான வெளிநாட்டவர்களுக்கு இலங்கைக் குடியுரிமை வழங்கப்பட்யிமை குறித்தும் ஆராயப் படவிருப்பதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (வ-22)

# கல்வி என்ற ஆயுதத்தால் எதனையும் சாதிக்கலாம்

## டிறிபேக் கல்லூரியின் பழைய மாணவன் கருத்து

தென்மராட்சி, பெப். 8

உலகில் உள்ள நவீன ஆயுதங் களை விட கல்வி சிறந்ததொரு ஆயுதமா கும். இந்த ஆயுதத் தால் சாதிக்க முடியாது எதுவுமில்லை. கல்வி யில் மேம்பட மாணவர் களுக்கு பண்பு, ஒழுக் கம், விளை யாட்டு, தெய்விகம் ஆகிய இந்த நான்கும் அமைய வேண்டும். அமைந்தால் அவன் சிறந்த மனிதனாக உருவாகுவான்.

இவ்வாறு கூறினார் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் ஆரம்பப் பிரிவு மாணவர்களின் இல்ல மெய் வன்மைப் போட்டிக்கு முதன்மை விருந்தினராக கலந்து கொண்ட கல்லூரியின் பழைய மாணவனும், லண்டன் பொறியியலாளருமான பேரம்பலம் சிவராசா.

தனது உரையில் அவர் மேலும் கூறியதாவது:

"மாணவப் பருவத்தில் பண்பு, ஒழுக்கம், விளையாட்டு, தெய்வீகம் போன்றவை பாடத் திட்டங்கள் மூலம் எமக்கு வழங்கப்படுகின்றன. இதனைச் சரிவரப் பயன்படுத்த மாணவர்கள் முன் வரவேண்டும். இந்த நான்கில் ஒன்றை இழந்தாலும் பிற்காலத்தில் அதன் பெறுமதி தெரிய வரும். விளையாட்டு என்பது வெற்றி தோல்வி என்னும் பதங்களைக் கொண்டது. வெற்றியை நோக்கி முன்னேற வேண் டுமே தவிர தோல்வியைக் கண்டு துவழக் கூடாது. விளையாட்டில் ஒற்றுமை, போட்டித்தன்மை, விடா முயற்சி, தலைமைத்துவப் பண்பு போன்றவற்றை மாண வர்கள் பெற்றுக் கொள்ள முடியும். வெளிநாடுகளில் விளையாட்டுக்களை வளர்க்க திறமையுள்ள வீர வீராங்கனைகளை உருவாக்க அந்த அரசுகள் மில்லியன் கணக்கான நிதியைச் செலவிடுகின்றன. போட்டிகளில் முதலிடம் பெற வேண்டும் என்று ஊக்குவிக் கிறார் கள். அந்த வீரர்கள் போட் டியில் முதல் மூன்று இடங்களைப் பெறாவிட்டாலும் ஏன் என்ற காரணத்தைக் கண்டறிந்து அதற்கேற்ற பயிற்சிகைகளை வழங்கு கிறார்கள். நல்ல உடம்பில் நல்ல மூளை வளம் இருக்குமென சொல்வார்கள். நல்ல உடம்பைப் பெற சிறந்த வீர வீராங்கனைகளாக சிறுவயதிலிருந்தே பயிற்சி களைப் பெறவேண் டும்"- என்றார். (வ-9)

> "மாணவப் பருவத்தில் பண்பு, ஒழுக்கம், விளையாட்டு, தெய்வீகம் போன்றவை பாடத்திட்டங்கள் மூலம் எமக்கு வழங்கப்படுகிறது. இதனைச் சரிவரப் பயன்படுத்த மாணவர்கள் முன் வர வேண்டும்.


ஐரோப்பாவில் மருத்துவ கல்வி
UK | Europe | Canada | USA



மொத்தச் செலவு ரூபா.3.6 மில்லியனிலிருந்து
- 100% வீசா உத்தரவாதம்.
- வீசா நேர் முகப் பரீட்சை கிடையாது.
- வங்கி மீத கணக்கு தேவையில்லை.
- வருடாந்த பல்கலைக்கழக கட்டணம் 4300$ மட்டுமே.
- பட்டப் படிப்பை முடித்தபின் ஐரோப்பிய நாடுகள், கனடா, USA, UK, ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து போன்ற நாடுகளில் வேலைவாய்ப்பு.
- இன்று விண்ணப்பித்து 20 நாட்களில் பயணியுங்கள்.

PATHE STUDY MEDICINE
Call 776 04 41 99 or 777 66 22 33
No. 111 1/3, Maya Avenue, Colombo 06, www.pathestudy.org

மின்கட்டணத்தை குறைக்கும்
சுற்றாடல் தோழன்
குளிர்சாதனப்பெட்டிகளில் உள்ள
R600a
குளிரூட்டி வாயு
மின்சாரத்தை சேமிக்கும் சுற்றாடல் நண்பன்.



ARD - 191E
- கொள்ளளவு 190L
- எந்த சூழலிலும் பாவிக்க கூடியது
- சுற்றாடல் தோழன்
- குறைந்தளவு சத்தம்
- இரண்டு பக்கமும் திறக்க கூடிய கதவு
- இலகுவாக இடமாற்றக்கூடியது

ரூ.39,900

வட்டியில்லா 18 மாத கொடுப்பனவு

071 4020799

Abans

## இடமாற்றம்

MEDI QUICK (PVT) LTd- மெடிகுயிக் இரத்த பரிசோதனை நிலையம் 11.02.2015 இல் இருந்து 514/20, ஆஸ்பத்திரி வீதியில் புதிதாக இடம்மாற்றப்பட்டுள்ளதை அறியத்தருகின்றோம். வைத்தியர் (Dr.C.SRIDEVA) ச.சிறிதேவா (M.B.BS DCH.DFM.MCGP) அவர்கள் முன்பு கொழும்பு தெஹிவளையில் பணியாற்றிய இவர் இனி தொடர்ந்து காலை 8.00 மணிமுதல் பகல் ஒரு மணி வரை பணியாற்றுவார்.
(ஞாயிற்றுக்கிழமை மூடப்பட்டிருக்கும்)

தொடர்பு: 021 222 7806, 077 235 4747

(56545)(4.3.7)


# மருதங்கேணி பிரதேச செயலகத்தின் புதிய கட்டடத் திறப்பு விழா

யாழ்ப்பாணம், பெப்.8
வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச செயலக புதிய கட்டடத்திறப்பு விழா நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.
உள்நாட்டலுவல்கள் மற்றும் கடற்றொழில் அமைச்சர் ஜோசப் மைக்கல் பெரேரா புதிய கட்டடத்தை திறந்து வைக்கவுள்ளார்.
வடமாகாண ஆளுநர் எச்.எம். ஜீ. எஸ். பளிகக்கார, வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் பலரும் நிகழ்வில் கலந்து கொள்வர். (ஒ-10)

# கனடாவில் அச்சுறுத்திய இலங்கையர் கைதானார்

மொன்றியல், பெப் 8
கனடாவில் பலத்தரப்பினருக்கு அச்சுறுத்தல்களை விடுத்து வந்த இலங்கையர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
இலங்கையைச் சேர்ந்த 51 வயதான ரூபன் பாலராம் சிவராம் என்பவரே இந்த குற்றச்சாட்டின் கீழ் கைதானார்.
ஒன்றாரியோ பகுதியில் அரச பணியாளர்கள், இராணுவத்தினர் மற்றும் காவற்துறை அதிகாரிகளுக்கு எதிராக அவர் கொலை அச்சுறுத்தல் விடுத்து வந்துள்ளார்.
அவருக்கு எதிராக பல்வேறு குற்றச்சாட்டுகள் பதிவாகி இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)


## வியாபார அபிவிருத்திச் சேவை வழங்குதலுக்கான முன்மொழிவுகள் வேண்டுகை

UNDP நிறுவனத்தின் நிதியுதவியுடன் உற்பத்தி வியாபார செயற்பாடுகளை முன்னெடுக்கும் கீழ்வரும் நிறுவனங்களுக்கான வியாபாரத்திட்டம் தயாரித்தல், வியாபார அபிவிருத்தி மற்றும் முகாமை ஆலோசனை வழங்குவதற்கான முன்மொழிவுகள் தகுதிவாய்ந்தவர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

மேலதிக விவரங்களை bdsprovision@gmail.com என்னும் மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளவும்.

01.யாழ். பனைசார் கைப்பணிப் பொருள் கம்பனி- யாழ்ப்பாணம்
02.அந்திரான் ஜனசக்தி தோற்பொருள் உற்பத்தியாளர் விற்பனை கூ.சங்கம்- சித்தன்கேணி
03.பிரான்பற்று எள்சார் உற்பத்தி விற்பனையாளர் கூ.சங்கம்- பண்டத்தரிப்பு
04.சமூகக் கற்கை நிலையம்- புங்குடுதீவு
05.தம்பாட்டி கிராமிய கடற்றொழிலாளர் கூ.சங்கம்- ஊர்காவற்றுறை
06.கரவெட்டி பிரதேச கால்நடை வளர்ப்போர் கூ.சங்கம்-கரவெட்டி.

முன்மொழிவுகள் கிடைக்க வேண்டிய
இறுதித்திகதி 23.02.2015
காலை 10.00 மணி.

(சி/19558)
(4.3.7)



## மூன்று மாடிகள் வாடகைக்குண்டு

இல.170, பலாலி வீதியில் நவீன முறையில் அமைக்கப்பட்ட Elcardo நிறுவனத்தின் 2500 சதுர அடி விஸ்தீரணம் கொண்ட 3 மாடிகள் வாடகைக்கு விடப்படும்.

தொடர்பு: 071 864 9221, 021 567 0570

(58593)(4.3.7)


# போதையில் விபத்து விரல்கள் பறந்தன

சாவகச்சேரி, பெப்.8
மது போதையில் இரவு வேளை மோட்டார் சைக்கிளை அதி வேகமாகச் செலுத்தி வந்த நபர் நிலை தடுமாறி மோட்டார் சைக் கிளுடன் வீழ்ந்ததில் அவரது கால் விரல்கள் துண்டாடப்பட்டன.
கோயிலாக்கண்டிப் பகுதியில் இடம்பெற்ற இந்த விபத்தில் கோயி லாக்கண்டியைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவரே படுகாய மடைந்தார். குறித்த நபர் மோட்டார் சைக்கிளில் அதிவேகமாக வந்த வேளை நிலைகுலைந்து தனது பக்கத்திற்கு எதிர்ப் பக்கமாகச் சென்று வீதியோரமாக நடப்பட்டிருந்த கட்டையுடன்மோதிப்படுகாய மடைந்தார். இதன்போது அவரது கால்விரல்கள் துண்டாடப்பட்டு வீதியில் சிதறிக் காணப்பட்டன. காயமடைந்தவர் யாழ்.ஆஸ்பத்திரியில்சேர்க்கப்பட்டார். (ஒ-131)


## ஐரோப்பாவில் மருத்துவம், பொறியியல் கற்க ஓர் அரியவாய்ப்பு

எம்முடன் இணைவதால்...



- மிகக்குறைந்த செலவில் கற்கைநெறி
- உலகின் தலைசிறந்த பல்கலைக்கழகங்கள்
- 100% வீசா உத்தரவாதம்
- பட்டத்தின் பின் ஐரோப்பாவில் பணிபுரியும் வாய்ப்பு
- தற்போது 300 இற்கும் மேற்பட்ட இலங்கை மாணவ, மாணவிகள் உயர்கல்வியை கற்றுவருகின்றனர்
- நேர்முகபரீட்சை, வங்கிமீதி, உறுதிகடிதங்கள், IELTS இன்றியும் மாணவர்கள் விண்ணப்பிக்கலாம்
- கடன் வசதிகள் ஒழுங்கு செய்துதரப்படும்.
- உங்கள் எதிர்கால வாழ்க்கையை ஐரோப்பாவில் தொடர ஒரு வாய்ப்பு
- கோடைகால விடுமுறையில் ஐரோப்பாவில் வேலைவாய்ப்பு

Spot Admission & Schlorship

STUDENT CONSULTANCY UNIT
RED CROSS CONSULTANCY SERVICES

Consultancy arm of the Sri Lanka Red Cross Society

3rd Floor, Red Cross BLDG, No. 106, Dharmapala Mw, Colombo 07
Tel : 011 434 7070 Mob : 077 670 0009, 077 670 2222, 076 671 6083
Fax : 011 268 2876 Email : admission@rcscu.lk Web : www@rcscu.lk


# கைதடியில் இன்று கல்வி மேம்பாட்டு விழா

கைதடி,பெப்.8
பிரான்ஸ் வாழ் கைதடி அபிவிருத்தி கழகத்தின் அனுசரணையுடன் கைதடி மக்கள் நலன் பேணும் நட்புறவுக் கழகம் நடத்தும் கல்வி மேம்பாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு தலைவர் இ.கந்தசாமி தலைமையில் கைதடி ஏ-9 வீதியிலுள்ள விநாயகர் மண்டபத்தில் நடைபெறும்.
இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அதிபர் க. அருந்தவபாலன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.
இந்த நிகழ்வில் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள், பல்கலைக் கழகத்துக்குத் தெரிவான மாணவர்கள் ஆகியோர் கௌரவிக்கப்படுவதுடன் சனசமூக நிலையச் சிறுவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (ஒ-288)


## கட்டட நிர்மாணத்திற்கான மூலப்பொருள்கள் கொள்வனவுக்கான விலைமனு கோரல்

UNDP நிறுவனத்தின் நிதி உதவியுடன் எமது கரவெட்டிப் பிரதேச கால்நடை வளர்ப்போர் கூ.சங்கத்தினால் உற்பத்தி நியமங்களுக்கு அமைய உற்பத்திப் பகுதி கட்டடத்தினை மேம்படுத்தவுள்ளோம். எனவே இதற்கான மூலப்பொருள்கள் கொள்வனவு செய்வதற்கான தகுதிவாய்ந்தவர்களிடம் இருந்து மூடிய கூறுவிலைகள் கோரப்படுகின்றன.

மேலதிக விவரங்களுக்கு கீழ்வரும் முகவரியில் உள்ள எமது சங்கத்துடன் தொலைபேசியில் அல்லது நேரில் வந்து தொடர்பு கொள்ளலாம்.

முகவரி :
கரவெட்டி பிரதேச கால்நடை வளர்ப்போர் கூ.சங்கம்
பருத்தித்துறை வீதி,
நாவலர்மடம், கரவெட்டி.

தொலைபேசி :-021 226 1368

திட்ட முன்மொழிவுகள் கிடைக்கப்பெற வேண்டிய
இறுதித் திகதி : 16.02.2015 காலை 10.00 மணி

தலைவர்
கரவெட்டி பிரதேச
கால்நடை வளர்ப்போர் கூ.சங்கம்

(சி/19557)
(3.5.7)


# இல்ல மெய்வன்மைப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,பெப்.8
கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறும். நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் கே.வரதராஜ மூர்த்தி கலந்துகொள்வார். (ஒ-10)

* * *

யாழ்ப்பாணம்,பெப்.8
யாழ்.புனித சாள்ஸ் மகா வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது.
வித்தியாலய அதிபர் திருமதி ஜே.பி.கிறிஸ்ரபெல் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனும் சிறப்பு விருந்தினராக யாழ்.வலய ஆரம்பக் கல்வி விளையாட்டு செயற்றிட்ட இணைப்பாளர் எஸ்.சிவகாந்தியும் கலந்துகொள்வர். (ஒ-10)


## ONLY FOR LADIES

Diploma in
SPOKEN ENGLISH
With Grammar

அடிப்படை ஆங்கில அறிவு இல்லாதவர்களுக்கு பிரத்தியேக வகுப்பும், தனிப்பட்ட கவனமும்

★ Reading
★ Writing
★ Listening
★ Speaking

3 Months
முழு நேரப் பாடநெறியானது திங்கள் தொடக்கம் சனி வரை தினமும் 8.30 முதல் 4.30 வரை நடைபெறும்

பாதுகாப்பான வதிவிட மற்றும் உணவு வசதி
பாடநெறி பெண் ஆசிரியரால் நடாத்தப்படும்
தினமும் 4 மணித்தியாலத்துக்கு அதிகமான பேச்சுப் பயிற்சி
சர்வதேச ISO சான்றிதழ் உட்பட 2 டிப்ளோமா சான்றிதழ்
பாடநெறி ஆரம்பம் Mar 2nd

Hotline : 0777 78 52 40

Emerald Ladies College
Madawala Bazaar | Kandy T: 081 2050600



## Study in CHINA

SICHUAN UNIVERSITY
MBBS
Approved by Sri Lankan Medical
GMC- UK, ECFMG-USA , IMED, WHO & UNESCO
* Asia's No 1 Medical / Dental University & 3rd largest in the world
* 33 hospitals in the campus including Asia's biggest hospital building with more than 5,000 beds

ENGINEERING
Civil / Software

100% Guaranteed Employment in USA, Canada UK, Australia & Europe After Study !!!

- No IELTS / No Interview
- No Bank Balance
- 35% Scholarships Available
- 100% Visa Success
- Part time Job Allowed

Free Seminar/ Counseling Mon to sat 9AM-3PM

iCS Study Overseas
107 B 1/1 ,Galle Road, Colombo - 06
77, மணிக்கூட்டு கோபுரவீதி, யாழ்ப்பாணம்
(பெருமாள் கோவில் அருகாமையில்)
021 4926222 , 076 7013060


# மாணவர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம்

யாழ்ப்பாணம், பெப்.8
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் 2014 இல் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றியோருக்கான விசேட அறிவுறுத்தல் கூட்டம் நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு கல்லூரியின் தம்பர் மண்டபத்தில் நடைபெறும்.
மாணவர்களைத் தங்களின் பெற்றோருடன் சமூகம் தருமாறு கல்லூரி அதிபர் கேட்டுள்ளார். (ஒ-10)

# மைத்திரியை கொழும்பில் சந்தித்தார் பிள்ளையான்





கொழும்பு, பெப். 8
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவருமான பிள்ளையான் எனப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தனுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று வெள்ளிக்கிழமை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கொழும்பு விஜயராம வாசஸ்தலத்தில் இடம்பெற்றுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்தவின் ஏற்பாட்டில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றதாக ஆளும் கட்சியைச் சேர்ந்த கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இனியபாரதி தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின்போது, கிழக்கு மாகாணசபை ஆட்சி தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டதுடன், மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ந்தும் பல அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பது தொடர்பாகவும் தற்கால, எதிர்காலங்களில் அரசியல் முன்னெடுப்புக்கள் மற்றும் கிழக்கு மாகாண சபை விடயத்தில் கிழக்குத் தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்கள் தொடர்பாகவும் ஆராயப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் செயலாளர் சுசில் பிரேமஜெயந்த, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவர் சி.சந்திரகாந்தன், பிரதித் தலைவர் யோகவேள், செயலாளர் பூ.பிரசாந்தன், கட்சியின் கொள்கை பரப்பு செயலாளர் ஆஷாத் மௌலானா, கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இனியபாரதி ஆகியோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (த)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பூமணி வேல்



(முன்னாள் தாதிய உத்தியோகத்தர்-
மூளாய் வைத்தியசாலை (Central nursing Home, திருநெல்வேலி)

பிறப்பு: 22.11.1942 இறப்பு: 04.02.2015

கொழும்பு, வெள்ளவத்தையைப் பிறப்பிடமாகவும், யாழ். சுழிபுரத்தை வதிவிடமாகவும், கனடா Scarborough ஐ வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பூமணி வேல் 04.02.2015 புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலாயுதர் நாகம்மா (நாகமுத்து) தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான அப்பாதுரை - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகளும், வேல் அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற சரஸ்வதி, செல்வராசா (பிரான்ஸ்), துரைராசா (சுவிஸ்), காலஞ்சென்ற பரமயோகமணி, விக்கினராசா (இலங்கை), ருக்மணி (லண்டன்), தியாகராசா (நோர்வே), யமுனா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரி யும், Dr. குமாரவேல் (லண்டன்), ஆனந்தவேல் (லண்டன்), நாகேஸ்வரி ராஜரட்ணம் (கனடா), அன்னம்மா (பிரான்ஸ்), விஜயலட்சுமி (இலங்கை), ஸ்ரீபவானி (நோர்வே), யோகநாதன் (கனடா), காலஞ்சென்றவர்களான இராஜசிங்கம், இராஜேஸ்வரி, முருகமூர்த்தி, வரதராசா ஆகியோரின் அன்பு மைத்துனியும், சந்திரா (இலங்கை), சுபத்திரா (பிரான்ஸ்), சித்திரா (பிரான்ஸ்), ஜெயஸ்ரீ (கனடா), இந்திரா (இலங்கை), வசந்திரா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சின்னம்மாவும், சுதா (லண்டன்), லுகிர்தா (ஐக்கிய அமெரிக்கா), சுபோ (ஐக்கிய அமெரிக்கா), தர்சினி (லக்ஷுமி - கனடா) ஆகியோரின் அன்புப் பெரியம்மாவும், தனுஷா (இலங்கை), தனபாலசிங்கம் (சுவிஸ்), ரேணுகா (பிரான்ஸ்), விஜி (பிரான்ஸ்), சதீஸ் (சுவிஸ்), ராஜி (லண்டன்), கார்த்திகா (இலங்கை), வதனா (நோர்வே), துவேஸ் (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமியும், துசித்தா, மிதுஷா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.02.2015) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குணசீலன் (மருமகன் - வவுனியா பொது வைத்தியசாலை),
இந்திரா (மகள் - ரி.வோல்வரி, வவுனியா பொது வைத்தியசாலை தாதிய உத்தியோகத்தர்).

077 735 3691

(56579) (45.3.7)

### திருமதி மகேஸ்வரி ஆறுமுகம்



யாழ்ப்பாணம், கோப்பாய் வடக்கு, இராதம்புவைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி ஆறுமுகம் 05.02.2015 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை- சின்னத்தங்கம் தம்பதியரின் மூத்த மகளும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்- செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற ஆறுமுகம் அவர்களின் அன்பு மனைவியும், சோதிலிங்கம், செல்வமதி, திலகவதி, சண்முகலிங்கம், மகேந்திராதேவி, ஞானேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், கந்தையா (பழனி), இராஜேஸ்வரி மற்றும் பரமேஸ்வரி, ஞானேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், பற்பராணி, சிறிதரன், உதயபரன், மோகனகௌரி, விக்னேஸ்வரன், சுவேந்தினி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்றவர்களான அம்பலவாணர், பரமநாதர், சின்னத்தங்கம் மற்றும் கற்பகம், வரதலக்சுமி, தம்பி ஜயா, பரமலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், அனுஷன், சுயந்தினி, அரிசெனியா, ஜஸ்வரியா, ஆரணி, அபிஷா, அபிநயா, ஆர்த்திக்குமரன், அகிலக்குமரன், அர்ச்சனா, அபிராம் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (08.02.2015) ஞாயிற்றுக்கிழமை கனேடிய நேரம் காலை 9.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள்,

இராதம்பு,
கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

தகவல்:
இ.உதயபரன்
(மருமகன்)

(56601) (4.3.7)

### திருமதி தவமணி (குணம்) நாகராசா



வண்ணார்பண்ணை மேற்கு, கொக்குவில், யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் ஆலடி தோணிக்கல், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தவமணி நாகராசா 06.02.2015 காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா -தெய்வானை தம்பதியரின் பாசமிகு இளைய மகளும், கந்தையா- இராசமணி தம்பதியரின் அன்பு மருமகளும், நாகராசாவின் அன்பு மனைவியும், வாசுகி, றெயிந்தன், றெயிந்தினி ஆகியோரின் நேசமிகு தாயாரும், பாலகிருஷ்ணன், றெஸ்மா ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற இராசம்மா, காலஞ்சென்ற சின்னம்மா, அப்புத்துரை, காலஞ்சென்ற நல்லபிள்ளை, காலஞ்சென்ற தம்பித்துரை, தங்கமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற அப்புத்துரை, காலஞ்சென்ற நேசமணி, காலஞ்சென்ற மருதகுட்டி, பவளமணி, இராசதுரை ஆகியோரின் மைத்துனியும், செல்வரத்தினம், தங்கராணி, குணரத்தினம், செல்வராணி, ஜெயராணி, ரஞ்சிதமலர், சிவசோதிமலர், ஜெயமலர் ஆகியோரின் அன்பு அன்ரியம் மாவும், அருள்காந்தன், சிறிகாந்தன், சுலோஜினாதேவி, ரஞ்சிதாதேவி, தூனேஸ்வரன், ராகினிதேவி, சதீஸ்வரன், தாத்தீஸ்வரன், தகுனேஸ்வரன், தமேஸ்வரன் ஆகியோரின் அன்பு அத்தையாரும், கிருஸ்ரீன், நிவேதிகா, டிலக்சி மற்றும் றெசிக்காவின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.02.2015) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தோணிக்கல் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.134, ஆலடி,
தோணிக்கல், வவுனியா.
024 222 0273

றெயிந்தன், றெயிந்தினி.

## அங்கவீனமுற்றோருக்கான கொடுப்பனவுக்குப் பதிவுகள்

கொடிகாமம், பெப். 8
அங்கவீனமுற்ற நபர்களுக்கான வாழ்வாதாரக் கொடுப்பனவை வழங்குதல் தொடர்பான பதிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

எதிர்வரும் 14 ஆம் திகதியுடன் இந்த விண்ணப்ப காலம் முடிவடைகின்றது.

கடந்த வருடங்களில் அங்கவீனமுற்றவர்களுக்கான வாழ்வாதார உதவிக் கொடுப்பனவாக மாதாந்தம் 3 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டு வருகிறது.

இந்தக் கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

இது சகல மாவட்டங்களிலும் இடம்பெற்று வருவதனால் தத்தமது கிராமசேவகர்கள் மூலம் இந்த விண்ணப்பத்தைப் பெற்று பூர்த்தி செய்து, கிராமசேவகரின் உறுதிப்படுத்தலுடன், தமது பகுதியின் அரச வைத்தியரிடம் உறுதிப்படுத்திய விண்ணப்பப் படிவத்தைத் தாங்களது பிரதேச செயலகங்களில் உள்ள சமூகசேவைகள் திணைக்கள அலுவலரிடம் எதிர்வரும் 14 ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்குமாறு கோரப்பட்டுள்ளது. (த-105)

## ஜோன் அமரதுங்கவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை

சபையில் நேற்றுச் சமர்ப்பிப்பு



கொழும்பு, பெப். 8
சட்டம், ஒழுங்கு மற்றும் கிறிஸ்தவ மத விவகார அமைச்சர் ஜோன் அமரதுங்கவுக்கு எதிராக பிரதான எதிர்க்கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டுவந்துள்ளது.

சுதந்திரக் கட்சியின் 114 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையொப்பமிட்டுள்ள இந்தப் பிரேரணை நாடாளுமன்றச் செயலாளர் நாயகத்திடம் நேற்று ஒப்படைக்கப்பட்டது.

வத்தளை பிரதேச சபையில் இடம்பெற்ற சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டே அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்டுள்ளது. (த-சி)

## இலங்கையின் முடிவுக்கு சீனா வரவேற்பு

கொழும்பு, பெப். 8
கொழும்பு போர்ட் சிட்டி திட்டத்தைத் தொடர்ந்தும் முன்னெடுக்கும் இலங்கை அரசின் முடிவை சீனா வரவேற்றுள்ளது.

அந்த நாட்டின் வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஹொங் லெய் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தெற்காசியாவில் சீனாவின் கடல்சார் புதிய பட்டுப்பாதைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் இலங்கை முக்கிய சகாவாகவிளங்குகின்றது எனவும் அவர் கூறியுள்ளார். (கு)

## மரண அறிவித்தல்

### பாலசுந்தரம் ஜீவானந்தம்

(காயத்திரி நகைமாளிகை - பருத்தித்துறை)



சிங்கப்பூரைப் பிறப்பிடமாகவும் விஸ்வகுல ஒழுங்கை, பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட பாலசுந்தரம் ஜீவானந்தம் நேற்றுமுன்தினம் (06.02.2015) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பாலசுந்தரம் - பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், வசந்தாதேவியின் அன்புக் கணவரும், புத்தூர் பொன்னையா - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், [illegible] காயத்திரி, கௌதமன் ஆகியோரின் அன்புத் தந்தையும், கணே[illegible] அன்பு மாமனும், புஸ்பராணி, செல்வராணி, அருளானந்தம், காலஞ்சென்ற தேவானந்தம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சத்தியமூர்த்தி, புண்ணியமூர்த்தி, சறோஜினிதேவி, வனிதாதேவி, கருணாகரமூர்த்தி ஆகியோரின் அன்பு மைத்துனரும், வினுஸின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.02.2015) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முனை, கோரியடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
077 757 0812,
021 320 7919

## மலையக ரயில் சேவை பாதிப்பு

கொழும்பு, பெப். 8
மலையக ரயில் பாதையிலான போக்குவரத்து நடவடிக்கைகள் கொழும்பு முதல் நானுஓயா வரை மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

எரிபொருள் ஏற்றிச் சென்ற ரயில் ஒன்று நானு ஓயா பிரதேசத்தில் தடம் புரண்டமையே இதற்குக் காரணம் என ரயில்வே கட்டுப்பாட்டு மத்திய நிலையம் குறிப்பிட்டுள்ளது.

மேலும் நிலைமையை வழமைக்குக் கொண்டுவர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் ரயில்வே கட்டுப்பாட்டு மத்திய [illegible] (த)

# உள்ளூராட்சி தேர்தல்களை நடத்துமாறு வலியுறுத்தல்

கொழும்பு, பெப் 8
வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தேர்தல் நடத்தப்படாதுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்களை நடத்துமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பவ்ரல் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரை துறைப்பற்று மற்றும் புதுக்குடியிருப்பு ஆகிய பிரதேச சபைகளுக்கான தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் 11 உள்ளூராட்சி மன்றங்களின் ஆட்சிக் காலம் நிறைவடைந்தும் தேர்தல் நடத்தப்படாதுள்ளது.

வடக்கு மாகாணத்தின் யாழ்ப்பாணம் மாநகர சபை, வவுனியா நகரசபை என்பவற்றுடன், மட்டக்களப்பு மாநகர சபை உள்ளிட்ட கிழக்கு மாகாணத்தின் 9 உள்ளூராட்சி மன்றங்களிலும் இவ்வாறு தேர்தல் நடத்தப்பட வேண்டி இருப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நிலையில் அந்த உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்களை உடனடியாக நடத்துமாறு அவர் கோரியுள்ளார். (த)

## கடலுணவுகளின் நேற்றைய நிலைவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|
| இறால் | 700 | 650 | 700 | 600 | 450 |
| நண்டு | 450 | 350 | 300 | 300 | 360 |
| கணவாய் | 600 | 600 | 450 | 700 | – |
| பாரை | 450 | 450 | 500 | 400 | 370 |
| சுறா | 600 | 500 | 550 | – | – |
| சீலா | 350 | 400 | 400 | 300 | 350 |
| விளை | 450 | 450 | 450 | 400 | 350 |
| முரல் | 400 | 350 | 300 | 300 | – |
| கும்பிளா | 350 | 350 | 400 | 300 | 270 |
| கிழாக்கன் | 450 | 500 | 300 | 300 | – |
| ஒரா | 300 | 350 | 350 | 300 | – |
| திரளி | 350 | 250 | 200 | 100 | – |
| நகரை | 250 | 250 | 300 | 200 | 250 |
| சூடை | 180 | 150 | 100 | 100 | 60 |
| ஒட்டி | 300 | 250 | 200 | 150 | – |
| திருக்கை | 180 | 350 | 200 | 200 | 130 |
| பாலை | 200 | 250 | 400 | 200 | – |
| வாளை | 200 | 150 | 300 | 400 | 200 |
| கொய் | 80 | 150 | 80 | 50 | – |
| மதனம் | 300 | 250 | 220 | 200 | 200 |

# வரி ஏய்ப்புச் செய்த இரண்டு பேர் கைது

கொழும்பு, பெப் 8
2002–2004 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கையில் இடம்பெற்ற 399 கோடி ரூபா வரி ஏய்ப்பு மோசடி வழக்கின் குற்றவாளிகள் இருவர் மலேசியாவில் வைத்துக் கைது செய்யப்பட்டு நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

இலங்கையில் இரகசியப் பொலிஸ் குழு ஒன்று மலேசியாவுக்குச் சென்று அவர்களைக் கைது செய்ததாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த மோசடி தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்டிருந்த எட்டு பேருக்குக் கடந்த வருடம் சிறைத் தண்டனையும் அபராதமும் விதிக்கப்பட்டது.

எனினும் அவர்கள் நீதிமன்றத்தைப் புறக்கணித்து வெளிநாடுகளில் வசித்து வந்தனர். அவர்களில் 280 மற்றும் 100 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். (த)

## மரக்கறிகளின் நேற்றைய நிலைவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | திருநெல் வேலி | [illegible] | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 30 | 50 | 50 | 20 | 40 | 60 | 40 |
| கத்தரி | 80 | 60 | 70 | 60 | 80 | 60 | 50 |
| கரட் | 150 | 160 | 140 | 140 | 160 | 120 | 230 |
| | 40 | 50 | 40 | 30 | 60 | 45 | 30 |
| பயிற்றை | 120 | 120 | 120 | 120 | 180 | 120 | 100 |
| பாகல் | 90 | 100 | 100 | 100 | 200 | 120 | 150 |
| கருணைக்கிழங்கு | 70 | 50 | 50 | 50 | 80 | 80 | 40 |
| பெ.வெங்காயம் | 120 | 70 | 80 | 70 | 90 | 80 | 70 |
| சி.வெங்காயம் | 40 | 120 | 120 | 80 | 140 | 120 | 110 |
| பூசணி | 80 | 70 | 70 | 80 | 120 | 120 | 80 |
| தக்காளி | 200 | 160 | 200 | 180 | 320 | 240 | 230 |
| வாழைக்காய் | 100 | 70 | 70 | 80 | 120 | 120 | 70 |
| கீரை | 15 | 20 | 30 | 20 | 30 | 35 | 15 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 40 | 20 | 20 | 25 | 25 |
| மிளகாய் | 200 | 200 | 250 | 160 | 400 | 400 | 250 |
| புடோல் | 80 | 60 | 80 | 80 | 120 | 120 | 90 |
| கோவா | 100 | 80 | 80 | 90 | 160 | 130 | 100 |
| வெண்டி | 120 | 120 | 100 | 80 | 120 | 160 | 120 |
| போஞ்சி | 160 | 160 | 120 | 130 | 180 | 150 | 230 |
| லீக்ஸ் | 150 | 120 | 200 | 220 | 320 | 200 | 220 |
| தேங்காய் | 55 | 50 | 40 | 40 | 50 | 35 | 40 |
| உருளைக்கிழங்கு | 65 | 60 | 60 | 60 | 80 | 80 | 50 |
| தேசிக்காய் | 40 | 40 | 50 | 40 | 60 | 60 | 25 |
| வல்லாரை | 20 | 20 | 20 | 30 | 10 | 20 | 15 |
| கறிமிளகாய் | 200 | 200 | 160 | 160 | 260 | 220 | 250 |
| இராசவள்ளி | 100 | 120 | 100 | 80 | – | 200 | 80 |
| பனங்கிழங்கு | 04 | 02 | 04 | 05 | 05 | 03 | 03 |

# துமிந்த சில்வா கைதாவார்?

கொழும்பு, பெப் 8
அரசியல்வாதிகளான விமல் வீரவன்ஸவின் மனைவி சஷி வீரவன்ஸ, துமிந்த சில்வா ஆகியோரை விரைவில் பொலிஸார் கைது செய்து விசாரிப்பர் எனத் எதிர்பார்க்கப்படுகின்றது.

எதிர்காலத்தில் அரசியலுடன் தொடர்புபட்ட இரு பிரபலங்கள் கைது செய்யப்படுவர் என அதன் பேச்சாளர் அஜித் ரோகண தெரிவித்தார். ஆனால் எப்போது கைது செய்யப்படுவர் என விவரம் எதுவும் தெரிவிக்கவில்லை. போதைப் பொருள் கடத்தல் கும்பலுடன் துமிந்தவுக்குத் தொடர்பு இருக்கிறது என சந்தேகப்படுகின்றது. இது தொடர்பாக 50 வீதமான விசாரணையை சி.ஐ.டியினர் முடித்து விட்டனர்–என்றார் ரோகண.

இதேபோன்று வெவ்வேறு பெயர்களில் இரண்டு கடவுச் சீட்டுக்களைப் பெற்றமைக்காக வீரவன்ஸவின் மனைவி சஷி கைது செய்யப்படுவார் எனத் தெரிகிறது. இருவரும் வரும் வாரத்தில் கைது செய்யப்படுவர் என எதிர்பார்க்கப்படுகின்றது. (த)


ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ
**கண்ணீர் அஞ்சலி**
வில்லிசைப் புலவர் கலாபூஷணம்
நாகலிங்கம் கணபதிப்பிள்ளை (சின்னமணி)
எமது சங்கத்தின் முன்னைநாள் உபதலைவரும், வில்லிசை வேந்தனுமாகிய சின்னமணி அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!
213/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
செயலாளர், அகில இலங்கை விஸ்வகர்மகுல சங்கம்.
(56609) (45.7.3


சட்டமேதை ஜீ.ஜீ.பொன்னம்பலம் (Q.C.)
அவர்களது 38 ஆவது சிரார்த்த தின நிகழ்வுகள் 09.02.2015
நாளை (09.02.2015) திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு குருநகரில் அமைந்துள்ள அன்னாரின் உருவச்சிலைக்கு மலர்மாலை அணிவித்து அகவணக்கம் செலுத்தும் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.
ஆதலால் அனைவரையும் இந் நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
அப்பாத்துரை விநாயகமூர்த்தி
நாடாளுமன்ற உறுப்பினர், முன்னாள் தலைவர், ஆதரவாளர், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், விழாக்குழுவினர்.

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி
தோற்றம் 12 * 05 * 1847

மறைவு 22 * 01 * 2014
அமரர் கந்தையா துரைராஜா
ஓராண்டு தான் ஓடி மறைந்ததுவோ அப்பா!
உங்களின் பாசமுகம் காணாமல் துடிக்கின்றோம் நாம் இங்கு அப்பா!
எம்மை அன்புடனும் பாசத்துடனும் வளர்த்தீர்கள் அப்பா!
எம் உயிர் உள்ளவரை உங்களை நாம் மறவோம் அப்பா!
மகன்மார், மகள்மார், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி
தோற்றம் 05 . 06 . 1933
மறைவு 22 . 01 . 2014

திதி: 10.02.2015
திருமதி ஜெயதேவி கிருஸ்ணசாமி
(ஓய்வுபெற்ற அதிபர்–சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம், முன்னாள் ஆசிரியை - சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரி)
அன்னாரது திதியன்று குழந்தைகளுக்கு அன்னதானமும் அவர் நேசித்து வளர்த்தெடுத்த கல்லூரியைச் சார்ந்த இரு மாணவர்களுக்கு கற்றல் உதவித் தொகையும் வழங்கப்பட்டு, அவர் ஆற்றிய கல்விச் சேவை தொடரப்படுகிறது.
பாசத்தைச் சுமந்து வழிகாட்டியாக எம்மை வழி நடத்திய அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
174/4/4, மெசேஞ்சர் ஸ்ரீட், (Me.ssenger) கொழும்பு 12
தங்கை: நல்லாதேவி சிறிறங்கநாதன்
பெறாமக்கள்: சாலினி சிறிறங்கநாதன்
தம்பி: சிவதாசன்
(C/19248) (4.8.3)

# ‘போர்ட் சிற்றி’ சீனாவுக்கு அனுமதி கடும் அதிருப்தியில் இந்திய அரசு

கொழும்பு, பெப். 8
கொழும்பு துறைமுக நகரத் திட்டத்தைத் தொடர்ந்து மேற்கொள்ள சீனாவுக்கு அனுமதி அளிக்கப்பட்டிருப்பதாக இலங்கை அரசு விடுத்துள்ள அறிவிப்பால் இந்தியா அதிருப்தி அடைந்துள்ளது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ஆட்சியின்போது கொழும்பு துறைமுக நகரத் திட்டத்தை செயல்படுத்த இலங்கை, சீனா இடையே ஒப்பந்தம் கையெழுத்தானது. சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.

கடந்த ஜனவரியில் நடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக போட்டியிட்ட மைத்திரிபால சிறிசேன ஐ.தே.க தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் கொழும்பு துறைமுக நகரத் திட்டத்தைக் கடுமையாக விமர்சித்தனர். புதிய அரசு பதவியேற்றவுடன் இத்திட்டம் மறு ஆய்வு செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில் ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேன தலைமையில் அண்மையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில், கொழும்பு துறைமுக நகரத் திட்டத்தை தொடர்ந்து செயல்படுத்த சீனாவுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இந்தத் தகவலை அமைச்சரவைப் பேச்சாளரும் சுகாதாரத் துறை அமைச்சருமான ராஜித சேனாரத்ன நிருபர்களிடம் தெரிவித்தார்.

ராஜபக்ஷ ஆட்சிக்காலத்தில் இலங்கையில் சீனாவின் ஆதிக்கம் அதிகரித்து வந்தநிலையில் புதிய அரசு பொறுப்பேற்றபிறகு இலங்கையின் நடவடிக்கைகளில் மாற்றம் ஏற்படும் என்று இந்திய தரப்பில் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் திடீர் திருப்பமாக கொழும்புத் துறைமுக நகர திட்டத்தைச் செயல்படுத்தச் சீனாவுக்கு அனுமதி அளிக்கப்பட்டிருப்பது இந்திய வட்டாரத்தில் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (த-சி)

# மொஹான் வழக்கில் ரிட் மனுத் தாக்கல்



யாழ்ப்பாணம், பெப். 8
முன்னாள் பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ், சட்டமா அதிபராகக் கடமையாற்றிய காலப் பகுதியில் 619 மில்லியன் ரூபா அரசுக்கு இல்லாது போயுள்ளதாகக் குறிப்பிட்டு ஏற்கனவே வழக்குத் தாக்கல் செய்த நிலையில் ரிட் மனுவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சட்டத்தரணிகளான என். கொடித்துவக்கு மற்றும் சுங்க அதிகாரி ஆர்.ரத்னசிறி ஆகியோரினால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த முறைப்பாடு தொடர்பான விடயங்களை தெளிவூட்டுவதற்காக பெப்ரவரி மாதம் 6 ஆம், 9 ஆம் மற்றும் 10 ஆம் திகதிகள் முறைப்பாட்டாளர்களால் பிரேரிக்கப்பட்டிருந்தன.

முன்னாள் பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸிக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள லஞ்சக் குற்றச்சாட்டு தொடர்பிலான விடயங்களை தெளிவூட்டுவதற்கு மூன்று தினங்களை வழங்க முடியாது என மேன்முறையீட்டு நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

மொஹான் பீரிஸின் கடவுச்சீட்டை ரத்து செய்யுமாறு முறைப்பாட்டாளர்களால் கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தது.

எனினும், இந்த விடயத்தை நடைமுறைப்படுத்தாமையால், இந்த விடயம் தொடர்பில் ஆணைக்குழுவிற்கு உத்தரவிடுமாறு கோரியே முறைப்பாட்டாளரால் மேன்முறையீட்டு நீதிமன்றத்திடம் ரிட் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(த-4)


## தேவை

யாழ்ப்பாணத்தில் புதிதாக ஆரம்பிக்க உள்ள ரவல்ஸ் அன் ரூர்ஸ் (Travels & Tours) நிலையத்திற்கு அனுபவம் உள்ள முகாமையாளர், உதவி முகாமையாளர் தேவை. விளம்பர இல. 5047
C/o உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

## வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் பிளாஸ்ரிக் பொருள்களை விற்பனை செய்யும் நிறுவனம் ஒன்றுக்கு களஞ்சியக் காப்பாளராகவும், கணக்கு எழுதுநராகவும் கடமையாற்றக்கூடியவர்களும்,, வாகனத்தில் சென்று பொருள்களை ஏற்றி இறக்கக் கூடியவர்களும் தேவை. விருப்பமானவர்கள் **09.02.2015 அன்று 153, பலாலி வீதி, கந்தர்மடம்** என்னும் முகவரிக்கு (பழைய சிகரம் நிறுவனம் இயங்கிய இடம்) காலை 9.00 மணிதொடக்கம் 11.30 வரையும், மாலை 3.30 - 6.00 மணிவரையும் சுயவிவரத்துடன் நேரில் வரவும். சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.

**தொ.பே.இல.:**
**0718565711 / 0773628944**



UK, Australia, Canada, USA, New Zealand, Denmark, France, Germany, Italy, Japan, Netherlands, Norway, Switzerland, Sweden etc...

## வங்கியில் பணவைப்பு

Saving book, Fixed Deposit, Statement
3, 6, 12 மாதங்களுக்கான (முன், பின்) பணவைப்பு (அரசவங்கிகளில் மட்டும்)

Migration / Skill Migration / Visit Visas / Student Visas / Dependent / Business / Investment / New Applications etc...

(நேரத்தை முன் கூட்டியே பதிவு செய்து கொண்டு வரவும்).

SKYWALK Visa Solutions
ஸ்கைவோர்க் வீசா சொலூஷன்
No.65, 1/1, Galle Road, Dehiwala. (Food City - 1st Floor)
077-7711905

## SB TRAVELS & TOURS (PVT) LTD

SPECIAL AIR FARES

E-mail: sbtravels99@yahoo.com, sbtravels@sltnet.lk

| | | | |
|---|---|---|---|
| MADURAI | 16,200/- | LONDON | 81,600/- |
| TRICHI | 22,400/- | MALDIVES | 17,500/- |
| CHENNAI | 23,500/- | PARIS | 86,699/- |
| BOMBAY | 28,000/- | TORONTO | 148,200/- |
| BENGALURU | 28,900/- | NEW YORK | 107,000/- |
| KOCHI | 22,400/- | MELBOURNE | 99,800/- |
| DELHI | 40,400/- | PERTH | 102,200/- |
| MALAYSIA | 32,400/- | CANTON | 66,900/- |
| SINGAPORE | 27,500/- | NARITA | 77,900/- |
| BANGKOK | 29,900/- | AUCKLAND | 130,900/- |
| SYDNEY | 102,600/- | | |

Condition Apply

VISA MASTER American Express Card Accepted

ONE WAY: DUBAI-23,800/-, DOHA-23,800/-, ABUDHABI-18,800/-, SHARJAH-18,500/-

சகல நாடுகளுக்குமான டிக்கட்டுகள் மிக நியாய கட்டணத்தில் பெற இன்றே அழையுங்கள்:

**0771083480,81,82,83**
**0766911080,81,82,83,84,85,86,87,89,90**

Doha Qatar Bureau Arrangement செய்து தரப்படும்.
India, Bangkok, Malaysia Visa Arrangement செய்து தரப்படும்.

No324, ALUTHMAWATHA ROAD, COLOMBO-15. TEL-011 2540280
No: 132, SRI KATHERASAN STREET, COLOMBO 13. TEL-011 2333322
NO 15, JEMPATTAH STRRET, COLOMBO-13. TEL- 011 2446666
E-mail: sbtravels99@yahoo.com Contact for Travel Insurance

## சிறுநீரகம் தேவை

வயது 22-45, B+ve வகையைச் சேர்ந்த சிறுநீரகம் தேவை. (இருபாலாரும்)
தொடர்பு: 077 87 59 400

## விநியோகப் பிரதிநிதிகள் தேவை

ஐரோப்பாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் கார்கெயார் (CAR CARE) உற்பத்திகளை விநியோகிப்பதற்கு விநியோகப் பிரதிநிதிகள் தேவைப்படுகின்றனர்.

வங்கி உத்தரவாதம், போக்குவரத்து, களஞ்சிய வசதி மற்றும் விற்பனையாளர்கள் - விநியோகப் பிரதிநிதிகள் சகல மாவட்டங்களுக்கும் தேவை. இவ்வாறான உற்பத்தி தொடர்பில் அனுபவம் வாய்ந்திருப்பின் அது மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

விண்ணப்பம் அனுப்பப்படவேண்டிய முகவரி:
முகாமைத்துவப் பணிப்பாளர்,
ஓட்டோ டயனமிக்ஸ்
பிரைவேட் லிமிட்டெட்.
தொ. பே.இல : 0777 800 598

## கணக்காளர் தேவை

எமது வியாபார ஸ்தாபனத்துக்கு அனுபவமுள்ள கணக்காளர் தேவை. ஆண் / பெண் இருபாலாரும் விரும்பத்தக்கது யாழ்ப்பாணம், நல்லூர் பகுதியில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு :
077 900 9541

## வீடு காணி விற்பனைக்கு

டச்சு வீதி, உடுவிலில் வீடு வளவொன்றும் வவுனியா, வைரவப் புளியங்குளம், கதிரேசு வீதியில் இரண்டு பரப்புக் காணியும் விற்பனைக்குள்ளன.
தொடர்பு: 077 624 8771 (சி.19618) (45.3.7)

## கடை தேவை

Whole Sale & Import விற்பனை நிலையத்துக்கு யாழ்ப்பாணத்தில் 1000qm - 2000 qm இலும் வவுனியாவில் 1500 qm - 3500 qm இலும் கடை (Shop) தேவை.
தொடர்புகளுக்கு: 077 595 4029 (சி.19620) (45.3.7)

## வேலையாள்கள் தேவை

யாழ்ப்பாணம்- கொழும்பு சென்று வரும் பாரவூர்திக்கு உதவியாளர் தேவை.
தொடர்பு: 077 573 6003

## கட்டட இயந்திரங்கள் தேவை

500 டிராக்டர் லோட் தேவையாக உள்ளது.
தொடர்பு: 077 069 0066

## வாகனம் வாடகைக்கு

பொதிகள் ஏற்றி இறக்குவதற்கும் திருமண சேவைக்கும் சுற்றுலா செல்வதற்கும் மற்றும் உங்கள் தேவைகளுக்கும் (படி) மற்றும் கார் என்பன வாடகைக்குள்ளன.
தொடர்பு: 021 300 3414, 077 346 3643

## வாடகைக்கு

திருநெல்வேலி வளாக வீதியில வீடு வாடகைக்குண்டு.
தொடர்பு: 077 508 5778.077 190 7462

## செல்லா சினிமா யாழ்ப்பாணம்

11அடி அகலம் LED திரையில் இப்பொழுது காண்பிக்கப்படுகிறது
அஜீத் நடிக்கும் என்னை அறிந்தால்




காட்சி: 10.30, 2.30, 6.30, 9.30
முற்றிலும் குளிரூட்டப்பட்டது

## Majestic Cineplex Jaffna

கார்கில்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்




பிளட்டினம் / ப்ரொன்ஸ் 10.30 / 2.30 / 6.30




சில்வர் 10.15 / 2.15 / 6.15
விசாரணை ☎ 021-2227712
www.facebook.com/CeylonTheatres www.ceylontheatres.com

## ஆசிரியர் தேவை

Biology, Chemistry, Physics English Mediumத்தில் கல்வி கற்பிப்பதற்கு ஆசிரியர் தேவை.
தொடர்பு: 071 89 46 461

## ஆங்கில ஆசிரியர் தேவை

எமது நிறுவனத்திற்கு ஆங்கிலம் கற்பிக்கக் கூடிய பெண் ஆசிரியர்கள் தேவை. கிளிநொச்சி, தர்மபுரம், விசுவமடு பகுதியில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு: 021 222 7560, 076 690 1516

## வீட்டுப்பணிப்பெண் தேவை

கோண்டாவிலில் வசிக்கும் சிறிய குடும்பம் ஒன்றுக்கு வீட்டில் தங்கி நின்று வேலை செய்யக்கூடிய 40 வயதுக்கு மேற்பட்ட பணிப்பெண்தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.
தொடர்பு: 075 543 7130

## இலவச ஆங்கிலக் கற்கைநெறி வகுப்புகள்

(03 Months) 2nd Batch
பாடசாலைக்கு செல்வோர், பாடசாலையை விட்டு விலகியோர், தொழில்புரிவோர் இணைந்து கொள்ளலாம்.
ஆரம்பம்:- March, 2015
தொடர்புகளுக்கு : 021 222 7560

## விந்தனின்

வீட்டின் மீது சரமாரியாகக் கல்லை வீசினார்கள். வீட்டு ஓடு மற்றும் கண்ணாடி என்பன உடைந்தன.

தாக்குதல்முழுந்து அரைமணிநேரத்தின் பின்னர் நான்வீட்டுவளவிலிருந்தவாறே வெளியில் பார்த்தேன். இதன்போது வீட்டிலிருந்து 100 மீற்றர் தூரத்தில் வெள்ளை ஹையஸ் ரக வாகனம் ஒன்று நின்றிருந்தது. அதன் அருகே மூன்று பேர் இரும்புக் கம்பி மற்றும் வாள்களுடன் நின்றிருந்தனர்–என்றார்.

'தீவுக்கு வராதே, தீவுக்கு வந்தால் சுடுவோம்' என்ற வார்த்தைகளைப் பிரயோகித்தே ஆரம்பத்தில் திட்டியதாக விந்தன் குறிப்பிட்டார். அத்துடன் கடந்த ஜனாதிபதித் தேர்தல் பரப்புரை நடவடிக்கையின் போது வேலணையில் வைத்து தனது வாகனத்தின் மீது தாக்குதல்மேற்கொள்ளப்பட்டமை அதனுடன் தொடர்புடைய மூன்று பேர் கைது செய்யப் பட்டனர். அவர்கள் ஈ.பி.டி.பி யைச் சேர்ந்தவர்கள் என்று விந்தன் தெரிவித்தார்.

இதனைவிட, நெடுந்தீவுக்கு முதலமைச்சர் சென்றபோது அங்கு, ஈ.பி.டி.பியின் ஆதர வாளரான பஸ் சாரதி ஒருவர் தொடர்பில் மக்கள் முதல மைச்சரிடம் முறைப்பாடு செய்தனர். இதனையடுத்து அவர் இடமாற்றம் செய்யப்பட்டிருந்தார். இந்தப் பின்னணியிலேயே தனது வீட்டின் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக விந்தன் சுட்டிக்காட்டினார். (த-5)

## காணாமற்

செய்யப்பட்டுள்ளது.

எனவே காணாமற் போன வர்களின் உறவினர்களும், அரசியல் கைதிகளின் உறுப்பினர்களும் இந்தக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொள்ளுமாறும், மனிதநேயச் செயற்பாட்டாளர்களையும் இதில் கலந்து கொள்ளுமாறும் காணாமற்போனவர்களைத் தேடிக் கண்டறியும் குழுவின் செயலாளர் சுந்தரம் மகேந்திரம் கேட்டுள்ளார். (த-4)

## சிற்றுண்டி

நிலையங்களில் 15 ரூபாவுக்கு விற்ற தேநீர் 10 ரூபாய்க்கும், 30 ரூபா விற்ற பால்தேநீர் 25 ரூபாய்க்கும், பசுப் பால்தேநீர் 30 ரூபாவுக்கும், 20 ரூபா விற்ற சாதாரண வடை 15 ரூபாவாகவும், 30 ரூபா விற்ற பெரிய வடை 25 ரூபாவாகவும், கோதுமைமாவில் செய்த 20 ரூபா பெரிய ரொட்டி 15 ரூபாவாகவும், குறைக்கப்பட்டு விற்பனை செய் யப்படவுள்ளன.

புதிய அரசு அத்தியாவசியமான பொருள்களின் விலையைக் குறைத்ததை அடுத்து சிற்றுண்டி வியாபாரிகள் யாழ்.வணிகர் கழகத்துடன் சந்தித்துக் கலந்துரையாடி இந்த முடிவுக்கு வந்துள்ளனர்.

யாழ்.நகருக்கு வெளியேயுள்ள சிறு நகர, கிராமங்களில் ஏற்கனவேயுள்ள விலையை விடவும் அவர்கள் தாமாகவே முன்வந்து விலை குறைப்பைச் செய்ய வேண்டும். ஏனைய அத்தியாவசியப் பொருள்கள் கொழும்பில் தட்டுப்பாடு நிலவுகிறது. அரசு விலைக் குறைப்புச் செய்யவுள்ளதாக அறிவித்ததனால் கொழும்பு இறக்குமதியாளர்கள் இறக் குமதியை நிறுத்தி விட்டனர். அதனால் இங்கு விலைக்குறைப்பு உரிய முறை யில் நடைமுறைப்படுத்தவில்லை. விரைவில் நடைமுறைக்கு வந்து விடும் என்று ஜெயசேகரம் மேலும் தெரிவித்தார். (த-4)

## மனித உரிமை

அனுப்பியுள்ளது.

இலங்கை வெளிவிவ கார அமைச்சர் மங்கள சமரவீரவினால், ஜெனி வாவிலுள்ள இலங்கைத் தூதுவர் ஊடாகவே மனித உரிமைகள் ஆணையா ளர் சயிட் அல் ஹுசைனுக்கு அழைப்பிதழ் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கடந்த 2013 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் அப்போதைய மனித உரி மைகள் ஆணையாளர் நவநீதம் பிள்ளை இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்தார். அதன்பின்னரே, இலங்கைக்கு எதிரான ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் விசாரணைகள் ஆரம்பமாகியிருந்தன. இந்த விசாரணையின் எழுத்துமூல அறிக்கை, எதிர்வரும் மார்ச் மாதம் ஆரம்பமாகவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத்தொடரில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. அதற்கு முன்னதாக, அந்த அறிக்கையை சமர்ப்பிக்கவுள்ள சயிட் அல் ஹுசைனை இலங்கைக்கு அழைத்துள்ளது புதிய அரசு. (த-5)

## நெல்

கழகத் தலைவர் இ.ஜெயசேகரம் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

வடக்கில் நெல் அறுவடை ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. பலர் அறுவடை செய்து முடித்து விட்டனர். நெல்லின் கொள்வனவு விலை 50 ரூபா என்று அரசு அறிவித்துள்ளது. ஆனால் நெல் உற்பத்தியாளர்களிடமிருந்து நெல் கொள்வனவு செய்யும் பணிகள் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை.

அதனால் நெல் உற்பத்தியாளர்கள் தமது நெல்லை வைத்துப் பராமரிப்பது இட வசதி உட்பட பலகாரணங்களாலும் அவற்றைக் குறைந்த விலைக்கு விற்பனை செய்ய வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத்தள்ளப்பட்டுள்ளனர் என்று முறைப்பாடு கூறியுள்ளனர்.

எனவே வடக்கிலுள்ள மாவட்ட செயலகங்களின் அதிகாரிகள் நெல் கொள்வனவுக்கான நடவடிக்கையை உடனடியாக ஆரம்பிக்கவேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (த-4)

## ஆளும்

அங்கீகரிக் கப்பட்டது.

அதேவேளை, முன்னாள் அமைச்சர்களான தினேஷ் குணவர்த்தன, கீதாஞ்சன குணவர்த்தன, வீரகுமார திஸநாயக்க, வை.ஜி.பத்மஸ்ரீ, திஸ்ஸவிதாரண, விமல் வீரவன்ஸ, வாசுதேவ நாணயக்கார, டியூ குணசேகர ஆகியோர் சபையில் இருந்து ஆதரவாகவோ எதிராகவோ வாக்களிக்கவில்லை.

அநுரகுமார திஸநாயக்க தலைமையிலான ஜே.வி.பியினர் வாக்களிப்பு வேளையின்போது சபையில் இருக்கவில்லை.

இதேவேளை,

மைத்திரி அரசின் வரவு–செலவுத் திட்டத்தை வரவேற்பதாகவும், அதற்கு ஆதரவு வழங்குவதாகவும் முன்னாள் ஜனாதிபதியின் புதல்வரும் அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷவை நேற்று நாடாளுமன்றத்தில் பகிரங்கமாகக் கூறினார். (த)

## பாதுகாப்பு

தனித் தனியே சந்திப்புக்களை நடத்தினார் பாதுகாப்பு அமைச்சர். இதன் பின்னர் தேநீர் விருந்துபசாரத்தின் போது ஊடகவியலாளர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார். ஊடகவியலாளர் ஒருவரினால் எழுப்பப்பட்ட கேள்விக்கே பாதுகாப்பு அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

'வடக்கில் அமைக்கப்பட்டுள்ள அதி உயர்பாதுகாப்பு வலயங்களைக்குறைப்பது தொடர்பில் ஜனாதிபதி மைத்திரி மற்றும் பிரதமர் ரணில் இணைந்து குழு அமைத்துள்ளனர். இந்த விடயம் தொடர்பில் மீள்குடியேற்ற அமைச்சரும் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனும் – தமிழ் மக்களுடனும் இது தொடர்பில் பேச்சுக்கள் நடத்தப்படும். இதனூடாகவே உயர் பாதுகாப்பு வலயங்களைக் குறைப்பது தொடர்பிலான இறுதித் தீர்மானத்துக்கு வர முடியும்' என்று குறிப்பிட்டார் அமைச்சர்.

அத்துடன் வடக்கில் தனியார் காணிகளை இராணுவத்தினர் கையகப் படுத்தி வைத்துள்ளமை தொடர்பில் ஆராயக் குழு ஒன்று விசேடமாக நியமிக்கப்பட்டுள்ளது' எனத் தெரிவித்தார் விஜேயவர்த்தன. (த-5)

## மு.காவின்

மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் நேற்று 'உதயனி'டம் தெரிவித்தார்.

எனினும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தந்தை செல்வா காட்டிய நேரான வழியில் பயணித்து தமிழ், முஸ்லிம் மக்களின் உரிமைகளை வென்றெடுக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும் இடையே கிழக்கு மாகாண முதலமைச்சர் பதவி விவகாரம் பனிப்போராக மூண்டிருந்த நிலையில், மீண்டும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் இணைந்து கிழக்கில் மு.கா. ஆட்சியமைத்துள்ளது.

கிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் இணைந்து ஆட்சிமைக்கும் என்ற நம்பிக்கையில் தமிழ், முஸ்லிம் மக்கள் இருந்தவேளையில் மு.காவின் தலைமை தன்னிச்சையாக முடிவெடுத்து மீண்டும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் கைகோத்து ஆட்சியமைத்துள்ளமையை பலரும் விமர்சித்து வருகின்றனர்.

மு.காவின் இந்த முடிவு தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கருத்து என்னவென்று அதன் தலைவர் இரா.சம்பந்தனிடம் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

2012 ஆம் ஆண்டு கிழக்கு மாகாண சபைத் தேர்தலின்போது, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியிலிருந்து வெளியேறி தனித்துப் போட்டியிட்டிருந்தது சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ். இந்தத் தேர்தலில் மு.காவை விட 61 ஆயிரம் வாக்குகள் கூடுதலாகப் பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, 11 ஆசனங்களை வென்றிருந்தது. ஆனால், மு.கா. 7 ஆசனங்களையே பெற்றிருந்தது.

அதேவேளை, எம்மைவிடப் பங்காளிக் கட்சிகளைக் கொண்ட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 6 ஆயிரத்து 100 வாக்குகளையே கூடுதலாகப் பெற்று 12 ஆசனங்களை வென்றிருந்தது. கிழக்குத் தேர்தலில் 3 மாவட்டங்களில் 2 மாவட்டங்களில் (திரு கோணமலை, மட்டக்களப்பு) தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முதலிடம் பெற்றிருந்தது. அம்பாறை மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி முதலிடம் பெற்றிருந்தது. ஆனால், எந்தவொரு மாவட்டத்திலும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முதலிடத்தைக் கைப்பற்றியிருக்கவில்லை.

2012 கிழக்கு மாகாண சபைத் தேர்தல் முடிவுகளின் பிரகாரம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து ஆட்சியமைக்குமாறு மு.காவைக் கேட்டிருந்தோம். இதற்காக முதலமைச்சர் பதவியையும் மு.காவுக்காக விட்டுத் தருகின்றோம் என்று கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீமிடம் நாம் பகிரங்கமாகத் தெரிவித்திருந்தோம். ஆனால், எமது கருத்துகளுக்கு செவிசாய்க்காமல் எம்மை நிராகரித்துவிட்டு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் இணைந்து கிழக்கில் அக்கட்சி ஆட்சியமைக்க மு.கா. உதவியது.

இந்நிலையில், இம்முறை ஜனாதிபதித் தேர்தலின்போது முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவின் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியிலிருந்து வெளியேறியிருந்த சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், பொது எதிரணியின் வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவை ஆதரித்தது.

இதனையடுத்து கிழக்கு மாகாண சபை ஆட்சி பெரும்பான்மையை இழந்தது.

ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் கிழக்கில் ஆட்சியமைப்பது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும் இடையில் பேச்சுகள் நடைபெற்றன. இதன்போது கிழக்குத் தேர்தலில் மக்களின் ஜனநாயகத் தீர்ப்பின் பிரகாரம் மு.காவை விட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே முதலமைச்சர் பதவியைப் பெறுவதற்கு முன்னிலையில் நிற்கின்றது. எனவே, முதலமைச்சர் பதவி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வழங்கவேண்டும் என்பதில் நியாயம் இருக்கின்றது என்பதனை மு.காவின் தலைமைக்கு நாம் எடுத்துரைத்தோம். எமது நியாயமான கருத்துகளை புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் ஏற்றிருந்தனர்.

தமிழ், முஸ்லிம் மக்களின் உரிமைகளை மதிக்காமல், அவர்களின் ஒற்றுமையைப் பற்றி சிறிதளவும் சிந்திக்காமல், ஜனாதிபதித் தேர்தலில் அவர்கள் வழங்கிய ஆணையைத் தூக்கியயறிந்துவிட்டு பதவிக்காகவும் சுகபோகங்களுக்காகவும் மீண்டும்' ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் இணைந்து கிழக்கு மாகாணத்தில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆட்சியமைத்துள்ளது. இது வெட்கக்கேடான செயலாகும். எனினும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தந்தை செல்வா காட்டிய நேரான வழியில் பயணித்து தமிழ், முஸ்லிம் மக்களின் உரிமைகளை வென்றெடுக்கும் –என்றார். (த-4)

## இலங்கைக்கு

பாதுகாப்புக் கொள்கை குறித்த தனது உரையிலேயே அவர் இதனை குறிப்பிட்டார்.

மாற்றத்தைச் சந்தித்திருக்கும் இலங்கை, மியன்மார், டுனீசியா போன்ற நாடுகளுக்கு நாங்கள் உதவுவோம் என அவர் கூறினார்.

இதேவேளை, அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பிரதிப் பேச்சாளர் மேரி ஹார்வ், நல்லிணக்கம் மற்றும் நீண்டகாலப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக இலங்கையின் புதிய அரசு எடுத்துள்ள ஆரம்பகட்ட முயற்சிகளைப் பாராட்டினார்.

நீண்ட கால விடயங்கள்–உரிமைகள், நல்லாட்சி, ஜனநாயகம், பொறுப்புக்கூறுதல் போன்ற விடயங்களுக்குத் தீர்வைக் காண மேற்கொள்ளப்பட்ட முயற்சி களை நாங்கள் வரவேற்கின்றோம். நிச்சயமாக சில சாதகமான நடவடிக் கைகள் எடுக்கப்பட்டுள்ளன என அவர் தெரிவித்தார். (த)

## கைதாவார்

அதில் அவர் மேலும் கூறியதா வது:–

ஏப்ரல் மாதமளவில் இராணு வப் புரட்சிக்குச் சதி செய்த முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் மற்றும் அவருடன் நெருங்கிச் செயற்பட்ட இராணுவ அதிகாரிகள் தொடர்பில் எமக்கு பல திடுக்கிடும் தகவல்கள் கிடைத்துள்ளன. போருக்குப் பின்னர் இலங்கையில் தலைதூக்கிய வெள்ளை வான் கலாசாரம், வடக்கில் காணாமற்போதல் மற்றும் தெற்கில் பேரினவாதச் செயற்பாடுகள் அனைத்துக்கும் இவர்களே காரணமாக இருந்துள்ளனர்.

இவர்களுக்கு விசுவாசமான 400 இராணுவச் சிப்பாய்களைக் கொண்ட புதிய இராணுவப் பிரிவை ஆரம்பித்துள்ளனர். இப் படையினருக்கு மேலதிக பயிற்சிகள் மாதுரு ஓயா இராணுவ முகாமில் வழங்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு நன்கு தமிழ் மொழி கற்பிக்கப்பட்டு வடக்கில் கடமையில் அமர்த்தப்பட்டுள்ளனர். அண்மைக் காலமாக வடக்கில் ஏற்பட்ட பிரச்சினைகளுக்கு இவர்களே காரணமாக இருந் துள்ளனர்.

இவர்களது அடுத்த கட்டத் திட்டமாக, நாட்டில் சிறு சிறு குழப்பங்களைத் தூண்டிவிட்டு பின்னர் ஏப்ரல் மாதமளவில் அரசைக் கவிழ்ப்பதற்குத் திட்டம் வகுத்திருந்தனர். ஆனால், இவர்களது திட்டங்கள் அனைத்தும் தற்போது அம்பலமாகியுள்ளன. இதற்கமைய நாங்கள் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதுடன் இவர்கள் விரைவில் கைது செய்யப்படுவர். அத்துடன் இதனுடன் தொடர்புடைய இராணுவ அதிகாரிகளையும் நாங்கள் ஒட்டுமொத்தமாக இடை நிறுத்தவுள்ளோம்." என்றும் அவர் கூறினார். (த-சி)

## காணியைக்

குரல் அமைப்பினர் பௌத்தாலோக மாவத்தையில் குறித்த காணி யின் உரிமையாளர் என கூறப்படும் பெண்ணுடன் சென்றிருந்தனர். காணிக் குள் செல்வதற்கு அவர்கள் முயற்சித்த போதிலும் அங்கிருந்த பாதுகாப்பு உத்தியோகதர்கள் அனுமதி வழங்கவில்லை. அந்தக் காணியில் ரஷ்யத் தூதரகம் அமைக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

குறித்த காணியின் உரிமையாளர் என்று உரிமை கோரும் சிஷனாஸ் பேகம் என்பவர், அந்தக் காணி தமக்குரிய காணி எனவும் அதனை ரஷ்யத் தூதரகம் எவ்வித அறிவித்தலுமின்றிச் சுவீகரித்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

'இந்தக் காணிக்காகத்தான் 2007 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 9 ஆம் திகதி பொரளைச் சந்தியில் எனது தந்தை கொலை செய்யப்பட்டார். நாங்கள் உயர்மட்ட அதிகாரிகளிடம் சென்று நீதி கோரினோம். ஆனால் பலனில்லை. எம்மிடம் உறுதியுள்ளது. நீதிமன்றம் சென்ற போதிலும் அவர்கள் எம்முடன் பேசுவதற்கு வரவில்லை. மேர்வின் சில்வா, பாதாளக் குழுத் தலைவர் பிரின்ஸ் கோலம் மற்றும் கோத்தபாய ஆகியோர் இதன் பின்னணியில் உள்ளனர்' என்று குறிப்பிட்டார்.

இதேவேளை, பாதுகாப்பு அதிகாரிகள் அனுமதி வழங்காத நிலையில் மேற்படி குழுவினர் காணிக்குள் சென்றமையினால் அங்கு பதற்றம் ஏற்பட்டது.

இதேவேளை, இந்த விடயம் தொடர்பில் ரஷ்யத் தூதரகம் அறிக்கை வெளியிட்டுள்ளது. குறித்த காணியில் இலங்கைக்கான ரஷ்யத் தூதரக அலுவலகம் அமையப்பெற்று வருகின்றது. இந்தக் காணியை 2846 என்ற இலக்க உறுதியின் மூலம் 1986 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 26 ஆம் திகதி இலங்கை அரசிடமிருந்து ரஷ்ய தூதரகம் பெற்றுக்கொண்டுள்ளது. அந்த சந்தர்ப்பத்தில் இந்தக் காணி தொடர்பாக எவ்விதமான அழுத்தங்களும் ஏற்படவில்லை என்றும் தூதரகம் சுட்டிக்காட்டியுள்ளது. (த-5)

## கரைதுறை

போது முல்லைத்தீவில் இல்லை என்றும், இதனால் மீளவும் வேட்பு மனுத் தாக்கல் இடம்பெறவேண்டும் என்றும் வலியுறுத் தப்பட்டுள்ளது.

இரண்டுதடவைகள் ஒத்திவைக்கப்பட்ட கரைத்துறைப்பற்று, புதுக்குடியிருப்பு பிரதேச சபைகளுக்கான தேர்தல் எதிர்வரும் 28 ஆம் திகதி இடம்பெறவுள்ளது. இந்தத் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் கடந்த 2011 ஆம் ஆண்டு இடம்பெற்றிருந்தது. இதன் பின்னர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டமை காரணமாக தேர்தல் இரு தடவைகள் ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

கரைத்துறைப்பற்று பிரதேச சபைக்கு 12 பேர் உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்படவேண்டும். இதற்காக ஒவ்வொரு கட்சியிலும் இருந்து 15 பேர் போட்டியிடுகின்றனர். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் போட்டியிடுவதற்கு சம்மதம் தெரிவித்திருந்த 15 பேரில் தற்போது 10 பேர் போட்டியிட மறுத்துள்ளனர். இது தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட தேர்தல்கள் திணைக்களத்தின் ஊடாக கொழும்புத் தேர்தல்கள் திணைக்களத்திற்குக் கடிதம் அனுப்பியுள்ளனர்.

அதில், கடந்த 2011 ஆம் ஆண்டு வேட்பு மனுக் கோரப்பட்டபோது அப்போதைய அரசாக இருந்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் இணைந்து போட்டியிடுவதன் மூலம் அபிவிருத்திகளைச் செய்யலாம் என்று கருதி வேட்பு மனுத் தாக்கல் செய்தோம். தற்போது மக்கள் ஆட்சி மாற்றத்தை விரும்பியுள்ளனர். இதனால் 2011 ஆம் ஆண்டு வேட்பு மனுவை அடிப்படையாக வைத்து தேர்தல் நடத்தக் கூடாது. மீளவும் வேட்பு மனுத் தாக்கல் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று வேட்பாளர்கள் பத்து பேர் குறிப்பிட்டுள்ளனர். அந்தக் கட்சியின் மூன்றிலிரண்டு வேட்பாளர்கள் இவ்வாறு தெரிவித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை புதுக்குடியிருப்பு பிரதேச மக்கள் என்று குறிப்பிட்டு, தேர்தல்கள் திணைக்களத்திற்குக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதில், எமது பிரதேசம் மீள்குடியமர்வு இடம்பெற முன்னர் வேட்பு மனுத் தாக்கல் செய்யப்பட்டது. அப்போது இடம்பெயர்ந்து தற்காலிகமாக தங்கியிருந்தவர்கள் வேட்பு மனுவை தாக்கல் செய்திருந்தனர். இவர்கள் தற்போது எமது பிரதேசத்திலேயே இல்லை. இதனால் புதிய வேட்பு மனுத்தாக்கல் இடம்பெறவேண்டும் என்று அதில் தெரிவித்துள்ளனர். (த-5)

# சுகாதாரத் தொண்டருக்கு நாளை நிரந்தர நியமனம்

## 31 பேர் மன உளைச்சலில்

யாழ்ப்பாணம், பெப். 8
யாழ்.போதனா வைத்தியசாலையில் பல வருடங்களாகப் பணியாற்றிய சுகாதாரத் தொண்டர்களுக்கு நியமனம் வழங்க அழைக்கப்பட்டுள்ளபோதும் அவர்களில் 31 பேருக்கு நியமனம் வழங்குவதற்கான அழைப்பு இன்மையால் அவர்கள் கடும் மன அழுத்தத்துக்கு உள்ளாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சுகாதார அமைச்சிலிருந்து வந்திருந்த அதிகாரிகள் அந்த 127 பேருக்கும் நியமனம் வழங்குவதாகக் கூறி அவர்களது தராதரம் உள்ளிட்ட ஆவணங்களை நேரடியாகப் பெற்றுச் சென்றிருந்தனர். நியமனம் கிடைக்கும் என்று எதிர்பார்த்திருந்த தொண்டர்கள், தம்மில் 96 பேருக்கு மாத்திரமே நியமனம் வழங்கப்படும் என்று கூறிப் பெயர்ப் பட்டியல் வந்திருந்தது. மிகுதி 31 பேரினது பெயர்ப்பட்டியல் அனுப்பப்படவில்லை. இதனால் அவர்கள் கடுமையாக மன அழுத்தத்துக்கு உள்ளாகியுள்ளனர். அது சிக்கலான நிலையைத் தோற்றுவித்ததனால் வைத்தியசாலையில் சிற்றூழியர் சங்கத்தினர் சுகாதார அமைச்சுடன் தொடர்புகொண்டு அது தொடர்பில் தெளிவுபடுத்தியுள்ளனர் என்று கூறப்படுகிறது.

இதனையடுத்து 127 பேரையும் நாளை திங்கட்கிழமை காலையில் சுகாதார அமைச்சுக்கு வருகைதருமாறு கூறப்பட்டுள்ளது.

அதனால் பல வருடங்களாக நாளாந்தம் 175 ரூபாவுக்குத் தொண்டர்களாகப் பணியாற்றிய அவர்கள் இன்று இரவு கொழும்புக்குப் பயணமாகின்றனர். தமக்கு மாத்திரமன்றிப் பெயர்ப் பட்டியலில் வராத 31 பேருக்கும் நியமனம் வழங்க வேண்டும் என்று தொண்டர்கள் கோருகின்றனர்.

அரசியல் காரணங்களால் 127 பேருக்கும் இதுவரை காலமும் நியமனம் வழங்கப்பட்டிருக்கவில்லை என்று கூறப்படுகின்றது.

வைத்தியசாலையில் ஒரு நாள்கூடத் தொண்டராகப் பணியாற்றாத பலருக்கு முன்னாள் அமைச்சர் நியமனம் வழங்கியிருந்தார். தற்போதுள்ளவர்களுக்கு நியமனம் வழங்குவதாக அவர் கூறி அவர்களிடமிருந்து ஆவணங்களையும் பல தடவைகள் பெற்றுள்ளபோதும் எதுவும் நடக்கவில்லை. இது தவிர 127 பேரின் விபரங்கள் எதுவுமே சுகாதார அமைச்சுக்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை என்றும் அதனாலேயே சுகாதார அமைச்சு அதிகாரிகள் 127 பேரினதும் ஆவணங்களை நேரடியாகப் பெற்றுச் சென்றிருந்தனர் என்றும் தொண்டர்களால் கூறப்பட்டுள்ளது.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இந்த நியமனம் வழங்கும் நிகழ்வு நாளை இடம்பெறவுள்ளது. சுகாதார அமைச்சர் நியமனங்களை வழங்குவார் என்று யாழ்.போதனா வைத்தியசாலைப் பதில் பணிப்பாளர் மருத்துவர் எஸ்.ஸ்ரீபவானந்தராஜா தெரிவித்தார். (த-4)


# அதிபர் இடமாற்றங்கள் பிற்போடப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம், பெப். 8
வடக்கு மாகாணத்திலுள்ள பாடசாலைகளின் அதிபர்களின் இடமாற்றங்கள் பிற்போடப்பட்டுள்ளதாக வடக்கு மாகாணத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 19 ஆம் திகதி அதிபர்களுக்குப் பதவியுயர்வு வழங்கப்படவுள்ளது. அதன் பின்னர் அவர்களின் தராதரத்துக்கு ஏற்ப பாடசாலைகளுக்கு நியமனம் செய்வதற்காகவே அதிபர் இடமாற்றங்கள் பிற்போடப்பட்டுள்ளதாகவும் 19 ஆம் திகதிக்குப் பின்னர் இடமாற்றங்கள் வழங்கப்படும் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-4-422)

## ஓராம் ஆண்டிலும் நெஞ்சில் இருக்கும் ஐயா

அன்னை மடியில்
07 ★ 09 ★ 1926



இறைவன் அடியில்
21 ★ 01 ★ 2014

### அமரர் வைரமுத்து சண்முகம்

எத்தனை ஆண்டுகள் சென்றாலும் - எங்கள்
சொத்தான ஐயா நீங்கள்
முத்தாக எமை வளர்த்த முழுமதியே-நாங்கள்
நித்தமும் வணங்கும் தெய்வமே போற்றி.

ஆத்மசாந்திப்பிரார்த்தனை செய்யும்

இல.89, குமரபுரம்.
பரந்தன்.
குடும்பத்தினர்.

# கூட்டமைப்பின் நல்லெண்ணம் இந்திய அதிகாரிகள் வரவேற்பு

கொழும்பு, பெப். 08
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நல்லெண்ண நடவடிக்கைகளை இந்திய அதிகாரிகள் வரவேற்றுள்ளனர். அத்துடன் இலங்கையின் புதிய அரசு இனப்பிளவை முடிவுக்கு கொண்டு வரும், தெளிவான-நிரந்தரமான அரசியல் தீர்வுத் திட்டத்தை முன்வைக்க வேண்டும் என்றும் அந்த அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளதாக இந்தியாவின் எக்கனொமிக் ரைம்ஸ் நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கை விவகாரங்களைக் கையாளும் இந்திய அதிகாரிகளை மேற்கோள்காட்டியே இந்தச் செய்தியை எக்கனொமிக் ரைம்ஸ் வெளியிட்டுள்ளது.

இலங்கையின் புதிய அரசு மேற்கொண்டுள்ள நல்லெண்ண நடவடிக்கைகள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நல்லெண்ணச் செயற்பாடுகளை இந்திய அதிகாரிகள் வரவேற்கின்றனர். இலங்கையின் சுதந்திர தின நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் ஆகியோர் பங்கேற்றது குறித்தும் சுட்டிக்காட்டியுள்ள, அந்த அதிகாரிகள் இந்தச் சாதகமான மாற்றங்களை இந்திய மத்திய அரசு வரவேற்பதாகவும் குறிப்பிட்டுள்ளனர். (த-5)

# இலங்கைப் போரில் நடந்தது என்ன?

## கேட்கிறார் பான்கிமூன்

கொழும்பு, பெப். 8
இலங்கையில் போரின்போது என்ன நடந்தது என்பது வெளிச்சத்துக்கு வர வேண்டும். அதற்காக இலங்கை அரசு முன்னெடுக்கும் நடவடிக்கையை வரவேற்கின்றோம். ஆனாலும் ஐ.நாவினால் முன்னெடுக்கப்பட்ட விசாரணைக்கு இலங்கை அரசு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

இவ்வாறு வலியுறுத்தியுள்ளார் ஐ.நா பொதுச் செயலாளர் பான்கி மூன்.

ஐக்கிய நாடுகள் சபையில் இடம்பெற்ற நாளாந்த ஊடகவியலாளர் சந்திப்பில், ஊடகவியலாளர் ஒருவரினால் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் பான்கிமூனின் பேச்சாளர் ஸ்டெபன் டுஜாரிக் மேலும் தெரிவிக்கையில்,

சர்வதேச தரநியமங்களுக்கு அமைவான உள்நாட்டு விசாரணை மேற்கொள்ளப்படும் என்ற இலங்கை அரசின் தீர்மானத்தை வரவேற்கின்றோம். அதேவேளை, ஐ.நாவினால் நடத்தப்படுகின்ற சர்வதேச விசாரணைக்கு இலங்கை அரசு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இதனை ஆரம்பத்திலிருந்தே வலியுறுத்தி வருவதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (த-5)

யாழ்ப்பாணம்
ஜொலி ஸ்ரார்ஸ்
விளையாட்டுக் கழகம்

வருடாந்தப் பொதுக்கூட்டம் - 2015

எமது சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 22.02.2015 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நடைபெறும். அங்கத்தவர்களைப் பங்கு பற்றுமாறு வேண்டுகிறோம்.

தொடர்புகளுக்கு: 077 178 9546

சி.உமாதரன்
செயலாளர் - இடைக்கால நிர்வாகக் குழு
(சி.19567)

கிருபா லேணர்ஸ்
226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

பெண்களுக்கு
கார், மோட்டார் சைக்கிள் பயிற்றுவிப்பதற்கு
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா
போன்ற கிளைகளுக்கு

பெண் பயிற்றுவிப்பாளர்கள்
தேவை


தொடர்புக்கு: 071 999 9990
021 222 4353

★ நிறைவான சம்பளம் வழங்கப்படும்.

# மரண அறிவித்தல்

## துரைராசா விஜயகுமார்

பிறப்பு: 15.03.1972 இறப்பு: 07.02.2015



திருகோணமலை, வரோதயநகர், பிரதான வீதியைச் சொந்த இடமாகவும், உடுவில் வீதி, மானிப்பாயை வசிப்பிடமாக்வும் கொண்ட துரைராசா விஜயகுமார் நேற்று (07.02.2015) சனிக்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற துரைராசா மற்றும் செல்வராணி தம்பதியரின் அன்பு மகனும், சுபாசினியின் அன்புக் கண்வரும் பிரசாந் , கிருசாந், கிருசாந்தினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், ரவிக்குமார், இதயகுமார், செல்வகுமார், தங்கேஸ்வரி, தயாந்தினி ஆகியோரின் சகோதரனும், சுரேஸ்குமார், சதீஸ்குமார், ஜெயக்குமார், ராஜினி, சர்மினி ஆகியோரின் மைத்துனரும், ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (08.02.2015) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

உடுவில் வீதி,
மானிப்பாய்

தகவல்:
குடும்பத்தினர்.

(56617) (10)

# மரண அறிவித்தல்கள்

## சந்திரசேகரலிங்கம் சிறிகரன்



நீர்வேலி மேற்கு, மாசவனைப் பிறப்பிடமாகவும், சுவிஸர்லாந்தை தற்போதைய வாழ்விடமாகவும் கொண்ட சந்திரசேகரலிங்கம் சிறிகரன் (அசோக்) நேற்று (07.02.2015) சுவிஸர்லாந்தில் அகால மரணமானார்.

அன்னார் நீர்வேலி மேற்கு, தம்பிப்பிள்ளை சந்திரசேகரலிங்கம் (முன்னாள் இ.போ.ச.நடத்துனர்) தம்பதியரின் புதல்வனும், சுகந்தினியின் (நெல்லியடி) அன்புக் கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சுவிஸர்லாந்தில் நடைபெறும். நீர்வேலி மேற்கு மீனாட்சி அம்மன் கோயிலடியில் உள்ள அவரது இல்லத் தில் துக்கம் அனுஷ்டிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
த.சந்திரசேகரலிங்கம் (தந்தை)

(C/19566) (10)

## கார்த்திகேசு நடராசலிங்கம்

(இளைப்பாறிய நெசவு ஆசிரியர்)

மலர்வு: 16.07.1923
உதிர்வு: 05.02.2015



கார்த்திகேசு வீதி, மீசாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்போது கனடா Northyork ஐ வாழ்விடமாகவும் கொண்ட கார்த்திகேசு நடராசலிங்கம் 05.02.2015 வியாழக்கிழமை அமெரிக்காவில் சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு(ஆசிரியர்)-நாயகம் தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், சரவணமுத்து-அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், இரத்தினம்மாவின் ஆருயிர்க் கணவரும், காலஞ்சென்ற இரத்திபூபதி, தில்லைநடேசன் ஆகியோரின் நேசமிகு சகோதரனும், ஞானாம்பிகை (ஓய்வுபெற்ற ஆசிரியர்), காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை, இலட்சுமிப்பிள்ளை, குமாரவேலு, முத்தையா, சிவகுரு, கனகலிங்கம் ஆகியோரின் மைத்துனரும், ஜெகதீசன் (பரிஸ்), ரோகினி (ஆசிரியை-மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி), ஜெயக்குமார் (அமெரிக்கா), ஜெயபாலன் (மொன்றியல்-கனடா), ஜெயபரன் (கனடா), சித்திரா (கனடா) ஆகியோரின் அருமைத் தந்தையும், சரோஜினிதேவி, பரம்சோதி, துஷ்யந்தி, புனிதமலர், அன்பரசி, முருகதாசன் ஆகியோரின் பாசமிகு மாமனும், முருகதாஸின் பெரியப்பாவும், காலஞ்சென்றவர்களான நமசிவாய சேயோன், குகநேசன் மற்றும் கனேசன், [illegible] னேசன், பவானி, ஜெயந்தி, வல்லவை கஜேந்திரா, ஆத்சந்திரா, [illegible] ஆகியோரின் மாமனும், பிரசாந்தி, கஜேந்திரன், பிரிந்தன், [illegible], தர்சிகா, யதுசன், விதுசன், கார்த்திகன், மதுரிகன், தீபிகா, [illegible] சன், ஜெயராம், மிதுரன், மிதுரா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் யாவும் இன்று (08.02.2015) ஞாயிற்றுக்கிழமை CHAPEL RIDGE, FUNERAL HOME, 8911 [illegible] BINE AVENUE, MARKHAM ONTARIO, CANADA வில் நடை[illegible]

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(C/19566) (10)




# பயிற்சி ஆட்டம் இன்று ஆரம்பம்

## ஆஸி - இந்தியா பலப்பரீட்சை

பதினொராவது உலகக் கிண்ணத் தொடரின் முதலாவது பயிற்சி ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது. இதில் நடப்புச் சம்பியன் இந்தியாவும், ஆட்டத்தை நடத்தும் ஆஸ்திரேலிய அணியும் மோதிக் கொள்ளவுள்ளன. இலங்கை நேரப்படி காலை 9 மணிக்கு, ஆஸ்திரேலியாவின் அடிலெய்ட்டில் ஆட்டம் இடம்பெறவுள்ளது. ஆஸ்திரேலியாவுடனான டெஸ்ட் தொடர் தோல்வி அதன் பின்னரான ஆஸி., இங்கிலாந்து உடனான முத்தரப்பு தோல்வி என்று தொடர் தோல்விகளால் துவண்டிருந்த இந்திய அணி எழுச்சி பெறுமா என்பது இன்று தெரியவரும்.

**விற்றுத் தீர்ந்த நுழைவுச் சீட்டு**

இன்று அடிலெய்டில் நடைபெறும் இந்திய – ஆஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தின் அனைத்து நுழைவுச் சீட்டுக்களும் விற்றுத் தீர்ந்துள்ளன. அதேபோல் பாகிஸ்தான் – பங்களாதேஷ் அணிகளுக்கு இடையே சிட்னியில் நாளை நடைபெறும் ஆட்டத்துக்கான நுழைவுச் சீட்டுக்களும் விற்றுத் தீர்ந்தன. நுழைவுச் சீட்டுக்கள் இல்லாமல் வருபவர்களுக்கு அனுமதி இல்லை என்று ஐ.சி.சி. கூறியுள்ளது. (5–ரி)

# அனுபவமானது இலங்கை அசைக்கவே முடியாது

## டிராவிட் - ஸ்மித்

உலகக் கிண்ணத் தொடரில் அனுபவம் மிக்க – சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தக்கூடிய வீரர்களுடன் இலங்கையணி களமிறங்கும். இது இலங்கைக்கு பெரும் பலம் என்று புகழாரம் சூட்டியுள்ளனர், இந்திய மற்றும் தென்னாபிரிக்க அணிகளின் முன்னாள் அணித் தலைவர்கள். உலகக் கிண்ணம் தொடர்பான முன்னோட்ட நிகழ்ச்சியில் கலந்து கொண்ட இந்திய அணியின் முன்னாள் அணித் தலைவர் டிராவிட், தென்னாபிரிக்க அணியின் முன்னாள் தலைவர் கிரேம் ஸ்மித் ஆகியோரே மேற்கண்டவாறு இலங்கை அணிக்கு புகழாராம் சூட்டியுள்ளனர்.

உலகக் கிண்ணத் தொடருக்குத் தெரிவாகியுள்ள இலங்கை அணி மற்றும் இலங்கை அணி வீரர்கள் தொடர்பில் கருத்து தெரிவித்த டிராவிட் துடுப்பாட்டம் மற்றும் பந்துவீச்சில் சம நிலையை வெளிப்படுத்தக்கூடிய வகையில் வீரர்கள் தெரிவாகியிருப்பதாகவும் இந்த அணியில் பல அனுபவ வீரர்கள் இடம்பெற்றுள்ளதாகவும் தெரிவித்தார்.

குறிப்பாகத் துடுப்பாட்டத்தில் மின்னும் குமார் சங்ககாரா, மஹேல ஜெயவர்த்தன, திலகரட்ண டில்ஷான் ஆகிய முன்னணி வீரர்களும் பந்துவீச்சில் மின்னும் ஹேரத், குலசேகர அணியில் இடம்பெற்றுள்ளமை சிறப்பானதாக அமையும் எனத் தெரிவித்துள்ளார். (5–ரி)



# அச்சுறுத்தும் ஆட்டநிர்ணயம்

International Cricket Council

'மட்ச்–பிக்சிங்', 'ஸ்பொட்–பிக்சிங்' அச்சுறுத்தல் மிகுந்த கிரிக்கெட் ஆட்டத்தில், 'பிட்ச் சைடிங்' என்ற புதிய மோசடி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

'பிட்ச் சைட்டிங்' என்றால் என்ன ?

பொதுவாக மைதானத்தில் ஆட்டம் நடக்கும். அதனை நேரடி ஒளிபரப்பு செய்வார்கள். நேரடி ஒளிபரப்புக்கும் – களத்தில் நடக்கும் ஆட்டத்துக்கும் இடையில் 15 செக்கன்கள் வித்தியாசம் இருக்கும். இந்தக் குறுகிய நேர அவகாசத்தைச் சூதாட்ட தரகர்கள் பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர்.

**எப்படிப் பிடிபட்டது ?**

கடந்த சில தினங்களுக்கு முன்னர் நியூஸிலாந்து – பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான முதல் ஒரு நாள் ஆட்டம் நடந்தது. உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் நடக்கப் போகும் நியூஸிலாந்தில் இந்த ஆட்டம் நடந்தது. இதன் போது இத்தகைய 'பிட்ச் சைடிங்' மோசடி செய்து கொண்டிருந்த நபர் அகப்பட்டுள்ளார். தொலைபேசியூடாகத் தொடர்பு கொண்டு அவர் சூதாட்டத்தில் ஈடுபட்டபோது மாட்டிக் கொண்டுள்ளார்.

இவரைக் காட்டிக் கொடுத்தது அங்குள்ள கமராக்கள். குறித்த நபரின் நடவடிக்கையை ஆட்டக் கண்காணிப்பாளர்கள் அவதானித்துக் கொண்டிருந்தனர். அவரது நடத்தையில் சந்தேகம் கொண்ட அதிகாரிகள் ஒரு கட்டத்தில் அவரை விசாரணைக்கு உட்படுத்தினர். இதன்போது அவர் 'பிட்ச் சைடிங்'கின் முழு விடயத்தையும் அவிழ்த்து விட்டுள்ளார்.

**உஷாராகிய அதிகாரிகள்**

உலகக் கிண்ணத் தொடர் இடம்பெறும் நாட்டில் அதுவும் உலகக் கிண்ணத் தொடர் ஆரம்பிப்பதற்கு சில தினங்களுக்கு முன்னராகவே இவ்வாறான விடயம் இடம்பெற்றது ஐ.சி.சி. அதிகாரிகளின் புருவத்தை உயர்த்தியுள்ளது. இதனையடுத்து கண்காணிப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளனர். உலகக் கிண்ணத் தொடர் இடம்பெறும் ஆஸ்திரேலியா – நியூஸிலாந்து நாடுகளில் சகல ஆட்டங்களிலும் ...கர்களை நோக்கியும் கமராக்கள் ...ம்பவுள்ளன. இதன் மூலம் 'பிட்ச் ...டிங்' கண்டுபிடித்துத் தடுக்கலாம் என்று அதிகாரிகள் திட்டமிட்டுள்ளனர். (5–ரி)

# ஆஸியை நம்பிய இந்திய ஆபிரிக்க அணிகள்

உலகக் கிண்ணத் தொடரில் இந்திய அணியின் வேகப் பந்துவீச்சு ஆலோசகராக ஆஸ்திரேலியாவின் புயல் வேகப் பந்துவீச்சாளர் பிரட்லீயும், தென்னாபிரிக்க அணியின் துடுப்பாட்ட ஆலோசகராக ஆஸ்திரேலியாவின் மாஸ்டர் என்று அழைக்கப்படும் மைக் ஹஸியும் செயற்படவுள்ளனர். ஹஸி மற்றும் லீயின் முகாமையாளர்கள் இந்தத் தகவலை உறுதி செய்துள்ளனர்.

ஆஸ்திரேலிய ஆடுகளங்களில் இந்தியப் பந்து வீச்சாளர்கள் தொடர்ச்சியாக சொதப்பி வருகின்றனர். இந்த நிலையில் இந்தியப் பந்து வீச்சாளர்களின் பயிற்சியாளராக ஆஸ்திரேலிய வீரரான லீ நியமிக்கப்பட்டுள்ளார். "இந்திய பந்துவீச்சாளர்களுக்கு ஆஸ்திரேலிய ஆடுகளங்களின் நுட்பங்களைக் கற்றுக் கொடுக்க தயாராக உள்ளேன். ஆனால் உலகக் கிண்ணம் நிறைவடையும் வரை மட்டுமே இந்தப் பணியை என்னால் தொடர முடியும்" – எனத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (5–ரி)





## மரண அறிவித்தல்



### திருமதி அன்னக்கண்டு ஐயாத்துரை

மாதகல் வேலுப்பிள்ளை கடையடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னக்கண்டு ஐயாத்துரை நேற்று (07.02.2015) சனிக்கிழமை கால மானார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயாத்துரையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான முருகேசு - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான திரு.திருமதி வேலுப் பிள்ளை தம்பதியின் அன்பு மருமகளும், குணமணி தேவி, சிவஞானம் (கொழும்பு), சிவநேசன் (ஜொனெக்ஸ் மல்ரி பலஸ்), சிவபாலன் (பொன்னரசி நகையகம்), காலஞ்சென்ற சிவநாதன் மற்றும் சரோஜினிதேவி (நோர்வே), சிவதாசன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம், நாகரத்தினம் ஆகியோரின் சிறியதாயும், காலஞ்சென்றவர்களான குலசேகரம் பிள்ளை, அப்புலிங்கம், நவகோடிலிங்கம் மற்றும் செல்லக்கண்டு ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான சிவானந்தன், விமலாதேவி மற்றும் காங்கேசமூர்த்தி, ஜெயலட்சுமி, தங்கமலர், விஜயகுமாரி, லோகநாதன், விஜிதா ஆகியோரின் அன்பு மாமியும் விமல்ராஜ், மோகன்ராஜ், திருக்குமரன், திருக்கரன், சுந்தர்ராஜ், தனலட்சுமி, மணிவண்ணன், மணி மாறன், சுபதினி, சிவதர்சனா, சிவதர்சிகா, அனேஸ்குமார், தேவகி, தெய்வச்சந் திரன், தேனுகா, சபார்தினி, சாரங்கன், சாருஜன், அனிஷான், விவிதா, அபிஷாலினி, அவிலாஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.02.2015) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மாதகல் இந்து மைதானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்,
தொ.பே. 077 247 3938,
077 854 6303,
077 706 6427

வேலுப்பிள்ளை கடையடி,
மாதகல். (56578) (45.3.7)


நாம் 12% வரை குறைத்துள்ளோம்
உங்கள் கனவு இல்லங்களின் செலவை



சகல கட்டட நிர்மாண வேலைகளுக்கும்
Green Asia Builder Jaffna.
HOT LINE 077 349 7692 (56389)(4.3.7)



உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111



**German Institute**

German, Swiss நாடுகளுக்கான Deutsch மொழி வகுப்புகள். தமிழ் மொழிபெயர்ப்புடன் நடைபெறுகின்றது. .
முகவரி:- ஆரியகுளத்தடி, யாழ்ப்பாணம்.
Mrs P.Kajenthini - T.P 077 160 4823



Feb 14,15 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள
SLAS (Lim)
போட்டிப்பரீட்சை விசேட கருத்தரங்கு

காலம்: 2015.02.12 வியாழன்
2015.02.13 வெள்ளி
நேரம்: மு.ப 8.30 - பி.ப 3.30
விரிவுரை: P. உமாசங்கர் & P.கமலதாசன்
உட்பட கணக்காளர் சேவை,
நிர்வாக அலுவலர், தமிழ்
விரிவுரையாளர்கள்.
விடயம்: 4 வருடங்களின் புதிய பரீட்சை
வினாத்தாள் புள்ளியிடல் திட்டங்கள்,
சிங்கள மொழிமூல வினாத்தாள்,
எதிர்பார்க்கை வினாத்தாள்.

கட்டணம்: 2000 ரூபா.
தொடர்பு: 0718130390
0775265344
0112363060



**ALL OUT**
Pest Control Service



கறையான் தொல்லையா?
உங்கள் கட்டடங்களை
உத்தரவாதத்துடன்
பாதுகாத்துக் கொடுக்க
நாங்கள்
இருக்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
ந. ரூபகாந்த்
077 151 5897, 021 499 3200



**இந்திய சாஸ்திரியார் வருகை**

யாழ்ப்பாணப் புண்ணிய பூமிக்கு மீண்டும் வருகை தந்துள்ளார்.
ஓம் சக்தி அருள் வாக்குப் பெற்ற
பரம்பரை ஜோதிடர்
S.Nகுமாரசாமி

கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத்தடை, கல்வித்தடையா, குழந்தைப் பாக்கியம் மற்றும் புதிய தொழில் தொடங்க வேண்டுமா? தொழிலில் முன்னேற்றம் இல்லையா, குடும்பப் பிரச்சினையா, வெளிநாடு செல்லத் தடையா? மன உளைச்சலா? எந்தப் பிரச்சினைக்கும் நேரில் சந்திக்கவும்.

காலை 9 மணி முதல்
மாலை 5.00 மணி வரை.
இல.97/8, கன்னாகி அம்மன் கோவில் ஒழுங்கை,
கோப்பாய் வீதி, உரும்பிராய், யாழ்ப்பாணம்.
(உரும்பிராய் சந்திக்கு அருகில்) (56509) (4.3.6)
T.P: 072 681 6681, 072 681 6691


## ஊரெழு றோயல், சென்.மேரிஸ் இறுதியாட்டத்தில் பலப்பரீட்சை

ஊரெழு றோயல்



நாவாந் துறை சென்.மேரிஸ்



யாழ்ப்பாணம், பெப். 8

யாழ் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் உரும்பிராய் சென்.மைக்கல் விளையாட்டுக்கழகம் நடத்தும் சென். மைக்கல் வெற்றிக்கிண்ணத்துக்கான தொடரின் இறுதியாட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு உரம்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தஇறுதியாட்டத்தில்ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நாவாந் துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக உரும்பிராய் சென். மைக்கல் ஆலயத்தின் பங்குத் தந்தையான அருட் தந்தை யூட் நிக்சன் அடிகளார் கலந்து கொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினர்களாகக் கோப்பாய் பொலிஸ் பொறுப்பதிகாரி சஜீவ ஜெயகொடியும், யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் அன்ரனிப்பிள்ளை, செயலாளர் அஜித்குமார் ஆகியோரும், யாழ் உதை பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தின் உப தலைவர் சுரேந்திரன், யாழ். உதைபந்தாட்ட லீக்கின் பெருளாளர் தவஸ்கந்தன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (த-23-சி)


**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**
BCHS
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய
நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்

**Spoken English with Grammar** 1 1/2 Months
(ஆங்கிலத்தில் பேசுவதற்கு 100% உத்தரவாதம்) (Quick Learning course)

**Diploma in English** 2 1/2 Months

* எமது கற்கை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
* O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
* Excellent Teachers' Panel & Individual Attention

Batch 1 : 09-02-2015
Batch 2 : 11-02-2015
Batch 3 : 12-02-2015
Batch 4 : 14-02-2015

No.15 1/2, Siriampiyady Lane,
(Above Sathosa SM)
Jaffna. Tel :021-2224550
Hotlines
0777585913, 0777222422, 071429935

கிழமை நாட்கள் மற்றும் சனி, ஞாயிறு வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன.
அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் தங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்



**GAMA ABACUS**
பகுதி நேர ஆசிரியைகள் மற்றும் முகவர்கள் தேவை

Gama Abacus Academy

இந்தியா கேரளாவினை தலைமையலுவலகமாக கொண்டு உலகளாவிய ரீதியில் காமா அபாகஸ் பயிற்சியினை அளித்து வரும் எமது நிறுவனத்திற்கு யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய பிரதேசங்களில் இருந்து பகுதி நேர ஆசிரியர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அடிப்படை தகுதி கா.பொ.த உயர்தர சித்தி. பாடசாலை விட்டு விலகியோர் வீட்டு மனையாட்கள் மற்றும் பாடசாலை ஆசிரியர்களும் விண்ணப்பிக்கலாம். பயிற்சியின் பின் உங்கள் பிரதேசங்களிலேயே வேலை வாய்ப்பு வழங்கப்படும். சகல பிரதேசங்களில் இருந்தும் முகவர்களும் வேண்டப்படுகின்றார்கள்.

பிராந்திய அலுவலகம் : இல 401, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம், 0777585969.
கிளிநொச்சி 0777906383, வவுனியா 024 222 5234, மன்னார் 0778586256, முல்லை 0767585920
H.O West Fort, Thrissur, Kerala, India Tel:- 00914872384340, 3290908, Mob : 9061111211, Web. www.gamaabacus.com
Sri Lankan Office: No: 76,Vivekanantha Hill, Colombo 06, Ph.0771999950, Email info@gamaabacus.com.

எமது பயிற்சி
+ அபாகஸ்
+ மனக்கணிதம்
+ நினைவு நுட்பம்
+ கையால் எழுதும் கலை
+ ஆளுமைவிருத்திக்கலை
+ வேத கணிதம்
+ வேகக்கணிதம்
+ வானவில் அபாகஸ்

உங்கள் பிரதேசத்தில் பயிற்சியை ஆரம்பிக்க விரும்பின் உடனடியாகத் தொடர்பு கொள்ளுங்கள்.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 08.02.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.